


கல்கி
KALKI
5.7.1964
30 காசு



சந்தேகமன்னியில் சுதேசி
என்றென்றும் வனப்பானது!

மபத்லால் க்ரூப்

2x2 ஃபுள் வாயில்கள்

லெனேக்கள்

நியு ஷொக் (ஷொக்) அஹமதாபாத் • நியு ஷொக், நடியாத் • ஸ்டேண்டர்ட், பம்பாய்
ஸ்டேண்டர்ட், (நியு சைனா) பம்பாய் • ஸ்டேண்டர்ட், தேவாஸ் • ஸாஸூன், பம்பாய்
ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய் • ஸூரத் காட்டன், ஸூரத் • மபத்லால் பைன்,
கல்யாண்.

Aiyars MGV, 464 TM A

கல்கி


பொருளடக்கம்


குரோதி, ஆனி 22 ● ஜூலை 5



மூஷிகர்: நந்தா எல்லோருடைய குற்றச்சாட்டுகளையும் குறைகளையும் கேட்கிறாராம். காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளிலுள்ள தவறுகளை யாரிடம் சென்று முறையிடுவது?

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


இது பூச்சி மருந்தல்ல,
பயிரையே
அழித்துவிடும்
உற்பத்தி


என் வார்த்தைதான்
சட்டம்,
உன்னுடையதல்ல



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 49

புதிய வாய்ப்புக்கள்

ராஜாஜி

ஐந்து வருஷங்களுக்கு முன்பு பம்பாயில் சுதந்திரக் கட்சியின் முதல் மகா நாட்டைத் தொடங்கி வைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அப்போது சொன்னேன், இது சாமானியமான ஓர் அரசியல் கட்சி அல்ல, ஒரு விடுதலை இயக்கமே என்று. இது யதார்த்த நிலையை நன்றாக ஆராய்ந்து பார்த்து உண்மை உணர்வோடு சொன்ன வார்த்தை. இன்றைக்கும் அது உண்மையாக இருக்கிறது. ஆளும் கட்சியை இன்று எதிர்த்துவிட்டு நாளைக்கே அதில் கரைந்துபோகிற சாதாரண அரசியல் கட்சியை நாம் நடத்தவில்லை. ஒரு மகத்தான சுதந்திர இயக்கத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறோம்.

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் என்னை இளைஞன் என்று சொல்ல முடியாது. அப்போதே எனக்கு நாற்பது பிராயத்துக்கு மேலாகிவிட்டது. சுமார் இருபது ஆண்டுகள் வக்கீலாகத் தொழில் செய்தேன். பன்னிரண்டு ஆண்டுகள் காங்கிரஸ் 'ஹோம் ரூல்' இயக்கங்களைத் தீவிரமாக ஆதரித்து வந்தேன். அதன்பின் மகாத்மா காந்தி அவர்களின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தேன். அவருக்குக் கீழும், அவரோடும் பணி செய்யத் தொடங்கினேன். இதன்மூலம் புகழ் எடுக்கலாம் என்றோ அதிகாரம் பெறலாம் என்றோ நான் இம்மியும் எண்ணியதில்லை.

இன்றைக்கு அன்றுபோல் சுமார் இருமடங்கு வயதாகிறது. அப்போது நான் சேர்ந்திருந்த அதே காங்கிரஸ் கட்சி இந்த மாபெரும் நாட்டை ஆட்சி புரிவதில் தவறான திசையில் செல்வதாக நான் கண்டதால் மீண்டும் ஓர் எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறேன். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை கோரியது போலவே, தனி மனிதர்களின் விடுதலை வாழ்வுக்காகப் போராடத் தேவை நேர்ந்துவிட்டது என்று ஐந்தாண்டுகளுக்கு முன் உணர்ந்தேன். அரசாங்கத்தின் தவறான போக்கினால் தனிமனிதர்களின் சுதந்திரம் நாசமாகி, சர்க்கார் பூதம் சர்வ வல்லமை பெற்றுவிடும் என்று பயந்தேன். இதைச் சக்தியுடன் எதிர்க்க ஓர் இயக்கம் அவசியம் என எண்ணினேன். அந்த முடிவு மிகவும் சரியானதே என்று இன்றும் கருதுகிறேன். மக்களின் பகுத்தறிவை நம்பாமல் நாட்டு வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அகம்பாவத்துடன் தலையிடும் சர்க்கார் ஒரு ராட்சத சக்தியாகி விட்டது என்று அப்போது சொன்னேன். உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியோரைச் சுயநலக்காரர்களாகக் கருதி, தேசத்தின் விஸ்தாரமான உற்பத்தி—விநியோகத் துறையில் புகுந்து கட்டுப்படுத்தும் சர்க்கார், இதை ஒட்டி சிப்பந்திப் பட்டாளத்தைப் பெருக்கி வருவதையும் இதனால் ஏற்படும் ஏராளமான நிர்வாகச் செலவை ஈடு செய்வதற்காகப் புதுப் புது வரிகளை விதித்து மக்களை வரிச்சுமையால் நசுக்கி வருவதையும் அன்று கண்டித்துப் பேசினேன். அதெல்லாம் இன்று அன்றைவிட உண்மையாக இருக்கின்றன. ஆனாலும் ஆளும் கட்சியானது பிரசார மந்திரங்களைக் கோஷித்து மக்களை வசியம் செய்து வருகிறது.

தங்களுக்கு எது நன்மை என்பது மக்களுக்குத் தெரியவே தெரியாது என்கிற அடிப்படையில் ஆட்சி நடக்கிறது. தன் சக்திக்குச் சற்றும் இயலாத பெரிய காரியங்களைச் செய்யப் போவதாக மக்களுக்கு வாக்குறுதி தந்திருக்கிறது அரசாங்கம். இவற்றை நிறை

வெற்ற முடியாமல் போகும்போது, அரசாங்கத்தின் அபிமானிகள் மேலும் கட்டுப்பாடும், கன்ட்ரோலும் விதித்தால் நல்ல விளைவு ஏற்படும் என்று தூண்டுகிறார்கள். அஸ்திவாரம், மேலே எழும்பியுள்ள கட்டுமானம் இரண்டிலும் தவறாக உருவான கொள்கையின் விளைவாக மக்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பல ஏமாற்றங்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.

'சோஷலிஸம்' என்கிற பெயரில் ஆள்கிற கட்சி மக்கள் எல்லோர் மீதும், அவர்களுடைய எல்லாத் தொழில்களின் மீதும் ஆதிக்கம் பெற்று விட்டதால் அதற்கு எதிராக எந்தக் கட்சியும் வளர முடியவில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன் அன்றைய சர்க்கார் அடர்னி ஜெனரல், பிரபல நீதிக்ஞர் சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டித்து, மக்கள் அசிரத்தையாகவும் மௌனமாகவும் இருப்பதைக் குறை கூறினார். இன்னும் நிலைமை மாறவில்லை. ஆட்சியாளர்கள் தங்கள் போக்கில் மேலும் நன்றாகப் பழகி விட்டார்கள்; மக்கள் அதற்கு மேன்மேலும் இடம் தந்து விட்டார்கள். நிலைமை வலுத்துவிட்டது. முன்பு உத்தியோகஸ்தர்கள் ஆளும் கட்சியின் செல்வாக்கை எதிர்க்கத் தைரியமற்று இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கட்சியின் செல்வாக்குத்தான் இயல்பான ஆட்சிமுறை என்று எண்ணும் நிலைக்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். நிர்வாகத்தை விட்டு நீதி வெளியேறி விட்டது. அதன் இடத்தில் கட்சி உபத்திரவம் புகுந்துவிட்டது.

ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்களின் மறைவில் நாம் ஒரு சக்தி வாய்ந்த தலைவரை, மாற்றுக்கருத்துக்களை மதித்துப் பார்க்கக் கூடிய ஒரு தலைவரை இழந்துவிட்டோம். இன்று அவ்வளவு சக்தியோ, தங்கள் 'பாரம்பரி'யத்துக்கு மாறான கருத்தை ஏற்கும் திறனோ இல்லாதவர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். கரு மேகங்களுக்குப் பின்புறம் ஒரு வெள்ளி இழை ஓடுவது தெரிகிறது. தெய்வமாகப் பாவிக்கப் பட்டு அந்தப் பிரபையில் ஜொலிக்காத தலைவர்கள் — மக்களின் இணக்கத்தைப் பெற்றுக் காரியங்களை நடத்தக்கூடியவர்கள் — ஆட்சியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பதால் இப்போது ஜனநாயகத்துக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. விவேகமுடன் செயலாற்றும் எதிர்க்கட்சிகள் முன்னேற ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதற்கு மக்களின் ஆதரவுதான் அத்தியாவசியம். மக்கள் முன்னைவிட மனத்தெளிவு பெற்று ஆதரவு காட்டும் வாய்ப்பு இருக்கிறது.

இது வெறும் வெள்ளி இழைமட்டுமல்ல. நன்னம்பிக்கையைத் தோற்றுவிக்கும் ஒரு புது சூழ்நிலை உண்டாகியுள்ளது. ஊக்கமும், நேர்மையான உழைப்பும் நம்மைக் கைவிடாதிருந்தால் நன்மைகள் பல விளையும். ஆளும் கட்சிக் கொள்கைகளை எதிர்த்தவர்களும், எதிர்ப்பவர்களும் இந்த நல்ல வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தீரத்துடனும், நேர்மையுடனும், வெற்றியில் நம்பிக்கையுடனும் பணியைத் தொடங்கவும், தொடங்கிய பணியைத் தொடரவும் வேண்டும். எதிர்க்கட்சி ஆளும் கட்சியாகிச் சர்க்கார் அமைக்கும் பிரச்னை ஒருபுறமிருக்கட்டும். எதிர்க் கட்சியாக அது செயலாற்றும் போதே நல்ல வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன. நம்முடைய புதிய பிரதமர் நல்யோசனைகளையும், நல்லெண்ணத்துடன் எடுத்துக்காட்டப்படும் குற்றம் குறைகளையும் ஒதுக்கமாட்டார் என்பது என்னுடைய நம்பிக்கை. எதிர்க்கட்சியிலுள்ள நாம் சுய முன்னேற்றத்துக்கு ஆசைப்படாமல் உண்மையான தேசத் தொண்டர்களாக இருந்தோமானால் நிகழ் காலச் சூழ்நிலையைக் கொண்டே திருப்திப்படலாம். ஜவாஹர் அவர்களின் திடீர் மறைவினால் ஏற்பட்ட சோகத்திலிருந்து நாடு இன்னமும் மீளவில்லை. ஆனபோதிலும், துன்பமோ நஷ்டமோ நேரும்போது அதற்கு ஈடாக நல்ல வாய்ப்புக்களை வழங்க ஆண்டவன் மறக்கமாட்டான் என்பதை உணர்வோமாக!

உணவு மந்திரிக்கு வாழ்த்துக்கள்

உணவுத்துறையில் சர்க்கார் ஏகபோக்கிய முதலாளியாகி விடக்கூடும் என்று அஞ்சிச் சென்ற இதழில் தலையங்கம் எழுதியிருந்தோம். அதிருஷ்டவசமாக அத்தகைய தீவிரமான நடவடிக்கைகளில் சர்க்கார் உடனடியாக இறங்கவில்லை. தனி வியாபாரிகளைப் போலவே தானும் போட்டியிடச் சர்க்கார் முன்வந்திருக்கிறது — தனி வியாபாரிகளை அழித்துத் தானே பெரும் முதலாளியாகத் திட்டமிடவில்லை. இது மிகவும் ஆறுதலான, திருப்திகரமான விஷயம். சுதந்திரக் கட்சி எல்லாத் துறைகளிலுமே இதைத்தான் கோரி வருகிறது.

ஆளும் கட்சிக்காரர்கள்—முக்கியமாக ராஜ்ய மந்திரிகள்—புதிதாக உருவாகும்

மத்திய உணவு கார்ப்பொரேஷனைத் தங்கள் கட்சியின் கிளையாக நினைத்துத் துஷ்பிரயோகம் செய்யாதபடி காப்புத் தந்தால் மக்களுக்கு நிச்சயமாக நன்மை கிட்டும்.

இது மொத்த வியாபார விஷயம். சில்லறை வியாபாரத்திலும் சர்க்கார் தனியாருடன் நேர்மையான முறையில் போட்டியாகச் செயல்பட வேண்டும். இதுவே மிகவும் முக்கியமான விஷயம். இதில் சர்க்கார் ஏகபோகத்தை உண்டாக்கினாலோ, அளவுக்கு மீறி அடக்குமுறை செய்தாலோ திட்டம் படுதோல்வியாகி விடும். ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்கள் எந்தக் கோஷ்டியின் செல்வாக்குக்கும் அடங்காமல், தமது சத்தியமான கருத்துக்கேற்ப நடந்து கொண்டு அரசாங்க ஊழியர்களைத் தனியாருடன் நியாயமாகப் போட்டியிடும் முறையிலேயே கண்டிப்புடன் இயக்க வேண்டும். கார்ப்பொரேஷனின் சில்லறை வியாபார நியாய விலைக் கடைகளில் விற்கும் அரிசி தரமானதாக இருத்தல்வேண்டும். தனியார் கடைகளில் போலவே சுறுசுறுப்புடனும் மரியாதையுடனும் விற்பனையை நடத்த வேண்டும். வழக்கம்போல் குமாஸ்தா சேவையை நிறுவாமல், இந்தத் துறையில் அநுபவம் உள்ளவர்களை நியமிக்க வேண்டும்.

ஒரு பெரிய சீரிய திட்டத்தைப் புது உணவு மந்திரி தொடங்கியிருக்கிறார். சகாக்களின் சவாலை ஏற்றுத் தமது திறமைக்கும், ஆர்வத்துக்கும் தக்க திட்டத்தைத் தொடங்கியுள்ள அவர் வெற்றி காண வாழ்த்துகிறோம்.

ராஷ்டிரபதி கைவிட்டு விட்டார்!

சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்பது பழமொழி. உற்பத்தியானால்தான் விநியோகம் நடைபெற முடியும். உணவு தானிய விநியோக விஷயமாக எவ்வளவுதான் செய்தாலும் உற்பத்தியைப் பெருக்காத வரையில் பிரச்னை முற்றிலும் தீர்ந்ததாக ஆகாது. ஆனால் உற்பத்தியைப் பாதிக்கும் நிலச் சட்டங்களே ஒன்றன்பின் ஒன்றாக இயற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் பதினேழாவது மாற்றம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டபோது நாட்டு நலனில் உண்மையான அக்கறை கொண்ட விவேகிகள் கதிகலங்கினார்கள். கடைசி ஆதாரமாக ராஷ்டிரபதி அவர்களை நம்பினார்கள். ராஷ்டிரபதி அவர்கள் சட்டத்துக்கு அங்கீகாரம் அளிக்காதிருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். சில பெருமக்கள் அவருக்கே விண்ணப்பம் விடுத்தார்கள்.

மற்றச் சட்டங்களைக் காட்டிலும் இந்தச் சட்டத்தில் ராஷ்டிரபதியின் அங்கீகாரத்துக்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது. ஏனெனில், 1951ம் ஆண்டில் அரசியல் சாஸன முதல் திருத்தத்தை மக்கள் சபையில் கொண்டு வந்த அந்நாள் மந்திரி டாக்டர் அம்பேத்கார் அவர்கள், **'இந்தச் சட்டம் ரயத்துவாரி 'டெனண்ட்'கள்** ('டெனண்ட்' என்பது ரயத்துவாரியைப் பொறுத்தமட்டில் உரிமையாளரைத்தான் குறிக்கும் —**ஆசிரியர்**) **விஷயத்தில் அமுலாகாது. பிற்பாடு அப்படி அமுலாக்க இதே சபை கருதினாலும், இப்போது கொடுக்கப்பட்டுள்ள இந்த வாக்குறுதியைக்காக்கும் பொறுப்பு ராஷ்டிரபதி அவர்களைக் கட்டுப்படுத்தும்'*** என்று பிரதிக்ஞை அளித்திருந்தார். இதை ஒட்டியே, கடைசிமுயற்சியாக ராஷ்டிரபதி அவர்களை நாம் நம்பியிருந்தோம். ஆனால் அவர் சட்ட மாற்றத்துக்கு ஒப்புதல் அளித்து விட்டார்!

நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால் அரசியல் சாஸனத்தையே மாற்ற வேண்டும் எனச் சர்க்கார் கருதுகிறது. அவ்வாறெனில் சாஸனம் செய்த பேரறிஞர்களும், அதனை ஏற்றுக் கொண்ட அன்றைய விஷயஞானமுள்ள அரசியல் நிர்ணய சபையும் பொதுமக்கள் நலனைக் கருத்தில் கொள்ளவில்லையா — சாஸனம் மக்களுக்கு அளித்துள்ள ஜீவாதார உரிமைகளைச் சிதைக்காமல் நிலச் சீர்திருத்தம் செய்ய முடியாதா — என்பதே கேள்வி. இந்தக் கேள்விக்குக் காங்கிரஸாரின் அந்தராத்மாவே விடைகூறும். சாஸனச் சட்டத்துக்கு உட்பட்டே நாட்டில் நியாயமான நிலச்சீர்திருத்தம் செய்து சுபிட்சம் காண முடியும்; ஆனால் நிகழ்கால ஆட்சியாளருக்கு அவ்வாறுசட்டத்

---

* "There is no intention on the part of Government that provisions contained in article 31 (A) are to be employed for the purpose of dispossessing ryotwari tenants . . . I believe that whenever any such measure comes before Parliament for consideration, the undertaking given in this House would be binding upon the President in giving his sanction so far as any such measure is concerned". (Parliamentary Debates, Vol. XII, Part II c.c. 9913-14)

துக்குஉட்பட்டு நாட்டை முன்னேற்றும் திறமைஇல்லை. ஆட்சியாளரால் சட்டத்துக்குக் கட்டுப்படமுடியவில்லை என்றால் அதைவிட விபரீதம் வேறு கிடையாது. சட்டத்தைத் தங்கள்இஷ்டப்படி மாற்றினால்தான் தங்களால் ஆளமுடியும்என்று கூறுபவர்களின் ஆட்சியை யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. நேர் கோணங்கள் 90 டிகிரி அல்ல, 60 டிகிரி என்று வைத்துக் கொண்டால்தான் தம்மால் பாடம் போதிக்க முடியும் என்று கூறும் கணித ஆசிரியரை நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? குற்றச் சட்டத்தை ரத்து செய்தால்தான் தம்மால் திறம்படப் பணி புரிய முடியும் என்று கூறும் போலீஸ் இன்ஸ்பெக்டரை நாம் ஒப்புக் கொள்வோமா ?

விஷயம் மிகவும் எளிமையானது, தெளிவானது. நாட்டில் அபிவிருத்தி பெருகவும், உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சொந்தக்காரர், குத்தகைதாரர், தொழிலாளி முதலிய யாவரும் இன்பமாக வாழவும்தான் நிலச்சீர்திருத்தம் தேவை. சொந்தக்காரர்களை வதைக்காமலே இதை நிச்சயமாகச் செய்ய முடியும். ஆனபடியால் சித்தாந்தங்கள் பேசிப் பயனில்லை. நிலங்களை யெல்லாம் சர்க்கார் உடைமையாக்கி, தனிச் சொந்தக்காரர்களின் இடத்தில் சர்க்கார் சிப்பந்திகளை வைத்து நிர்வகிக்கப் பார்ப்பது இயலாத காரியம், நிலச் சீர்திருத்தமல்ல; பறிமுதல் திட்டத்தை நிரந்தரமாக்குவது நிலச் சீர்திருத்தமல்ல; நிலச் சொத்துரிமை என்பது சர்க்காருக்கும் தொழிலாளிக்கும் மத்தியிலுள்ள ஒரு தரகரின் நிலை என்று வியாக்கியானம் செய்வது நிலச்சீர்திருத்தமல்ல; நல்ல முதலீடு செய்யக்கூடிய பெரிய நிலங்களைத் துண்டு துண்டாக்கி, முதலீடு செய்யக் கூடியவர்களை யெல்லாம் நிலத்திலிருந்து விரட்டுவது நிலச் சீர்திருத்தமல்ல; உணவு உற்பத்தியைக் குறைத்து, பட்டணக் கரையில் பஞ்ச நிலையை உண்டாக்குகிற ஏற்பாடு ஒருகாலும் நிலச்சீர்திருத்தம் அல்ல; எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியல் சாஸனத்தின் மூன்றாவது பாகமும் நான்காவது பாகமும் ஒன்றுக்கொன்று முரண் என்று வைத்துக்கொண்டு மூன்றாவது பாகத்தைச் சிதைப்பது அறிவீனமேயன்றிச் சீர்திருத்தமல்ல.

சாஸனத்துக்கு இணங்கியே உற்பத்தியைப் பெருக்கும் முறையில் சீர்திருத்தங்கள் செய்யக்கூடிய கட்சியும் இருக்கிறது. ஆனபடியால், சட்டத்துக்கு உட்பட்டு ஆட்சி புரியத் தெரியாதவர்களைப் பீடத்திலிருந்து இறக்கி விட்டு, அவர்களின் இடத்தில் சாஸனத்தை மதிக்கத் தெரிந்தவர்களை அமர்த்திச் சட்டத்தின் ஆட்சியையும், அதன் வழியே சுபிட்சவாழ்வையும் பெறவேண்டியதுதான் மக்கள் கடமை.

அறிவுக்கனலே, அருட்புனலே!

ஓரிடத்தில் இரண்டு நதிகள் ஒன்று கூடின. ''கடல் எப்படி இருக்கும்?'' என்று ஒன்றை மற்றொன்று கேட்டது. ''அது மிகப் பெரியது என்று சொல்கிறார்கள். ஆனால் எவ்வளவு பெரியது என்று யாருக்கும் சொல்லத் தெரியவில்லை. வா! நாமே நேரில் போய்ப் பார்த்துத் தெரிந்து கொண்டால் போயிற்று'' என்று பதில் கூறியது மற்றொரு நதி. இரண்டும் ஒன்றாய்க் கடலை அடைந்து கடலிலேயே இரண்டறக் கலந்து மறைந்து விட்டன! பின்னர் அவை கடலின் தன்மையைப் பற்றி அறிந்து கொள்வது எப்படி?

ஹிந்து மதத்தின் நீள அகலங்களையும், ஆழத்தையும் அறிந்து கொள்வது என்பது அத்தகைய ஓர் அசாத்தியமான காரியம் தான். இருந்தாலும் இந்துமத சாகரத்தைத் தங்கள் ஆன்மீக சக்தியால் கடந்து கரை கண்ட தெய்விக மனிதர்களும் நம்மிடையே உலவி வந்திருக்கிறார்கள். லோகாயத வாழ்க்கையில் கிடந்து உழலும் நம் போன்ற எளியோர்க்கு அவர்கள் நல்ல கதி அடையச் சுலபமான வழிகளைக் காண்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். இவர்களைப் போன்ற பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் குழந்தைகளுக்குச் சொல்வதுபோல் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்களையும் படித்தாலே போதும். தேசீய, குடும்பப் பிரச்னைகள் பலவற்றுக்கிடையில் அகப்பட்டு அல்லலுறும் மனங்கள் அமைதியுறும்.

அந்த முறையில் ஒன்றரை வருஷங்களுக்கு முன்னால் விவேகாநந்தரது நூறாவது ஜெயந்தி விழா கொண்டாடப்பட்ட சமயத்தில் கல்கி துணை ஆசிரியர் ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் எழுத ஆரம்பித்த 'அறிவுக்கனலே, அருட்புனலே!' என்ற தொடர் கட்டுரைகள் இந்த இதழுடன் முடிவடைகின்றன. இந்த இதழில் முடிவடைவதிலும் எதிர்பாராத இரு பொருத்தங்கள் அமைந்திருக்கின்றன. ஒன்று இந்த இதழ் வெளியாகும் தினத்தை ஒட்டி. அதாவது ஜூலை நாலாந் தேதி ஸ்வாமிஜி அமரரான தினம் நிகழ்கிறது. இரண்டாவது விசேஷம் நமது ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் அடுத்த வாரம் சென்னைக்கு விஜயம் செய்து விவேகாநந்தரின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கப் போகிறார். மிகவும் மகிழ்ச்சியான விஷயம். பகவான் ராமகிருஷ்ணரையும் ஸ்வாமி விவேகாநந்தரையும் ஓவியர் கல்பனா தீட்டிய வண்ணப் படங்களாக இந்த இதழ் மேலட்டையில் வெளியிட்டு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கிக் கொள்கிறோம்.



கௌசிகன்

எழுதும்

சரித்திர நவீனம்

பாமினிப் பாவை

விரைவில் ஆரம்பமாகிறது




ஆகஸ்ட் 2ந் தேதி

கல்கி ஆண்டு மலர்

ரயில்வே சிறப்பு மலராக

வெளிவருகிறது



அடுத்த இதழில்

வளரும் விஞ்ஞானம் 1

நீண்ட நடை பயணங்கள் 2

நா.பார்த்தசாரதி எழுதும்

நெஞ்சக் கனல் 3

நெடுங் கதை




விசேஷக் கலவை செய்வோர் :

கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.

பம்பாய்-56

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

GT. (P) 6/1TH — Greens' Advtg.



பிடிவாதக்காரர்கள்

"எங்கே ஐயா, புறப்பட்டீர்?"

எத்தனைதான் கடிந்து கொண்டாலும் என் நண்பர் பிடிவாதமாகக் கேட்கும் கேள்வி இது.

"பையன் அடம் பிடித்தான்."

"எதற்கு?"

"'ஜித்தி' என்ற படம் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று!"

"பிடிவாதக்காரப் பயல்! அவன் பிடிவாதத்தை உமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நீரும் பிடிவாதமாகப் படம் பார்க்கப் புறப்பட்டு விட்டீராக்கும்! ஆமாம், 'ஜித்தி' என்றால் என்ன அர்த்தம்...?"

"பிடிவாதக்காரன் அல்லது பிடிவாதக்காரி என்று பொருள்!" நண்பருக்குப் பொருள் சொல்லி விட்டுப் பிரமோத் பிலிம்ஸாரின் படமான ஜித்தியைப் பார்க்கச் சென்றேன்.

பிடிவாதக்காரப் பெண் ஒருத்தியின் கதைதான் இது. ஆஷா என்னும் பெண் தன் மனத்துக்குத் தோன்றியதையெல்லாம் பிடிவாதமாகச் செய்யும் பெண். சித்திரத்தில் பார்த்த ஒரு கற்பனைப் பெண்ணின் உருவத்தைத் தன் மனத்தில் பிடிவாதமாகப் படிய வைத்துக் கொண்டு உலகத்தில் அவளைத் தேடிக் கண்டுபிடித்தே தீருவது என்று பிடிவாதமாகப் புறப்படுகிறான் அசோகன் என்ற வாலிபன். அசோகனும் அசாத்தியப் பிடிவாதக்காரன்தான். அவனது பெட்டிகளைக் களவாடிக் கொண்டு ஒரு திருடன் ஓடும் ரயிலிலிருந்து குதித்து விடுகிறான். திருடனைப் பிடிக்க அசோகனும் குதிக்கிறான். இவன் ஓட அவன் ஓடப் படமும் பிடி கொள்ளாமல் பிடிவாதமாக ஓடுகிறது. வேட்டைக்காரியின் உருவத்தில் வரும் ஆஷாவுக்கு அருகில் வந்ததும், கதை நிற்கிறது. 'பழைய குருடி' கதையாகி.

முன்பின் அறிமுகமில்லாத அவனை, ஆஷாவின் தந்தைக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டத்துக்குப் புது மானேஜராகக் கொண்டு நிறுத்துகிறான் காரோட்டி. பிடிவாதமாக அவனுக்குத் தோழனுமாகிறான். காரோட்டியும் அவனது காதலியும் — ஏன்? — அவன் தந்தையும்கூடப் பிடிவாதக்காரர்கள்தான். படம் பார்ப்பவர்கள் தங்கள் கற்பனையை ஓட்டிப் பார்த்தால், கதையில் வரும் பாத்திரங்கள் அனைவருமே நல்ல பிடிவாதக்காரர்கள்தான். கதையின் கடைசியில் ஆஷாவை அசோகன் மணந்துகொள்ளக் கூடாது என்று சொன்ன அவன் தந்தையின் முகத்தில்கூட நல்ல பிடிவாதம் தாண்டவமாடுகிறது. காரோட்டிச் சென்று காதலனிடமிருந்து மறைய முயலும் காதலியைப் பிடிக்கக் காதலன் குதிரையை விரட்டிச் செல்வதும் குதிரையும் பிடிவாதமாகச் சென்று காரைப் பிடிப்பதும் கூடப் படம் நல்ல பிடிவாதப் படம்தான் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

இது மட்டுமா? படம் எடுத்தவர் பிடிவாதக்காரர். படத்தில் நடித்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்ட ஆஷா பாரீக், ஜய் முகர்ஜி, மகமூத், சோபா கோட்டே, உல்லாஸ் போன்ற நடிகர்களும் நல்ல பிடிவாதக்காரர்கள்தான். 'கதைக்குக் காலும் தலையும் எது?' என்று கேட்கும் அளவுக்கு ஒரு கதையை எழுதி, அதை வர்ணப் படமாகப் பிடிக்கப் பிடிவாதமாக முயன்ற அனைவருமே பலே பிடிவாதக்காரர்கள்தான். காதல் காட்சிகளில் முகத்தோடு முகம் சேரக் 'குளோஸ் அப்' எடுப்பது போல், மக்கள் மாக்களாக எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்பதைச் சில முகக் 'குளோஸ் அப்'புகளிலும் ஒலியிலும் காட்டிச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறார்கள், பாராட்டும் வகையிலே.

எத்தனைதான் வண்ணத்தைக் குழைத்தாலும், நடிகர்கள் எத்தனைதான் அளவுக்கு மீறி அதிகமாக நடித்து மக்களை மகிழ வைக்க முயன்றாலும், திரைக் கதைகள் மட்டும் பிடிவாதமாக முன்னேற மறுக்கின்றன என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏதோ பழைய 'தேசல்' பாட்டையிலேயே செல்லுகின்றன. இந்த நிலைக்கு என்றைக்குத்தான் விமோசனமோ?

"நல்ல பிடிவாதக்காரர் ஐயா நீர், ஏதாவது நொள்ளை சொல்லிக் கொண்டு?" என்று என் நண்பர் இதோ கேட்க வந்து விட்டார்.


நல்ல படம் ஒன்றாவது வெளி வரும் வரை இப்படிப் பிடிவாதமாக விமரிசித்துக் கொண்டிருக்கத்தானே வேண்டும்?

ஆனால் பிடிவாதக்காரர்களான படத் தயாரிப்பாளர்களும், எந்தப் படமாயிருந்தாலும் பார்த்தே தீருவது என்று பிடிவாதமாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்களும் இருக்கும் வரை எனது இந்தப் பிடிவாதத்துக்கு மருந்து ஏது?

இருபத்தோராம் அத்தியாயம்

ஒளிகொடுத்த உயிர்

புயலெனப் பொங்கிய கருங்கூந்தல் காற்றில் அலைய, புண்பட்ட நாகமெனப் பூந்துகில் படமெடுத்துச் சீற, தொலைவில் அந்தப் பெண் ஓடி வருவதை மரத்திலிருந்து பார்த்த இளங்கோவன் அவள் பெண்தானா, பேய்க் குலத்தைச் சேர்ந்தவளா, வனதேவதையா என்று முதலில் குழம்பினான். ஆற்றங்



கயல்விழி

அகிலன்

கரைக்கு அந்த வேளையில் அந்தக் கோலத்தில் ஒருத்தி வருவதைக் கண்டவுடன் அந்தக் காட்சி அவனுக்கே அச்சமூட்டியது.

இப்போது அதே போன்ற அச்சம் கயல்விழியின் நெஞ்சைப் பற்றிக் கொண்டு விட்டது. இத்தனை விழுப் புண்களையும் தாங்கிக்கொண்டு ஒரு மனிதன் உயிரோடிருக்க முடியுமென்றே அவள் நம்பவில்லை. அவன் திடீரென்று மரத்திலிருந்து குதித்ததையும் வழி மறித்ததையும் நினைத்துக் கொண்டாள். உயிருள்ள மனிதனுக இருந்திருந்தால் அவனுல் இந்த நிலையில் தரையில் நிற்கக்கூட முடியாது. மரத்தில் ஏறுவதோ மரத்திலிருந்து குதிப்பதோ நடக்கவே முடியாத காரியங்கள். அடிபட்டு விழுந்த வீரர்கள் பேய்க் கணங்களாக மாறி அலைந்து திரிவார்கள் என்று அவள் கேள்வியுற்றிருக்கிருள். 'இது மனித உருவமல்ல; மனிதனின் ஆவி உருவம்; பேய்!' என்றே நினைத்தாள்.

கயல்விழியின் மெய்யுடல் நடுங்கியது. இளங்கோவன் புன்முறுவல் பூத்தான். 'சாகத் துணிந்தவனுக்குக் கூட அச்சம் ஏற்படுவதுண்டா?' என்ற எண்ணத்தால் எழுந்த நகைப்பு அது.

''தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள்; நானும் உயிர் நீத்துவிட்டால் பிறகு உங்களைப் போல் இந்த ஆற்றங் கரையில் பேயாக உலாவலாம். இந்த உயிரை இந்த நிலையில் இனிமேல் கணப் பொழுதுகூட என்னால் சுமக்க முடியாது போலிருக்கிறது.'' அவளுடைய விழிகளில் வைகை பெருக்கெடுத்துக் குமுறியது.

அவளுடைய பெருந் துயரத்துக் கான காரணத்தைத் தனக்குத்தானே நினைத்துப் பார்த்தான் இளங்கோவன். 'போர் என்றவுடன் அவசியமான துணிவுடன் நகரத்திலேயே இவள் தங்கியிருக்கக் கூடும். இவளுடைய வீட்டைத் தீக்கிரையாக்கி, வீட்டுச் செல்வங்களைக் கொள்ளை கொண்டு, உற்றார், உறவினர்களையும் சோழப் படையினர் கொன்று குவித்திருப்பார்கள். தன்னையும் சிறைப் பிடித்துப் போய் எங்கே வேழ மகளிரின் கூட்டத்தோடு சேர்த்துச் சோழ நாட்டுக்குக் கொண்டு செல்வார்களோ என்ற அச்சம் வந்து

விட்டது இவளுக்கு. அதனுல்தான் சாகத் துணிந் திருக்கிருள்.'

''கயல்விழி! நீ இறந்து போய்ப் பேயாக மாறினுல் உன்னுல் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான் அவன்.

என்ன செய்ய வேண்டுமென்ருே, என்ன செய்ய முடியுமென்ருே அவள் அதுவரை சிந்தித்துப் பார்க்கவேயில்லே. திடீரென்று அவள் சிந்தனையை அந்தத் திசையில் தூண்டிவிட்டு விட்டான் அவன். அவள் ஆவேசத்தோடு சிந்தித்துவிட்டுக் கூறினுள்:

''நான் இறந்து போய்ப் பேயாக மாறியவுடன் திடீரென்று ஒரு பாண்டிய நாட்டு வீரன் மனத்தில் புகுந்து கொண்டு அவனே ஆட்டி வைப்பேன். என்னுடைய வஞ்சத்தை அவன் மூலமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அவனுக்குத் துணை செய்வேன். இந்த மதுரை மாநகரமும், பாண்டிய நாடும் எப்படியெல்லாம் அழிக்கப்பட்டதோ அப்படியெல்லாம் இதை அழித்தவர்களின் நாட்டை அழிக்கச் செய்வேன். போர் என்ற பெய



ரில் இங்கே அவர்கள் எத்தனை எத்தனை கொடுமைகளைச் செய்தார்களோ அவ்வளவையும் அவர்களுக்கே திருப்பிச் செய்வேன். செய்துவிட்டு என் பழி பாவங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக இந்த வைகை நதியில் நீராடிவிட்டு அங்கயற்கண்ணி அம்மையின் திருப்பாத கமலங்களில் தஞ்சம் புகுந்து கொள்வேன்....''

கயல்விழியின் கண்களில் அப்போது வீசிய ஒளியும், அவளது குரலில் கனிந்த நெருப்பும், சொற்களில் பொங்கிய உணர்ச்சியும் அந்த இளைஞனை ஆவேசம் கொள்ளச் செய்தன. அவனுக்கு அவள் மானிடப் பிறவியான கயல்விழியாகத் தோன்றவில்லை; கொற்றவைத் தேவியே அவளுடைய உருவத்தில் வந்து பேசுவதாக நம்பினான்.

பேச முயன்ற அவனது தொண்டை கரகரத்தது. ''கயல்விழி! நான் செத்துப்போன மனிதனின் பேயல்ல; உயிருடன் நிற்கும் பேய்! முதலில் நீ இதைப் புரிந்து கொள்ள வேண்டும்'' என்றான். பிறகு தொடர்ந்து பேசினான்:

''ஏதோ ஒரு வீரனின் மனத்தில் நீ ஆவியாகப் புகுந்து கொண்டு ஆட்டி வைக்கப் போவதாகச் சொல்கிறாய் அல்லவா? உன்னுடைய ஆவி நீ சொல்லிக்கொண்டிருக்கும்போதே என்னுள்ளே புகுந்து விட்டது. இந்தப் புண்களின் வழியே என் இரத்தத்தில் கலந்து விட்டது; என்னுடைய மூச்சிலும் பேச்சிலும் செயலிலும் நீ இந்தக் கணத்திலேயே ஒன்றிவிட்டாய். உன் சொற்கள் எனக்குக் கொற்றவைத் தேவியின் சொற்களாக ஒலிக்கின்றன. நீ எனக்குக் கொற்றவையாக இருந்து என் கடமையைச் சுட்டிக் காட்டிக் கட்டளையிட்டு விட்டாய். எல்லாவற்றையும் நீ கூறியபடியே செய்து முடிக்கிறேன். இந்த வைகைத் தாயின் மேல் ஆணையாக, எரியும் இந்த நகரத்தின் மேல் ஆணையாக, இவ்வளவையும் பார்த்து நிற்கும் ஆலவாய் அண்ணலின் ஆணையாக நான் செய்து முடிக்கிறேன். நீ உன் உயிரை என்னுடைய உயிரில் மூழ்கச் செய்து மாய்த்துக் கொண்டதால், இனி நீ அமைதியாகத் திரும்பிச் செல்லலாம்.''

அவன் செயலிழந்து அந்த வேப்ப மரத்தின் மீது சாய்ந்தான். அவனுடைய மறுமொழி அவளுக்குப் பேராறுதலைத் தர முயன்றாலும், இந்த உலகத்தில் யாராலுமே ஆறுதலளிக்க முடியாத ஒரு கொடுமை அவளைச் சூழ்ந்து வதைப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

''கொற்றவைத் தாயோடு தயை செய்து என்னை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். நான் செயலிழந்தவள்; பாவியிலும் பாவி; பேதையிலும் பேதை! என்னால் இந்த உயிர் வாதனையைச் சிறிதுகூடப் பொறுக்க முடியவில்லை.'' சக்தியற்ற மெலிந்த குரலில் அவள் மன்றாடினாள்.

இளைஞன் அன்பும் கருணையும் பரிவும் பொங்க அவளை இரக்கத்தோடு உற்றுப் பார்த்தான். தனக்கு வரம் கொடுத்த தெய்வத்திடமுள்ள நன்றி உணர்ச்சியும் அவனுடைய விழிகளில் கலந்திருந்தது.

''உயிர் வாதனையின் பொருள் என்னவென்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் அவன். ''ஒவ்வொரு மயிர்க் காலிலும் ஒவ்வொரு கணமும் எனக்கு நூறு அம்புகள் பாய்வது போல் வேதனையிருக்கிறது. ஆனால் இதை விடப் பெரிய வேதனையால் நான் துடித்துக் கொண்டிருக்கிறேன். இறந்துபோன இவ்வளவு வீரர்களின் உயிர்களுக்கும் அழிந்துபோன செல்வங்களுக்கும் சிறுமையுற்ற பெருமைகளுக்கும் நான் ஈடு செய்ய வேண்டும். அந்த வேதனைகளை நாம் இருவரும் இப்போது பகிர்ந்து கொண்டிருக்கிறோம். அவற்றைத் தீர்ப்பதற்காகவே நாம் இந்த உயிர் வாதனையைப் பொறுத்துக் கொள்வோம். துன்பத்துக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொள்வது அழகல்ல; கோழைத்தனம். ஒவ்வொரு நாளும் வாழ்ந்துகொண்டே சாகத் துணிய வேண்டும். உனக்குப் புரிகிறதா?''

''நான் பெண்பிள்ளை; என் துயரத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள்'' என்றாள் அவள். பிறகு தனக்குள்ளாகவே, 'வேண்டாம்; என் துயரத்தை யாருமே அறிந்துகொள்ள வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டாள்.

''தன்னையே நொந்துகொள்பவர்களையும் கழிவிரக்கம் கொள்பவர்களையும் கண்டால் எனக்குப் பிடிக்காது'' என்றான் அவன்.

''முன்பு ஒரு நாள் சிலம்புக் கூத்தில் நான் உனது நடனத்தில் குறுக்கிட்டபோது, நீ என்ன கூறினாயென்று நினைவிருக்கிறதா? 'நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதை விட அழிந்து விட்டால் என்ன?' என்று கேட்டாய். 'ஆண்களாகிய உங்களுடைய வீரத்தையும் வெற்றியையும் உங்களுக்கு நினைவூட்டத்தான் பத்தினித்தாயின் இந்தக் கூத்து நடத்துகிறேன்!' என்றாய். நான் உன்



மனதுக்கினியவள்!

மதுரமோகினி, மனதுக்கினியவள்,
மலரன்ன மென்மேனியாள்!
தவிர மல்லிகையின் மணம் கமழும் இவள் அழகே அழகு

இவள் ஜேய் மங்கை...

நீங்களும் ஜேய் சோப் உபயோகியுங்கள். மிருதுவான அதன் நுரை, உங்களுக்குப் புது மலர்ச்சியும், மல்லிகையின் நறுமணமும் அளிக்கிறது. ஜேய் சோப் உங்கள் மேனி எழிலை மேன்மையுறச் செய்கிறது.

★ மிதமிஞ்சிய மல்லிகை மணம்!
★ இளஞ்சிவப்பு நிறம்!
★ பளபளக்கும் ரேக்கு 'ராப்பர்'

உங்கள் மேனி எழில் பெருக
ஜேய் அழகு சாதன சோப்



BI-TJS-73 TAM

டாடா தயாரிப்பு

இரு சேலைகளின்
வனப்பான
தோற்றம்—
ஒரே சேலையில்



எந்தப் புறமும் உடுத்தலாம்—உங்கள் எழிலை எடுத்துக் காட்டும் அது

பின்னியின் கபெல்லா*

'ரிவர்ஸிபில்' தூய பட்டுப் புடவை

பின்னியின் தூய பட்டுப் புடவைகளில் நீங்கள் வழக்கமாகக் காணும் பொலிவை இரட்டிப்பாக்கும் இந்தக் கவர்ச்சியான ரகத்தை நீங்கள் நிச்சயம் விரும்புவீர்கள். பல்வேறு வகை வண்ண ஜோடி அமைப்புடன் தயாரிக்கப்படுகின்றன.

பங்களூர் உல்லன் காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பங்களூர் 23
பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ்,
ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT-BM-55-2643

னுடைய அந்தக் கூத்தையும் கூற்றையும் மறக்கவில்லை.''

திடுக்கிட்டாள் கயல்விழி. கூத்திடையே ஒரு நாள் இரவில் மின்னலைப் போல் தோன்றி மறைந்த அந்த முகத்தை இப்போதுதான் அவளால் இனம் கண்டுகொள்ள முடிந்தது. 'நீங்கள்தானா அவர்?' என்று கேட்பவள்போல் ஒரு கணம் அவனது விழிகளைச் சந்தித்து விட்டுக் கண்ணீர் பெருக்கினாள்.

''பத்தினித் தெய்வத்துக்குக் கல்லால் சிலை செதுக்கித்தான் இந்த மதுரையில் வைத்திருக்கிறார்கள். அதுவும் சிலையாக மாறிவிட்டதால் தான் இவ்வளவையும் பொறுத்துக்கொண்டிருக்கிறது. அரசு அன்றே கேட்கும் என்பார்கள். அரசும் வீழ்ந்து விட்டது. இளவரசரையும் கொன்று விட்டார்கள். தெய்வமும் தன் சக்தியை இழந்து விட்டது. இனி நம்புவதற்கு எதுவுமே இல்லை....''

இளவரசரைக் கொன்றுவிட்டார்கள் என்று அவள் கூறியதைக் கேட்டவுடன், அவனுக்கு மூச்சை அடைத்தது.

''தெய்வம் நின்று கேட்கும்'' என்றான் அவன். ''அதை நீ நம்பவேண்டும். நம்பினால் அது உன் உள்ளத்திலும் என் உள்ளத்திலும் நிலைத்து நின்று கேட்கத்தான் செய்யும்.''

''தெய்வம் இனி என் உள்ளத்தில் நிற்காது!'' என்று கத்தினாள் அவள். அவன் சட்டென்று அருகில் சென்று அவள் வாயைப் பொத்தினான்.

''அவச் சொல் கூறாதே! உன்னிடம் நிற்கும் தெய்வம் உன் கண்களுக்குத் தெரியாவிட்டாலும் அது எனக்குத் தெரிகிறது. என்னுள்ளே உருவில்லாமல் குழம்பிக் கொண்டிருந்த எண்ணங்களுக்கு அதுதான் இப்போது உருவமும்உயிரும் ஒளியும் கொடுத்திருக்கிறது. இந்த நாட்டை விடுதலை செய்தே தீருவேன். இது சத்தியம்! நீ நம்பு, நம்பு, நம்பு...!''

ஆவேசம் கொண்ட ஒருவன் அந்த ஆவேசம் தீர்ந்தவுடன், தன் பேச்சு மூச்சிழந்து நினைவிழந்து சரிந்து விடுவதைப் போல், அங்கேயே அந்த ஆற்றின் கரை மேட்டில் அவன் சுருண்டு விழுந்தான். கயல்விழிக்கு ஏதுமே விளங்கவில்லை. அவனுடைய உயிரைக் காப்பாற்றத் துடித்த அந்த வீரனின் உயிரைக் காக்கும் பொறுப்பு இப்பொழுது அவளுடையதாகிவிட்டது.

மெல்ல அவன் தலையை எடுத்துத் திருப்பினாள். அவனை விட்டு எழுந்து சென்று தண்ணீர் எடுத்து வந்து அவன் முகத்தில் தெளிக்க அவனுக்குத் தோன்றவில்லை. வற்றாப் பொய்கையாக அவள் கண்ணீர் பொங்கி அவன் முகத்தை நனைத்தது.

யாரோ அவளுக்கு வலதுபுறம் விரைந்து வரும் சத்தம் கேட்டது. உருவிய வாளும் கையுமாக நீண்ட தாடியுடன் ஓர் உருவம் வந்தது. சோழ நாட்டு வீரர்களைத் தவிர வேறு யாரையும் உயிருடன் கண்டறியாத கயல்விழி, அந்த இளைஞனைப் பகைவரிடமிருந்து காப்பாற்றத் துடிப்பவள்போல் மெல்ல அணைத்தவாறே அவன் மீது ஒடிந்து விழுந்தாள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

மருத்துவர் குடில்

மருத்துவரின் பாதுகாப்பில் விட்டுச் சென்ற சுந்தர பாண்டியனை அங்கு காணாமல் துடிதுடித்த விழுப்பரையர், ஆற்றங்கரையோரமாக ஓடி வந்தபோது அங்கு அவனை ஒரு பெண் பிள்ளையின் மடியில் கண்டவுடன் திகைத்துப் போனார்: 'யார் இவள்? சுந்தர பாண்டியரை இவளுக்கு எப்படித் தெரியும்? அவர் நினைவிழந்து கிடக்கிறாரா, அல்லது உயிரிழந்து கிடக்கிறாரா?' உடை வாளை இறுகப் பற்றிக் கொண்டு அந்தப் பெண்ணின் அருகில் நெருங்கினார் அவர்.

கயல்விழிக்கு விழுப்பரையரின் தோற்றம் அந்த இளைஞனின் உயிரை அவனிடமிருந்து பறித்துக் கொண்டு போக வந்த காலனின் தோற்றம் போல் இருந்தது. அவர் அருகில் வந்தவுடன் அவள் தலை நிமிர்ந்தாள். விழுப்பரையரின் விழிகளோ அவள் மடியில் கிடந்தவனை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தன. வாளும் கையுமாக நின்ற அவரிடம், ''முதலில் என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு இவரைக் கொல்லுங்கள்!'' என்றாள்.

இன்னும் அவனுக்கு உடலில் உயிர் இருந்தது என்பதைத் தெரிந்து கொண்டார் அவர். ''பெண்ணே! யார் நீ? எங்கிருந்து இவரை நீ கவர்ந்துகொண்டு வந்தாய்?'' என்று கேட்டார்.

''நான் எங்கிருந்தும் இவரைக் கவர்ந்து கொண்டு வரவில்லை; என்னிட

மிருந்து நீங்களும் இவரைக் கவர்ந்து செல்ல முடியாது.''

''யார் இவர்? உனக்கும் இவருக்கும் என்ன உறவு?''

''இவர் யாரோ, நான் யாரோ? ஏதோ புலவர் என்று கூறினார். எங்கள் இரண்டு பேருக்கும் உள்ள ஒரே உறவு நாங்கள் இருவரும் சாகத் துணிந்தவர்கள் என்பதுதான். சாவின் பிடியிலிருந்து நொந்துபோய்க் கொண்டிருக்கும் இவர், சாகப் போன என்னைத் தடுத்து நிறுத்தினார். இப்போது அவருக்கே சுய நினைவில்லை.''

விழுப்பரையர் சற்றே தயங்கினார். பைந்தமிழ்க் குமரன் என்ற பெயரில் புலவனாக உலவி வந்த இளவரசன் அவளிடமும் புலவன் என்றே கூறியிருக்கிறான் போலும். அவர் குனிந்து சென்று அந்த இளைஞனைப் பற்றித் தூக்க நினைத்தார். அவள் விடவில்லை. அவரிடம் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

''பெண்ணே! அச்சத்தால் உன்னுடைய சித்தம் குழம்பியிருக்கிறது. இல்லா விட்டால் பாண்டிய நாட்டு மனிதனை என்னைக் கண்டு நீ ஏன் குழம்ப வேண்டும்? இந்த இளைஞர் என்னுடைய நெருங்கிய நண்பரின் குமாரர்; செந்நாப் பழக்கத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் போர்ப் பழக்கமும் பெற்று விட்டார். இவரைத் தேடிக் கொண்டுதான் நான் வந்திருக்கிறேன்.''

''சிறிது நேரம் பொறுத்திருங்கள்; இவருக்கு மயக்கம் தெளிந்து இவர் உங்களை இனம் கண்டு கொண்டாரானால் நீங்கள் இவரை அழைத்துச் செல்லலாம். இல்லா விட்டால் முடியாது.''

விழுப்பரையருக்கு அவளுடைய மறுமொழி கோபத்தைத் தரவில்லை. அவனைக் காப்பாற்ற வேண்டும் என்பதில் அவளுக்கிருந்த உறுதியை அவர் வியந்தார். அருகிலிருந்து அவளைப் பார்த்த போதுதான் அவளை முன்பு எங்கேயோ பார்த்த நினைவு வந்தது. அவள் பெயரைக் கேட்டார்.

''கயல் விழி; பாணர் குலப் பெண்.''

சிலம்புக் கூத்துக் காட்சி மின்னலெனப் பளிச்சிட்டது அவருக்கு. துடுக்குப் பேச்சும் மிடுக்கு நடிப்புமாக அவள் அன்றைக்கு வீராவேசத்தோடு அரங்கத்தில் கண்ணகியாகி உலவிய காட்சி, அவர் மனக் கண்ணில் விரிந்தது. அதை அவளுக்கு நினைவூட்டி, அப்போது அந்த இளைஞன் குறுக்கிட்டதையும், தாம் அவனைத் தடுத்ததையும் எடுத்துக் கூறினார்.

''பெண்ணே! அருகில் உள்ள மருத்துவரின் குடிலுக்குத்தான் இவரை எடுத்துச் செல்ல வேண்டும். இந்த அபாயகரமான நிலையில் நாம் வாதிட்டுக் கொண்டிருந்தால் இவருக்கு நாம் உதவி செய்தவர்களாக மாட்டோம்.''

நொடிப் பொழுதில் ஓடிச் சென்று ஒரு கட்டிலோடு இரண்டு வீரர்களை அழைத்து வந்தார் விழுப்பரையர். கட்டிலில் அவனை மெல்லக் கிடத்தி அவர்கள் தூக்கிக் கொண்டு சென்றார்கள். விழுப்பரையர் கயல்விழியை அழைத்துக் கொண்டு அவர்களைப் பின் பற்றினார்.

''மதுரையில் உன்னுடைய வீடு எங்கே இருக்கிறது?'' என்று அவளிடம் கேட்டார் விழுப்பரையர்.

''எங்கே இருந்தது என்று கேளுங்கள்'' என்று மறுமொழி கூறினாள் கயல்விழி. ''இப்போது எல்லாமே தீக்கிரையாகித் தரைமட்டமாகி விட்டது. எங்கே இருந்தது என்று கூடக் கண்டுபிடிக்க முடியாது. என்னுடைய தந்தையார், உற்றார், உறவினர், பணியாட்கள் யாவரும் என்ன ஆனார்களோ தெரியாது. வைகை ஆற்றைத்தான் என் வீடாக நம்பி வந்தேன். அதற்கும் குறுக்கே நின்று தடுத்தார் இந்தப் புலவர்.''

சிந்தனையில் ஆழ்ந்தபடியே நடந்த விழுப்பரையர், ''போருக்கு முன்பாக மதுரையை விட்டு வெளியேறியிருக்கலாமே?'' என்றார்.

''போரை நான் நேரில் காண விரும்பினேன்; போருக்கு மத்தியில் நான் இருக்க நினைத்தேன்.''

சட்டென்று அவள் முகத்தைத் திரும்பிப் பார்த்தார் விழுப்பரையர். ஆடல் பாடல்கள் முதலிய கலைகளில் நாட்டங் கொண்ட பலர் நளினமான வாழ்க்கையை மட்டும் விரும்புவது உண்டு. துணிச்சலுடன் எதையும் செய்ய மாட்டார்கள். ஆனால் இந்தப் பெண்ணோ ஒரு தனித் தன்மை பெற்றவளாக இருந்தாள்.

தென்னோலைத் தட்டியால் சுற்றிலும் வேலி போல் கட்டப்பட்டிருந்த ஒரு குடிசைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். இளைஞனைக் கொண்டு போய் உள்ளே வைத்த இளைஞர்கள் வெளியில் வந்தவுடன், அவர்களும் தட்டியைச் சுற்றிலும் காவலுக்கு நின்றவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். கயல்விழியை அந்த இளைஞனின் அருகில் விட்டுவிட்டு, உள்ளே சென்று மருத்துவரிடம் ஏதோ இரகசியமாகப் பேசி விட்டு வந்தார் விழுப்பரையர்.

மருத்துவர் புண்களுக்கு மருந்து போடுவதும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதுமாகத் தமது கடமைகளைக் கவனித்தார். அவருக்கே இளைஞனின் உடல் நிலை பற்றி ஏதும் உறுதி கூற முடியவில்லை.

''இவ்வளவு புண்களையும் தாங்கிக் கொள்ளக் கூடிய உடல் வலிமையும் இவரிடம் இருக்கிறது; ஆனால் உடல் வலிமையைவிட இவருடைய மன வலிமை இருக்கிறதே, அதனுடைய சக்திதான் இவரை இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறது. ஓரளவு விழிப்போடு இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று விழுப்பரையர் கூறியது கயல்விழியைப் பார்த்துக் கூறுவது போல் தோன்றியது.

நெருப்பாக எரிச்சல் தரக் கூடிய பச்சிலைச் சாற்றையே மருத்துவர் அவனுடைய புண்களுக்குப் போட்டார். அப்போது சற்றே கண் விழித்துப் பார்த்த இளைஞன், தனது பற்களைக் கடித்தவாறே அந்த எரிச்சலைப் பொறுத்துக் கொண்டானே தவிர, சிறிது கூடக் கூச்சலிட்டுத் தனது வேதனையை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

''எப்படியும் இவர் பிழைத்துக் கொள்வார்; ஏனென்றால் பிழைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இவரிடம் இருக்கிறது'' என்றாள் கயல்விழி. விழுப்பரையர் திடுக்கிட்டார். கயல்விழி உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர் வடிக்காமல் எண்ணத்தில் நம்பிக்கை வைக்கத் துணிந்திருந்தாள்.

விடிவிளக்கு சிறிதாக எரிந்துகொண்டிருந்தது. மயில் தோகை விசிறியால் மெல்ல வீசியவாறே ஒரு மூங்கில் தூணில் சாய்ந்துகொண்டாள் அவள். மருத்துவர் களைப்பால் படுத்துறங்கி விட்டார். விழுப்பரையருக்கு உறக்கம் வரவில்லை.

''கயல்விழி!''

அவரைத் திரும்பிப் பார்த்தாள் கயல்விழி.

''உன்னுடைய நிலையைப் போலவே தான் இவருடைய நிலைமையும் இருக்கிறது. இவருடைய உற்றம் சுற்றம் பெற்றோர் யாரையும் இப்போது தேடிக் கண்டுபிடிக்க முடியாது. நீ விரும்பினால் எனக்கு ஓர் உதவி செய்யலாம்'' என்றார் விழுப்பரையர்.

''செய்கிறேன்'' என்றாள், அது என்ன உதவி என்றுகூடக் கேட்காமல்.

''இவருக்கு உடல் நலம் தேற இன்னும் சில வாரங்களோ மாதங்களோ கூட ஆகலாம். மருத்துவர் எப்போதும் உடனிருப்பார். ஆனால் அது போதாது. நீயும் அவருக்குத் துணையாக இருந்து இவருக்குப் பணி செய்ய முடிந்தால் அந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன்.''

கயல்விழி யோசனை செய்தாள். விதி எப்படியோ அவளைக் கொண்டு வந்து அந்த இடத்தில் தள்ளியிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. ''அவ்விதமே இருக்கிறேன்; இதன் மூலம் தாங்களும் எனக்குப் புகலிடம் தந்து உதவுகிறீர்கள்'' என்றாள்.

''இந்த இடத்தில் இனி பாதுகாப்போடு வாழ முடியாது. நம்முடைய பைந்தமிழ்க் குமரனை இந்த நிலையில் வேற்றூருக்கு எடுத்துச் சென்றால் எப்படி ஆகுமோ என்பதால் இங்கு வைத்திருக்கிறேன். ஓரிரு தினங்கள் சென்ற பின்பு பிரயாணத்தைத் தாங்கும் சக்தி அவருக்கு வந்துவிட்டால் நாம் வேற்றூருக்குச் செல்லலாம். எந்த விநாடியிலும் இங்கே அபாயம் நம்மைச் சூழக் கூடும்.''

''தாங்கள் எங்கு அழைத்தாலும் வருகிறேன்; இவரைக் காக்க எதையும் செய்கிறேன்'' என்றாள் அவள்.

இரவு நேரக் கண் விழிப்பு, அலைச்சல், களைப்பு, நடந்த நிகழ்ச்சிகள் இவற்றால் அவர் மனம் சோர்ந்து போயிருந்தது. தம்மை விட அவள் வயதில் மிகவும் இளையவள் என்பதையும் மறந்து விட்டுத் துயரத்தோடு அவளிடம் பேசத் தொடங்கினார்.

''கயல்விழி! என்னுடைய ஒரே குமாரனையும் நான் இந்தப் போரில் இழந்து விட்டேன். அவனுக்குத் திருமணமாகிய மறுநாளே அவன் போர்க்களத்துக்கு வந்தான். அதையெல்லாம் என்னால் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால்... இவர்... இவரை என்னால் இழக்கவே முடியாது.''

கயல்விழி அவருக்கு ஆறுதல் கூறினாள். அவசியம் நேர்ந்தால் தன் உயிரைக் கொடுத்தும் அவனைக் காக்க முயல்வதாக வாக்களித்தாள். போரினால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் துன்பப்பட்டவர்கள் என்ற வகையில் அவள் மனம் மற்ற இருவருக்காகவும் பாகாய் உருகியது.

வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே, சட்டென்று எழுந்து ஓடினார் விழுப்பரையர். ''பகைவர்! பகைவர்!'' என்று காவலர் கூச்சலிடும் சத்தம் கேட்டது. வைத்தியரைப் பற்றி இழுத்து எழுப்பினாள் கயல்விழி. பிறகு நோயாளியின் கட்டிலிடம் விரைந்தோடினாள். விழுப்பரையரும் விழிகளில் பீதியோடு அங்கு ஓடி வந்தார்.

தீப்பந்தம் ஒன்று பாய்ந்து வந்து அந்தக் குடிசையின் மீது விழுந்தது. குபீரென்று பற்றிக்கொண்டு கொழுந்து விட்டது தீ. பகை வீரர்களுடன் காவல் வீரர்கள் வாள் வீசும் ஒலிகளும் எழுந்தன.

(தொடரும்)




1. அறிஞர் அண்ணாதுரை அவர்கள் சிறையிலிருந்து விடுதலையான மறுநாள் சென்னையில் மக்கள் திரளாகக் கூடி அவரை வரவேற்றனர். கடற்கரை'யில் நடந்த கூட்டத்தில் அறிஞர் அண்ணா பேசுகிறார். 2. சம்ஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் வே. ராகவன் அமெரிக்காவில் இரண்டு மாதங்கள் சுற்றுப்பயணம் செய்தார். விஸ்கான்ஸின் சர்வகலாசாலை நூலகத்தைப் பார்வையிடுகிறார். 3. தோட்டக்கார விசுவநாதன் அவர்கள் நாடகத் துறையில் வெள்ளி விழாக் காலம் சேவை செய்ததைப் பாராட்டி ஒரு விழா ஆர். ஆர். சபை ஹாலில் நடைபெற்றது. நடிகர் ராமசாமி, விசுவநாதன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். 4. ராஜாஜி ஹாலில் நடைபெற்ற பொம்மை, விளையாட்டுச் சாமான்கள் கண்காட்சியைத் தொழில் மந்திரி ஆர். வேங்கடராமன் ஆரம்பித்து வைத்தார்.








என் மூதாதையர்கள் பாலும் தயிரும் நன்றாகக் குடித்துக் கொழுத்தவங்க...
நாங்களும் அதுமாதிரி வீட்டில் புகுந்து பிறர் ஏமாந்த சமயத்தில் பாலைக் குடிச்சிண்டிருந்தோம். இப்ப அதுவும் போச்சு
2
சட்டி நிறைய சோறு வச்சிருப்பாங்க, அதைக் கவிழ்த்து வயிறாரப் பசியாறினோம்.
3
இப்ப அதுவும் கிடையாது.
4
முன்பெல்லாம் அருமையான வெண்ணெய் காய்ச்சின நெய் வாங்கி வெச்சிருப்பாங்க. டின்னைப் பதுங்கிப் போனால்...
5
கட்டையை எடுத்து விரட்டுவாங்க!
6
ஆனால் இப்போ எலிகளெல்லாம் தாராளமாக நாங்க வசிய வருகிறோம். வீட்டில் ஏதேனும் வாங்கிச்சேமித்து வைத்தால் தானே அவர்களுக்கு எங்களைப் பற்றி பயம்?
7
விலை வாசி ஏற்றத்தாலே அதெல்லாம் சாத்தியமில்லாது போய் விட்டது. நல்ல காலமாக என் பசிக்கு எலியாவது இருக்கு...
8
எலியையும் கடையில் விற்கிறதாயிருந்தால் அதன் விலையையும் ஏற்றியிருப்பாங்க... நாங்க பிழைத்தோம்..
9
ரூ 200
100
ஆனால் ஒன்னு! கேவலம் எலியைப் போய்த்துரத்திப் பிடித்துச் சாப்பிடும்படியான நிலைமை வந்து விட்டதே!
10
சாமா

உண்மைக் கதை

ஆபத்துப் பணியில் அரசகுமாரி



1931ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், பதினெட்டாம் தேதி, ஜப்பானியப் படைகள் சூர்த்தன்யமாக முன்னேறி வந்து, மஞ்சூரியாவை முற்றுகையிட்டுத் தாக்கத் தொடங்கின. சீனா கதிகலங்கியது. எவ்வளவுதான் ஆள் படை இருந்தென்ன? தளபதிகளும், தளவாடங்களும், படையாளிகளும் குவிந்திருந்து என்ன? எதிரியைச் சிதைக்க உருவாக்கிய திட்டம் ஒன்றாவது நிறைவேற வேண்டுமே? முடியவில்லை. இதற்குக் காரணம்?

ஜப்பானிய உளவறியும் படை அவ்வளவு திறமையானது, விரிவானது! ஜப்பானியப் போர்க்களப் படைவீரர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில், சீன நாடு முழுவதிலும் ஜப்பானிய உளவாளிகள் உலவி வந்திருக்கிறார்கள் என்பதைச் சீனா காலம் கடந்தே உணர்ந்தது. ஷங்காய் பிரதேசத்தில் இருதரப்பாருக்கும் கடும் போர் நடந்து கொண்டிருந்த போது, நாளொன்றுக்குக் குறைந்தது பத்துப் பதினைந்து ஜப்பானிய வேவுகாரர்களைச் சீன ராணுவத்தார் பிடித்து ஸம்ஹாரம் செய்யாமல் இருந்ததில்லை; எனினும், ஜப்பானிய வேவுகாரர்கள் இனம் தவறாமல் தம்மிடம் சிக்கிய சீன ராணுவ அதிகாரிகளையும், நகரப் பிரமுகர்களையும், அரசாங்க உயர் அதிகாரிகளையும் காவு கொள்ளும் தகவல்கள் நாடு முழுதும் பரவியிருந்தன.

இப்பயங்கர உபத்திரவத்தால் பீதியடைந்த ஜனரலிஸமோ சியாங்கே ஷேக் தம் சகாக்களை அடிக்கடி எச்சரித்து வந்தார்: 'ஒவ்வொரு ஜப்பானியனும் வேவுகாரப் பயல்தான்; ஜப்பான்காரி எவளையுமே நம்பாதீர்கள்; அவர்கள் எதற்கும் துணிந்தவர்கள்.''

என்னதான் சர்வ ஜாக்கிரதையாக இருந்தென்ன? சீனா போரில் சரியத்தான் செய்தது. அதன் ஜேஹோல் மாநிலத்தைப் போர் தொடங்கிய சில மாதங்களுக்குள்ளேயே ஜப்பான் கைப்பற்றிக் கொண்டு விட்டது. இதன் வெற்றி விழா அதன் ராஜதானியில் கோலாகலமாக நடைபெற்றபோது, அரசாங்க மாளிகையில் சீனக்கொடியை அப்புறப்படுத்தி விட்டு, மாட்சிமை தங்கிய ஜப்பானின் 'உதய சூரியன்' கொடியைப் பறக்கவிடும் கௌரவத்தை வீராங்கனை யோஷிகா காவாஷிமாவுக்கு அளித்தார்கள் ஜப்பானியர். ஜப்பானின் 'மாதாஹரி' என்று போற்றப்பட்டு வந்த அந்த யுவதி ஓர் அரசகுமாரி; அதி அழகி; அற்புதமான திறமை, துணிவு, நுண்ணறிவு எல்லாம் கொண்டவள்.

ஜப்பானில் வேவுகாரப் படையினருக்குத் தனி மதிப்பு. ராணுவ வட்டாரத்திலும் அரசாங்கத்திலும் அவர்களுக்குச் செல்வாக்கு அதிகம். பேராபத்தான சூழ்நிலையில் கடும் இன்னல் இடையூறுகளைச் சமாளித்துக் கொண்டு, உயிரைத் தூசாக மதித்து வேலை செய்பவர்களாதலால், அவர்களைக் கௌரவிக்க வேண்டியது அவசியம் என்பது ஜப்பானியர் கருத்து.

யோஷிகா புகுந்து புறப்படாத எதிராளிகளின் இலக்கு, முகாம், கேந்திரம் எதுவும் கிடையாது. ஜப்பானின் வெற்றிக்குப் பெரிதும் துணை புரிந்தவள் அந்த உளவுகாரிதான். ஜேஹோல் மாநிலத்தை வெற்றி கொண்ட கதையே மிகச் சுவாரசியமானது.

யோஷிகா சீனப் பேரழகிபோல் ஆடை அலங்காரம் செய்து கொண்டு, சில தோழிகளுடன் ஒரு சீனப் படை முகாமுக்கு அருகில் வளைய வந்தாள். எதிர்பார்த்தபடி அங்குள்ள படைப் பிரிவின் தளபதியின் பரிவுப் பார்வை யோஷிகா மீது படர்ந்தது. மதி மயங்கினான். அவளைத் தன் கூடாரத்துக்கு அழைத்துச் சென்று உபசரித்தான். குதூகலமாகப் பேசி மகிழ்ந்தான். யோஷிகாவின் சாகஸப் பேச்சிலும் தளுக்கு மினுக்கிலும் வெறியூட்டும் மேனி வனப்பிலும் மயங்கி விட்டான் சீனத் தளபதி. அவனுக்கு நிறைய மதுவைக் கொடுத்ததும் போதைக் கிறக்கத்தில் ரகசியங்களைக் கக்கி விட்டான். முக்கியமான தகவல், மூவாயிரம் ஜப்பானியப் போர்க் கைதிகள்



அந்த முகாமில் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது தான். இது போதாதா யோஷிகாவுக்கு ?

மறு நாள் இரவு வருவதாகச் சொல்லி விடைபெற்றுத் திரும்பியவள், முதல் வேலையாக ஷங்காய் நகரிலுள்ள ஜப்பானியத் தளபதிக்குச் செய்தி அனுப்பி வைத்தாள்.

''மிக ஆபத்தான வேலை. நீங்கள் எப்படித் திட்டமிடுகிறீர்களோ, அப்படியே செய்கிறேன். தாக்குதல் ஏதும் நடத்தாமல், உடன்படிக்கை செய்து கொண்டு கைதிகளை விடுவித்து வருவது தான் புத்திசாலித்தனமென்று தோன்றுகிறது. நீங்களே பிரதிநிதியாகப் போய்வாருங்கள். சீனத் 'தளபதி பிணையாக எது கேட்டாலும் தருவதாக ஒப்புக் கொண்டு வாருங்கள். அப்படியே செய்வோம். வேறு வழி எனக்குத் தோன்றவில்லை'' என்றான் ஜப்பானியத் தளபதி.

யோஷிகா அலட்சியமாக, ''உங்களுக்கு இது ஆபத்தான வேலைதான். எனக்கு அப்படியில்லை. நான் சொல்லுகிறபடி செய்யுங்கள். என் அந்தரங்கப் படையணியை இங்கு அனுப்பி வையுங்கள். நீங்களும் பெரும் படையுடன் எல்லையில் தயாராக இருங்கள். பிறகு நான் தகவல் அனுப்புகிறேன்'' என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தாள்.

மறு நாள் இரவு கவர்ச்சி மிக அலங்கரித்துக் கொண்டு, சீனத் தளபதியின் கூடாரத்துக்குச் சென்றாள். இருவரும் மது அருந்தினார்கள். நிலவொளியில் இயற்கை அழகை ரசிக்க அழைத்தாள் யோஷிகா. உற்சாகத்துடன் கிளம்பி விட்டான் தளபதி. இருவரும் ராணுவக் காவல் எல்லையையும் தாண்டி வெளியே வந்து விட்டார்கள். புதர்களும்,



''மானேஜர் சார்! உங்களுக்கோ ரத்தக்கொதிப்பு! கோபப்படாமல் சாந்தமாக, சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று டாக்டர் அட்வைஸ் பண்ணியிருப்பதை நினைவில் வைத்து இதைக் கேளுங்கள் சார்! முக்கியமான ஆபீஸ் பைலைக் கவனிக்க வீட்டுக்குக் கொண்டு போனேனா? அதை எலி துண்டு துண்டாகக் கடித்து விட்டது!''

மரங்களும் நிறைந்த சோலைவனச் சூழல். சிறிது தூரம் சென்றதுமே புதர்கள் ஆடின. ஜப்பானிய வீரர்கள் இருவரையும் சூழ்ந்து கொண்டார்கள். சீனத் தளபதி கைதானான். ஜப்பானியரின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

உடனே யோஷிகா ஆண் வேடம் போட்டுக் கொண்டு தன் அந்தரங்கப் படையணியுடன், வெள்ளைக் கொடியேந்தி, சீன உதவித் தளபதியின் முகாமுக்கு விரைந்தாள். ''உங்கள் தளபதியும் அவருடைய சீனக் காதலியும் ஜப்பானியரிடம் சிறைப்பட்டு விட்டார்கள். நீங்கள் காவலில் வைத்திருக்கும் மூவாயிரம் ஜப்பானியப் போர்வீரர்களை விடுவித்தால், சீனத் தளபதி உங்களுக்குக் கிடைப்பார்'' என்றாள்.

அவ்விதமே இரு தரப்பாருக்கும் விடுதலை கிடைத்தது. மறு நாளே சீன இலக்குகளைப் பலமாகத் தாக்கி, ஜெஹோல் பகுதியை வெற்றி கொண்டு விட்டன புதிய பலம் பெற்றிருந்த ஜப்பானியப் படைகள். ஓரிரு தினங்களுக்குள்ளேயே பல ராணுவ ரகசியங்களையும் உளவுகளையும் அறிந்து கொண்டிருந்தாள் யோஷிகா. சீனத் தளபதியோ தன் அழகிய புதுக் காதலியை ஜப்பானியர் கொண்டு போய் விட்டார்கள் என்று ஏங்கி வருந்தினான்.

யோஷிகா காவாஷிமாவின் சுய சரிதையே ஆபத்துக்களும் சோதனைகளும் நிரம்பியதுதான்.

மஞ்சு பிரதேசத்தில் காங் – தேஹ் எனும் ஜப்பானிய அரசன் ஆண்டு வந்தான். சீனப் பகுதி இது. அவனுடைய தம்பி மகள்தான் யோஷிகா. 1906ல் மஞ்சு அரண்மனையில் பிறந்தாள். பெற்றோர் சூட்டிய பெயர் டுங்–சிஹே. அவளுக்கு ஐந்து வயதாகியிருக்கும் போது, அவள் தந்தையைச் சீனப் புரட்சிக்காரர்கள் கொன்று விட்டார்கள். நம்பகமான சீன மெய்காப்பாளர்கள் யோஷிகாவின் குடும்பத்தாரைப் பத்திரமாக ஜப்பானுக்குக் கொணர்ந்து சேர்த்தார்கள்.

அநாதரவாகி விட்ட சிறுமி யோஷிகாவை நனிவா காவாஷிமா என்னும் ஜப்பானியக் கோமகனார் சுவீகாரம் எடுத்துக் கொண்டார். டுங்–சிஹே என்னும் இயற்பெயர் மறைந்து 'யோஷிகா காவாஷிமா' என்னும் பெயர் ஏற்பட்டது இங்குதான்.

அவள் அவருடைய ஜமீன் ஊரான அஸாமாவில் தங்கிப் படித்து வந்தாள். பருவம் மலர்ந்து, கவர்ந்திழுக்கும் நிலையை அடைந்தாள் யோஷிகா. பள்ளித்தோழனான தோயாமா எனும் அழகனிடம் அவளுக்கு மையல் ஏற்பட்டது. ஆனால் அந்த இளம் வாலிபன் யோஷிகாவைப் புறக்கணித்துவிட்டு ஒரு நாள் எங்கோ மறைந்தான். முதல் பேரிடி, வாழ்க்கையில் கசப்பையும், வாலிப இனத்தின் பேரில் வெறுப்பையும் ஏற்படுத்தியது. யோஷிகா ஆண் வேஷம் போட்டுக் கொண்டு, தன்னிச்சையாகத் திரியத் தொடங்கினாள். ஊரில் புரளிகள் கிளம்பக் கேட்பானேன்? கௌரவப்பட்ட மனிதருக்குத் தலைகுனிவு ஏற்படும் போலிருக்கவே, மகளைக் கண்டித்தார். ஸமுராயி வம்சத்தில் வந்த அரசிளங்குமரியின் தன்மானம் படித்து கிடக்க ஒப்பவில்லை. 'நீயுமாச்சு, உன் சொத்துமாச்சு, போ!' என்று வளர்ப்புத் தந்தையை உதறி விட்டு, வெளியேறினாள். அப்போது வயது பதினெட்டு. கோமகனார் தம் சொத்துக்களையெல்லாம் இஷ்டமித்திர பந்துக்களுக்கு எழுதி வைத்தார்.

தங்க இடம் கிடையாது; கையிலே பணம் இல்லை. இந்த நிலையில் யோஷிகா தைரன் நகருக்கு வந்து சேர்ந்தாள். அங்குள்ள அரசகுமாரனின் சந்திப்பு ஏற்பட்டது. மங்கோலிய வம்சத்தவன் அவன். இருவரும் காதலித்து விவாகம் செய்து கொண்டார்கள். இளம் ஜோடி மங்கோலியாவின் எழிலார்ந்த பிரதேசங்களில் உல்லாசப் பிரயாணம் செய்து 'தேன் நிலவு' கொண்டாடியது. யோஷிகாவுக்கு ஆண் உடையில் உலவும் ஆசை மேலோங்கியது. அன்பனின் இசைவும் கிடைத்தது.

சிறு குதிரைப் படையணிக்கு அவளைத் தளபதியாக்கினான். யோஷிகாவின் போர்ப் பயிற்சியையும், இயக்க சக்தியையும், பரிவு, கட்டுப்பாடு, திறமை ஆகியவைகளையும் கண்ட மற்றத் தளபதிகள் அவளையே தம் தலைவியாக ஏற்றுக் கொண்டார்கள். விரைவிலேயே மங்கோலிய ராணுவம் திறமை மிக்கதாகத் திகழ்ந்தது.

கணவனுக்குக் கிலி ஏற்பட்டது. 'ராணுவத்தில் யோஷிகாவுக்கு வளர்ந்து வரும் செல்வாக்கு, ஒரு நாள் தன் அரியணைக்கே உலை வைத்து விடுமோ?' யோஷிகாவிடம் பிடிமானம் குறைந்தது; கட்டுப்படுத்தலானான். யோஷிகா விவாகரத்து செய்து கொண்டு திந்தஸிங் என்னும் பெரிய சீன நகருக்குச் சென்றுவிட்டாள். அங்கு குடியேறியது முதல்,

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய்-துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கூடியிருக்கும் நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.



வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

உயர்தரமான காபிக்கொட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்டது
...சாஸ்திரீய முறையில் வறுத்து, பொடியாக்கப்பட்டது
...சுத்தத்திற்கு உத்தரவாதம்!



தரத்திற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்டது:- நீங்கள் மிகச் சிறந்த காபி வாங்கவென்று ப்ரூக் பாண்ட் நிபுணர்கள் உத்தமமான தென்னிந்திய காபிப் பயிரைத் தேர்ந்தெடுக்கின்றனர்!

வளமான நறுமணம் பெற வறுத்தல்:- உங்களுக்கு இனிய சுவையும் மணமும் தரவென்று நவீன விஞ்ஞான முறைகளில் வறுக்கப்படுகின்றன!

மிக சுத்தமாயிருக்க காற்று புகாத டப்பாக்களில் ஸீலிடப்படுகிறது:- கைபடாமலும் காற்று புகாமலும் சுகாதார முறையில், கேடுறுத டப்பாக்களில், நயம், புத்தம் புதுமை, நறுமணத்துடனும் அடைக்கப்பெற்று ஸீலிடப்பட்டு, ப்ரூக் பாண்ட் காபி உங்களிடம் வருகிறது.



ப்ரூக் பாண்ட்
சுத்தமான காபி
அல்லது சிகரி
கலந்த ப்ரூக்
பாண்ட் ப்ரெஞ்சு
காபி குடித்துப்
பாருங்கள்

JWTBS 1293 TM

ஜப்பானிய ஒற்றர் படையில் சேர்த்தான். விரைவிலேயே புகழ் மிக்க 'பெரும் புள்ளி' யாகி விட்டாள்.

ஜப்பானியப் படைகள் 1932ல் ஷங்காய் பிராந்தியத்தின் மீது படையெடுத்த சமயத்தில், யோஷிகா சீனர்களின் கூடாரங்களில் படைத் தலைவர்களோடு உல்லாசமாக அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். மது மயக்கத்திலும் மங்கையின் எழில் கவர்ச்சியிலும் நிதானமிழந்த பல தளபதிகள் ராணுவ உளவுகளை உளறி விடுவார்கள். மிக விரைவாக அவை ஜப்பானியப் படை முகாமுக்குப் போய்ச் சேர்ந்து விடும். பிறகு சீனர்களின் படுதோல்வி தொடர்ந்து நிகழும்.

ஒரு சமயம், 'சீனப் படையணிகளுள் 19ம் பிரிவின் பேரில் சியாங் கே ஷேக் அதிருப்தி கொண்டிருக்கிறார்; அப்பிரிவில் உள்ள சிப்பாய்கள், தளபதிகள் எல்லாருமே வேண்டா வெறுப்பாகக் கூலிக்கு வேலை செய்பவர்கள் என்று கருதுகிறார்' என்கிற தகவல் யோஷிகாவுக்குத் தெரிந்தது. இரு தினங்களுக்குள் அந்தப் படைப் பிரிவு உள்ள பகுதியை ஜப்பானியர் தாக்கவே, சீனப் படைகள் ஆயுதங்களையெல்லாம் ஒப்படைத்து விட்டுச் சரணடைந்தன!

1932ல் ஜப்பானியப் போர்க்கப்பல் 'இஜுமோ'வைத் தகர்த்தெறியத் திட்டமிட்டார்கள் சீனக் கடற்படையினர். அது ஓரிடத்தில் வசமாக மாட்டிக் கொண்டது. ஆனால் தாக்குதலுக்கு விரைவதற்குள் அந்த 'ஹிஸ் இம்பீரியல் ஜாபனீஸ் மெஜெஸ்டிக் ஷிப்' தப்பியோடிப் பாதுகாப்பான இடத்தை அடைந்து விட்டது! தங்கள் திட்டம் எப்படி அம்பலமாயிற்று என்று திகைத்தார்கள் சீனர்கள். அது முதல் ஐந்து வருஷ காலம் எப்படியாவது அந்த நாசகாரிக் கப்பலை நாசம் செய்துவிட வேண்டுமென்று முழுமூச்சுடன் முனைந்தார்கள். ஒவ்வொரு தவணையிலும் இக்கட்டிலிருந்து தப்பிப் பிழைத்து விட்டது அந்த இளம் பரிதிக் கொடி பறக்கும் 'இஜுமோ'! பிறகுதான், இவ்வளவு தோல்விக்கும் காரணம் யோஷிகாவின் உளவு வேலை என்பதைச் சீனப் பாதுகாப்பிலாகாவினர் தம் ஒற்றர்கள் மூலம் அறிந்தார்கள்.

1937 முதல், எப்படியாவது யோஷிகாவைச் சுட்டுக் கொன்றுவிட வேண்டுமென்று, சீனப் புரட்சிக் குழுவின் வாலிபர்களும், தேசிய ராணுவத்தாரும், போலீசாரும் துப்பாக்கியும் கையுமாக நாடு நகரமெல்லாம் சுற்றியலைந்து கொண்டிருந்தார்கள். யோஷிகாவைக் கண்டுபிடிக்க முடிந்தால்தானே?

ஒரு சமயம் நான்கிங் நகரில் இக்கட்டாகச் சிக்கிய யோஷிகா மீது புரட்சி வாலிபர்கள் சுட்டு விட்டார்கள். படுகாயத்துடன் உயிர் தப்பி விட்டாள் யோஷிகா. இச்செய்தி, ஜப்பானிய ராணுவவட்டாரத்தையே உலுக்கி எடுத்து விட்டது. அவள் பிழைத்து எழுந்ததும், அவளது மதிப்பும் செல்வாக்கும் மேலும் பல மடங்கு வளர்ந்தன.

யோஷிகா ஆண் உடையில் சீன நகரப் பூங்காக்களில் ஒய்யாரமாகத் திரிவாள். குதிரை மீதேறி உல்லாசச் சவாரி செய்வாள். தன்னைக் காதலிப்பது போல் நடிக்கவும் ஒன்

திரைத் துணுக்குகள்

சிரிப்பும் சோகமும்

கல்கி நகைச்சுவை மலரில் நாகேஷ் அவர்களை ஜெர்ரி லூயியைப் போலவே நடிக்க வைத்துப் பல கோணங்களில் படமெடுத்து வெளியிட்டோமல்லவா? லட்சத்துக்கு மேற்பட்ட கல்கி வாசகர்களின் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் விதத்தில் அவர்கள் சார்பாக நாகேஷுக்கு ஜெர்ரி லூயியின் ஒரு புகைப் படத்தை 'பிரேம்' போட்டு அன்பளிப்பாகக் கொடுத்தோம். இந்தப் படத்தை நாகேஷ் மிகுந்த அன்புடன் பாதுகாத்து வருகிறார். காதலிக்க நேரமில்லை படத்தில் 'ஓஹோ ப்ரொடக்ஷன்ஸ்' அதிபராக அவர் தோன்றும் முதல் காட்சியில் மேஜை மேலேயிருப்பது ஜெர்ரி லூயியின் அந்தப் படம்தான்.



ஜெர்ரி லூயியைப் போல் தாம் நடிக்கவில்லை, காப்பி அடிக்கிறேன் என்று ஆரம்பத்தில் கூறிய போதிலும் நாகேஷ், சமீப காலமாகத் தமது 'ஒரிஜினலிடி'யையும் பல படங்களில் காண்பித்து வருகிறார்.

மேனாட்டு முழு நீள ஹாஸ்யப் படங்களில் நார்மன் விஸ்டம், டானி கே, ஜெர்ரிலூயி போன்றோர் ரசிகர்களின் பேரபிமானத்தைக் கவர ஒரு சின்ன யுக்தியைக் கையாளுவது உண்டு. அது, ஒரே ஹாஸ்ய மயமாகப் படத்தில் நடித்து வரும்போது திடீரென்று ஒரு சோகக் காட்சியை இடையில் புகுத்துவது தான். நம்மை யெல்லாம் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த அந்த அப்பாவி மனிதர் திரையில் மனமுடைந்து துன்பப்படும்போது கணப் போதில் அப்படியே நமது நெஞ்சு உருகி விடும். நமது அனுதாபத்தை முழுமையாகச் சம்பாதித்து விடுவார், ஹாஸ்ய நடிகர் அந்தக் கட்டத்தில். மக்களுடைய மனத்தைப் புரிந்து கொண்டு மேற்கொள்ளப்படும் மனோதத்துவ தந்திரம் இது. இதை நாகேஷ் போன்ற நமது ஹாஸ்ய நடிகர்களும் பின்பற்றினால் நல்ல பலனளிக்கும் என்று எதிர்பார்க்கலாம். இந்த 'டெக்னிக்'கை ஓரளவு வெற்றிகரமாகவே நாகேஷ் கையாண்டார் என்று சொல்லலாம், 'பச்சை விளக்கு' திரைப் படத்தில் ஏகநாதர் படத்தின் முன்னால் நின்று தம் நண்பனுக்காக அவர் மனமுருகிப் பிரார்த்திக்கும் காட்சியில்.

✿ படாதிபதிகளைப் பாராட்டுவதென்றால் சாதாரணமாக மற்ற அரசியல் தலைவர்களெல்லாம் நிதானித்து யோசிப்பார்கள். ஆனால் ஒரு ஜனாதிபதி தயக்கமின்றி ஹாலிவுட் படாதிபதிகளை வாழ்த்தினார். அவர் யார் தெரியுமா? **(விடை: அடுத்த இதழில்)**

நிரண்டு பெண்களை வேலைக்கு வைத்திருந்தான். எந்தப் பயலும் அவனை இன்னாரென்று கண்டுகொள்ள முடியாது. சீனக் குக்கிராமங்களுக்குத் தன் மெய்காப்பாளருடன் போகும் போதெல்லாம், அங்குள்ள அங்காடிக் கடைகளிலுள்ள பண்டங்களை அப்படியே விலைக்கு வாங்கி, ஏழை எளியவர்களுக்கு வழங்கி விடுவான். இதனால், கிராமப்புறங்களில் அவனிடம் மதிப்பு அதிகம். ஆபத்துச் சமயங்களில் அவளைப் பாதுகாக்கக் கிராமவாசிகளே (சீனர்கள்) முன்வந்து துணை புரியக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

சீன — ஜப்பானியப்போர் ஒருவாறாக முடிவடைந்தது. யோஷிகா தித்தஸின் நகரில் ஓர் உல்லாச ஹோட்டலைத் தொடங்கினாள். ஜப்பானியரின் ஆதிக்கப் பகுதி இது. இங்கு சீனச் செல்வந்தர்களும், உயர்தர அதிகாரிகளும் விரும்பி வந்து போவார்கள். பெரிய ஜப்பானிய உளவுகாரி நடத்தும் ஹோட்டல் இது என்பது அவர்களுக்குத் தெரியாது. இதன் மூலம் பல அரசாங்க ரகசியங்களை அறிந்து வந்தாள் யோஷிகா. அங்கு வந்து போன பல பெருந் தலைவர்களுள் பிரபல சீனக் கோமகவரர் வாங்—சூவின்னும் ஒருவர். யோஷிகாவின் நெருங்கிய நண்பராகி விட்டார். அவர் 'சைனீஸ் சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ்'ஸின் தலைவர். அவர் யோஷிகாவிடம் கொண்ட மோகத்தால் சகலத்தையும் அர்ப்பணிக்க முனைந்தார். உறவு இறுகியது. யோஷிகாவோ அங்கு தன் வேவுப் பணிக்கே ஆக்கம் தேடி வந்தாள். புரட்சி சர்க்காரின் ஒற்றர்களுக்கு வாங்—சூவின் பேரில் சந்தேகம் ஏற்பட்டது. அவர்கள் 1938ல் அவரைச் சதி செய்து சுட்டுக் கொன்று விட்டார்கள். கூடவே யோஷிகாவையும் தீர்த்துக் கட்ட முயன்றார்கள்; முடியவில்லை.

இலட்சக்கணக்கான சீனர்கள் துப்பாக்கியும் கையுமாக யோஷிகாவைத் தேடித் திரிந்து கொண்டிருக்கும்போது, எவ்வளவு காலம்தான் அவள் வாழ முடியும் ?

1939, ஜனவரி முதல் தேதி.

யோஷிகா காவாஷிமா வாங்—சூவின்னின் விதவையாகி விட்ட மனைவியைத் துக்கம் விசாரிப்பதற்காக, அவரது மாளிகைக்கு வந்து சேர்ந்தாள். காரை விட்டு இறங்கி, படியேறுகிற சமயத்தில், அங்கு காத்திருந்த நான்கு சீன வாலிபர்கள் யோஷிகாமீது 'பட பட' வென்று சுட்டுத்தள்ளி விட்டார்கள். சுருண்டு விழுந்தாள் பேரழகி.

அந்த நாலு சீனர்களும் உடனே அங்கு கைது செய்யப்பட்டார்கள். அங்கேயே அவர்களைச் சித்திரவதை செய்து, தலைகளைச் சீவி எறிந்தார்கள் ஜப்பானியச் சிப்பாய்கள். என்ன தான் பழி வாங்கினாலும் பிரியப் போகிற உயிரை மீட்க முடியுமா? யோஷிகா இரு மாத காலம், ஆஸ்பத்திரியில் கிடந்து விட்டு, மார்ச்சு மாதம் 3ம் தேதி, மாட்சிமை தங்கிய ஜப்பானிய சக்கரவர்த்திக்கும், உதயசூரியன் பொறித்த தேசியக் கொடிக்கும் அஞ்சலி செலுத்தியபடி உயிர் நீத்தாள். — **சௌரி**

(ஆதாரம்: **நிப்பன் டைம்ஸ், ஜப்பான்**)

குட்டிக் கதை

இங்கிலாந்தில் ஒரு பிரபல டாக்டரைச் சந்தித்தேன். அவர் காரியாலயத்தில் ஒரு கண்ணாடி அலமாரிக்குள் ஒரே ஒரு உடைந்த பொம்மை மட்டிலும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்து நான் வியந்து கொண்டிருக்கையில் அந்த டாக்டர் அதைப் பற்றிய கதையை எனக்குச் சொன்னார்.

அந்த டாக்டர் கைநிறையப் பணம் வாங்கக் கூடிய நிபுணர். அவரிடம் வைத்தியத்துக்கு வந்த கண் பார்வை இழந்த சிறுமியோ பரம ஏழை. லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள்அளித்த உதவி காரணமாகத்தான் அவள் அங்கு வந்து சேர முடிந்தது. இல்லா விட்டால் பெரும் செல்வந்தர்கள் மட்டுமே இடம் பெறக் கூடிய அந்த நர்ஸிங் ஹோமில் அவள் அடி எடுத்துக்கூட வைத்திருக்க முடியாது. அவள் கையில் ஒரே ஒரு பொம்மை மட்டும் இருந்தது. புதிய இடத்தில் — டாக்டருடைய நர்ஸிங்ஹோமில்— ஒரு முறை நிலை தடுமாறிய அந்தக் குருட்டுப் பெண் பொம்மையைக் கைநழுவ விட்டு விட்டாள். பொம்மை விரிசல் கண்டது. கண்ணீர் விட்டு அழுத போதிலும் அந்தப் பெண் தன் ஒரே உடைமையான அதனிடம் மிகுந்த அன்பு வைத்து விளையாடிப் பொழுதைப் போக்கினாள்.

நாட்கள் சென்றன. அபாரமான சாமர்த்தியத்துடன் டாக்டர் சஸ்திர சிகிச்சை செய்த பிறகு அந்தச் சிறுமி தன் பார்வையைப் பெற்றாள். மகிழ்ச்சியால் துள்ளிய அவள் டாக்டரிடம், ''உங்களுக்கு நான் ஒரு பரிசு தருவேன். ஏற்றுக் கொள்வீர்களா?'' என்று கேட்டாள்.

'இந்த ஏழைச் சிறுமி எனக்கு என்ன தந்துவிட முடியும்?' என்று நினைத்துச் சிரித்தார் டாக்டர்.

சிறுமியோ விலை மதிக்க முடியாத அளவுக்குத் தான் அன்பு செலுத்தி வந்த அந்தப் பொம்மையை டாக்டரிடம் நீட்டினாள்.

மனம் நெகிழ்ந்து போனார் டாக்டர். ''உன் கண்களை நான் திறந்ததாக நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீதான் என் கண்களைத் திறந்திருக்கிறாய்'' என்றார்.

சமூகத் தொண்டாற்றத் தமக்கு நேரமில்லை என்று அன்று வரை கூறி வந்த டாக்டர் மறு நாள் முதல் ஏழை எளியவரின் துயர் தீர்க்கவென்று விலை மதிக்க முடியாத தமது நேரத்தில் சிறுபொழுதை ஒதுக்கிக் கொண்டார்.

— டாக்டர் வெங்கடேசன் லயன்ஸ் கிளப் கூட்டத்தில் கூறியது.

"ஒரு பாடகருக்கு இசையைக் கேட்பதும், அப்பியாசம் அல்லது கச்சேரி பண்ணுவதுபோல் முக்கியமானது. அது, ஒருவருடைய சங்கீத அனுபவத்தை வளப்படுத்துவதுடன் அவரது இசை அறிவையும் விசாலமாக்குகிறது. எனது பிலிப்ஸ் ரேடியோ எனக்கு முக்கியமானது. ஏனெனில், அது பல பாடகர்களின் வெவ்வேறான இசைகளையும் அநேக பண்புகளையும் எனக்கு கொணர்ந்தளிக்கிறது"



ஜி.என். பாலசுப்ரமணியம்

கர்நாடக சங்கீதத்தில் புதியதோர் பாணியை சிருஷ்டி செய்தவர். இவரது சிறந்த அம்சங்கள், 'ப்ருகா'வும் விஸ்தாரமாக அலசிப்பாடுவதுமே. ஜி.என்.பியும் ஓர் உணர்ச்சி மிகுந்த இசைப் புலவர்.


பிலிப்ஸை உலகெங்கும் நாடுகின்றனர். பிலிப்ஸ் ரேடியோ ஒன்றில்தான் பிரத்தியேகமான இக் குணங்களைக் காணலாம்: • தலை சிறந்த 'நோவோ ஸோனிக்' அம்சங்கள் • நாகரிகத்தின் சின்னமான 'லோக்லேக்' அமைப்பு • நாடெங்கும் உங்களுக்குத் திறமையான சேவையளிக்க, பிலிப்ஸ் தொழிற்சாலைகளில் தேர்ச்சி பெற்ற பிரத்தியேக டீலர்கள்

பிலிப்ஸ்
நோவோஸோனிக்
ரேடியோ


PHILIPS

ஈடற்ற தரம் ★ எண்ணற்ற வகைகள்

JWTPHR 1670 TAM



இளவரசன் அஜய சிம்மனுக்கு உணவு பரிமாறப் பட்ட போது.....
என் நண்பன் சோழனுக்கு எங்கே ஆசனம்?
வேறு அறையில் அவருக் குத் தனியாக....
என்ன தனியாகவா? என் நண்பன் என் கூடத்தான்
உன்னை வேண்டும். உடுக்க, படுக்க எல்லாமே என்னோடுதான், தெரிந்ததா?
அன்றிரவு...
அடேயப்பா! எத்தனை பெரிய படுக்கை அறை உனக்கு...!
இது என்ன பிரமாதம்! நீ இன்னும் அரண் மனையைச் சுற்றிப் பார்க்கவில்லையே! வா, காட்டுகிறேன்.
அரண்மனையைச் சுற்றிப் பார்த்து வரும் போது....
நண்பா, இது என்ன, தரை யில் ஒரு கதவு! நிலவறையா?
தெரியவில்லை. நானே இப்போதுதான் பார்க்கிறேன். திறந்து பார்ப்போமே.
இதனில் இறங் கும் படிகள் எங்கே போகின்ற னவோ தெரியவில் லையே...
சோதித்துப் பார்த்தால் போயிற்று!
இவைகளெல்லாம் என்ன பெட் டிகள்..? பொன்னும் வெள்ளியு மாக இருக்குமோ?
ஹச்!..ஹச்..! ஐயையோ! மிள காய்ப் பொடி..! அரிசி மாவு! இது பண்டகசாலை போலிருக்கிறது.


இளவரசே! உடலெல்லாம் அரிக்கிறது இடி. இது என்ன கோலம்! இனி தாங்கள் தேவை எதுவானாலும் என்னிடம் கேளுங்கள்.
பிரபாகரன் அவர்களுக்கு ஸ்நானம் செய்வித்துப் படுக்கைக்கு அனுப்புகிறான்.
இந்த மிருதுவான மெத்தையில் எனக்குத் தூக்கம் வராது போலிருக்கிறதே ஜெயசிம்மா...
அப்படியானால் நாம் வழக்கப்படி கீழே படுப்போம். அதை பிரபாகரன் வந்து பார்த்தால் சந்தேகப்படாதிருக்க இப்படி ஒரு தந்திரம் செய்வோம்.
வீரசிம்மன் அரண்மனையை விட்டுப் போனாலும் அவன் கையாட்கள் அங்கிருந்தனர். நடுநிசியன்று ஒருவன் கையில் வாளுடன் புகுந்து...
ஜெயசிம்மா! அது என்ன சப்தம்? ஏதோ ஒரு உருவம் வேறு பதுங்கியபடி ஓடுகிறதே!
அதுவா..? வீரசிம்மனின் ஆள். என்னை வெட்டியதாக எண்ணித் தலையணையை வெட்டி விட்டுப் போகிறான்.
சோமு, நாம் அந்த உருவத்தைப் பின் தொடரலாம். ஏதாவது தகவல் கிடைக்கும்
ஜெயசிம்மா! நீ சந்தேகப்பட்டபடியே அந்த உருவம் யாருடனோ பேசுகிறது.
இன்னும் சற்று அருகே சென்று அவர்கள் பேச்சைக் கவனிக்கலாம்..வா...



திட்டப்படி ஜெயசிம்மனைத் தீர்த்துக் கட்டி விட்டேன். நீ உடனே போய் வீரர்களுடன் அவர்களை வரச்சொல்...
இருண்ட கானகத்தில் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். நீ கோட்டைக் கதவுகளைத் திறந்து வைக்கிறாயா?
எல்லாம் தயாராக இருக்குமென்று கூறு. வீரசிம்மனை விரைவில் வரச் சொல். தாமதித்தால் எல்லாம் நாசமாகி விடும்... ஹ... ஹ..!
நண்பா அவசரப்படாதே. அது ஆபத்தில் முடியும். உன் நாட்டுக்கு நேர்ந்துள்ள அபாயத்தை முதலில் நீக்க வேண்டும்.
அந்த அயோக்கியன் ஜெயசிம்மனை என்ன செய்கிறேன் பார்! ஒரே குத்தில்...
உடனே மந்திரியிடம் விஷயத்தைக் கூறிச் சேனாபதியிடம்....
அப்படியானால்...!
அது கூடாது. குழப்பம் சதிகாரர்களுக்குச் சாதகமாக முடியும். எச்சரிக்கையாகி விடுவார்கள். இங்கு உனக்கு எவ்வளவு விரோதிகள் இருக்கிறார்கள் என்று தெரியாத போது... இதைத் திறமையாகச் சமாளிக்க வேண்டும்...
வீரசிம்மனை விடும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு. நான் ஒரு அருமையான திட்டம் வைத்திருக்கிறேன். அவர்கள் எப்படி ஓடுகிறார்கள் பார்!
தொடரும்

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
—ரணசிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக் கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்குக் காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.


ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

83-DOL-2 A TM





படம் பிடிக்கும் போதினிலே

மௌனப் படம் பேசவும் பாடவும் ஆரம்பித்தபோது அது ஒரு மகோற்சவம் போல் எங்கும் ஒரு பரபரப்பை உண்டுபண்ணியது. பொதுவாக எல்லோரும் பேசும் படத்தை வரவேற்றாலும், சிலர் எதிர்க்கத்தான் செய்தார்கள். மௌனப் படம் பார்த்தபோது படம் பார்க்கிறவர்களுக்குப் பேச வாய்ப்பிருந்தது. படம் பேச ஆரம்பித்ததும் இவர்கள் பேச முடியாமல் போய் விட்டது. பேசுவதற்காகவே பல பெண்கள் கோயிலுக்குப் போவார்கள். மௌனப் படங்களுக்குப் போகிறவர்களும் உண்டு. பேசும் படம் வந்ததும் அவர்கள் பாடு திண்டாட்டமாய்ப் போய் விட்டது. பேசும் படங்களில் பேச்சையும் பாட்டையும் சேர்த்து நன்றாய்ச் செய்ய முடியுமா என்று பலர் வியந்தனர். பேசும் படம் வெளி வந்ததும் அந்த ஆச்சரியம் தானாகவே மறைந்தது. மக்கள் தாங்களாகவே அதை ரஸிக்கலாயினர்.

நம் நாட்டில் பிலிம் டெக்னீஷியன்கள் இல்லாத காலம் அது. ஆகவே, படப் பிடிப்பில் ஒலிப்பதிவுக்காக மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. படங்களில் நடிகர்களின் குரலில் கூட வேற்றுமையைக் காணலாம். ஆனால் அது படிப்படியாக அபிவிருத்தியடைந்து இப்பொழுது நம் தமிழ்ப் படங்களின் தரம் (டெக்னிகல் பகுதிகளில் மட்டும் தான்!) உயர்ந்து விட்டது.

ஒலிப் பதிவுக் கலையில் சிறந்த கலைஞர் ஸ்ரீ டி. எஸ். ரங்கசாமி மெஜஸ்டிக் ஸ்டூடியோவில் பிரதம ஒலிப்பதிவாளராக இருக்கிறார். இந்தத் துறையில் இருபத்திரண்டு ஆண்டுகள் எத்தனையோ படங்களுக்கு வேலை செய்து அநுபவம் பெற்றவர். ஒரு படத்துக்கு ஸ்ரீ ரங்கசாமி ஒலிப்பதிவாளர் என்றால் படாதிபதி, டைரக்டர், சங்கீத டைரக்டர், நடிக நடிகையர்கள் ஆகிய எல்லாருக்கும் ஒரு மன நிம்மதி ஏற்படும். அவ்வளவு சிறப்பாகத் தம் பணியைச் செய்வார்.

"ஸ்ரீ வி. எஸ். ராகவனிடம் தயாராகிப் பிரகதி ஸ்டுடியோவில் ரிக்கார்டிங் ஆர்டிஸ்டாகத் தொழிலை ஆரம்பித்தேன். பிறகு ரேவதியில் சேர்ந்து வேலை செய்தேன். அப்புறம் கோல்டன் ஸ்டுடியோவில் ஒலிப்பதிவாளராயிருந்தேன். இப்பொழுது ஏழு ஆண்டுகளாக மெஜஸ்டிக் ஸ்டூடியோவில், ஒலிப்பதிவு இலாகாவின் பொறுப்பு முழுவதையும் வகித்து வருகிறேன்."

"உங்கள் துறையில் விசேஷமாகக் குறிப்பிட்டுச் சொல்லும்படி ஏதாவது இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"சினிமா என்றாலே விசேஷம்தான். எந்தப் படமாயிருந்தாலும் மக்கள் அடங்கா ஆர்வத்துடன் பார்க்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்காத விதத்தில் படம் இருக்க வேண்டும். படத் தயாரிப்பு என்பது பல பேர்களுடைய ஒத்துழைப்பில் நடப்பது. தனி மனிதன் செய்யக் கூடிய காரியமல்ல. ஒலிப்பதிவு மட்டும் நன்றாயிருந்து என்ன பயன்? எல்லா அம்சங்களும் திருப்தி தருவதாக அமைந்தால் தான் ஒரு படம் மக்களின் நன்மதிப்பைப் பெற முடியும். மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் கலை சினிமா. அதன் மூலம் என்னத்தையாவது போதிக்க வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் கெடுதலைச் சொல்லக்கூடாது" என்றார். பிறகு, "கடமையைச் செய்ய முனைந்துவிட்டால் வேறு எதுவும் நினைவிருப்பதில்லை. சதா ஓய்வில்லாமல் வேலை செய்து கொண்டிருப்பதை விரும்புபவன் நான். என்னைப் பற்றி வெளியே தெரிவதைவிட என் பணியின் சிறப்பு மக்களால் உணரப்படுவதையே நான் விரும்புகிறேன்" என்றார்.

ஸ்ரீ டி. எஸ். ரங்கசாமியைப் போன்ற கர்மயோகிகளால்தான் கலை வளரும். —**விஜயம்**

இளைய பாரதத்தினர்

பிரசித்தி பெற்ற தொழிலதிபரிடம் தொழிலில் புக விரும்பிய நண்பர் கேட்டார்: ''உங்கள் வெற்றிக்குக் காரணம் என்ன?''

''நான் சமயமறிந்து தொழிலில் குதித்தேன். அது வெற்றியைத் தேடித் தந்து விட்டது.''

அவர் நண்பர் சமயம் எப்பொழுது வருமோ என்று குதித்துக் கொண்டேயிருக்கிறார்! குதிப்பதுதான் மிச்சம்! இன்னும் அவர் தொழில் தொடங்கவில்லை!

ஒரு தொழிலை ஆரம்பித்து நிர்வகித்து நடத்துவது அத்தனை கஷ்டம். இன்று மூன்று தொழிற்சாலைகளுக்குமேலுள்ள டி.டி.கே. நிறுவனத்தை இளைய பாரதத்தினர் வாசு திறம்பட நிர்வகித்து வருகிறார். மத்திய சர்க்கார் நிதிமந்திரி ஸ்ரீ டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரின் புதல்வர்களில் ஒருவரான இரு வாசுவுக்கு இரத்தத்தோடு நிர்வாகத் திறனும், வியாபார நுணுக்கமும் கலந்துவந்திருக்கின்றன.



வாசு தம் படிப்பை பி. எஸ். உயர்நிலைப்பள்ளியில் தொடங்கி இண்டர் படிப்பை லயோலாக் கல்லூரியில் முடித்தார். தந்தையைப் போலவே தனயனும் முதலில் வியாபாரத்தில் சேல்ஸ்மேனாகப் புகுந்தார். வியாபாரத் துறையில் புகுந்த வாசுவுக்குப் பத்திரிகைத் துறையிலும் அனுபவம் கிட்டியது. 'டெல்லி எக்ஸ்பிரஸ்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைகளில் உதவி ஆசிரியராகச் செயலாற்றியிருக்கிறார். 'யூ அண்ட் இ மூவிஸ்' என்ற சினிமாப் பத்திரிகையை நடத்தி யிருக்கிறார். இப்படிப் பத்திரிகைத் துறையில் சிலகாலம் தொண்டு புரிந்தாலும் இவருக்கு உள்ளூறத் தொழில் துறையில் முன்னேற அவா. அதற்காக லண்டனிலுள்ள வாட்டர்மன்ஸ் பேனா, இங்கி தயாரிப்புத் தொழிற்சாலையில் ஏழு மாதங்கள் பயிற்சி பெற்றார். ஸ்காட்லாந்தில் கடிகாரத் தொழில் நுணுக்கங்களைக் கற்றார்.

''நான் இன்ஜினீயர் இல்லை. ஆனால் தொழிலில் எனக்கு ஏற்பட்ட அனுபவஞானம் எனக்குத் தொழில்களை நிர்வகிக்கத் துணை செய்கிறது'' என்றார் வாசு அடக்கமாக.

''உங்கள் தொழிற்சாலைகளில் தயாராகும் பொருள்கள் அன்னியத் தொழில் கூட்டுறவோடு நடைபெறுகின்றனவா?''

''இல்லை. நம் நாட்டு இளம் இன்ஜினீயர்களின் திறமையில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அவர்களே தொழில்களைச் செவ்வனே நடத்தும் சாமர்த்தியம் பெற்றிருக்கிறார்கள். அப்படி ஏதாவது பயிற்சி அவர்களுக்கு வேண்டுமானால் அன்னிய நாட்டுத் தொழில் நிபுணர்களை வரவழைத்துப் பயிற்சியளித்து விடுகிறோம்!'' என்றார் வாசு.

உலகம் நவீன நாகரிகத்துக்கேற்ப வேகமாக மாறி வருகிறது. இந்த மாறுதல்களைத் தம் தயாரிப்புக்களில் கைக்கொள்வதால் தொழில் துறையில் இவர் வெற்றியுடன் முன்னேற முடிகிறது. வாசு தம் தொழில்துறையில் தான் பல மாறுதல்களைச் செய்து வருகிறார் என்பதில்லை. தம் கார், வீட்டு அலங்காரம் முதலியவற்றில் புதுப் புது மாறுதல்களைச் செய்து திருப்தியடைகிறார். தம் திருமண விஷயத்திலும் வாசு மன மாறுதலைக் காட்டியிருக்கிறார். இவர் ஸ்வீடன் நாட்டுப் பெண்மணி ஸ்டினாவை மணந்து கொண்டு குடும்பம் நடத்தி வருகிறார்.

கடிகாரங்கள், பொம்மை, இங்க், பேனா ஆகிய தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ள வாசு அவற்றை அழகிய முறையில் விளம்பரப் படுத்துவதில் தீவிர கவனம் செலுத்துகிறார். இது விளம்பர யுகமல்லவா?

— குண்டுமணி





இந்த போட்டிக்கான விதிகளை கவனமாகப் படியுங்கள் !

1. இந்திய யூனியனில் வசிக்கும் அனைவரும் இப் போட்டியில் கலந்து கொள்ளலாம். ஆனால் ஜான்ஸன் & ஜான்ஸன் கம்பெனி மற்றும் ஜே. வால்டர் தாம்ப்ஸன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் இவற்றில் ஊழியம் புரிபவர்கள் கலந்து கொள்ள முடியாது.

2. ஒவ்வொரு ஃபோட்டோவுடனும், ஒரு எகானமி அல்லது பெரிய டப்பா அல்லது இரண்டு மீடியம் டப்பாக்கள் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் வாங்கியதற்கு அத்தாட்சியாக கடையிலிருந்து பெற்ற அச்சிட்ட ரசீதையும் அனுப்பவேண்டும்.

3. ஒருவரே எத்தனை ஃபோட்டோக்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்; ஆனால் ஒவ்வொரு ஃபோட்டோவுடனும் மேற்சொன்னபடி ஒவ்வொரு ரசீது அனுப்பவேண்டும். ஒவ்வொரு ஃபோட்டோவின் பின்புறத்திலும் போட்டியில் கலந்து கொள்பவரது பெயரும் விலாசமும் தெளிவாக எழுதியிருக்க வேண்டும்.

4. பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாத குழந்தைகளின் ஃபோட்டோக்கள் மட்டுமே அனுப்பலாம். ஃபோட்டோக்களின் 3″×4″ அளவுக்குக் குறையாத 'பிளாக் அண்ட் ஒயிட்' பிரிண்ட்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஃபோட்டோக்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

5. ஒவ்வொரு ஃபோட்டோவும், தேர்வுக் குழுவால் கவனமாகப் பரிசீலிக்கப்படும். இந்தத் தேர்வுக் குழுவின் தீர்ப்பே முடிவானது. இது சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள முடியாது.

6. நீங்கள் அனுப்பும் ஃபோட்டோ/ஃபோட்டோக்கள் இங்கே கொடுத்துள்ள பிரவேசக் கூபனுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். அதிகப்படி கூபன்கள் தேவையானால் உங்களருகில் உள்ள டீலரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். பிரவேசக் கூபன்களை அனுப்பவேண்டிய விலாசம்:

ஜான்ஸன் & ஜான்ஸன் ஆஃப் இந்தியா லிமிடெட், தபால் பெட்டி எண் 6531, பம்பாய்–26. கவரின்மேல் 'பேபி கன்டெஸ்ட்' என்று குறிப்பிடவும்.


JWT-JJ-2575

அறிவுக்கனலே, அருட்புனலே!

74

ரா. கணபதி





போக வேண்டிய இடத்துக்கு அடிமேல் அடி வைத்துச் சென்று கொண்டேயிருந்தார் ஸ்வாமிஜி. அதை நினைவுக்குத் தந்து கொள்வது போல் மடத்தின் மாடி வராந்தாவிலிருந்து எட்டத்தில் திருஷ்டியைச் செலுத்துவார். அங்கே தோப்பு ஒன்று தெரியும். எத்தனையோ ஆயிரம் நினைவுகள் அடர்ந்து ஓங்கிய அநுபவத் தோப்புக்கு நிலைக்களனாக இருந்த தக்ஷிணேச்வரத்துத் தோப்புதான் அது. அநுபவத் தோப்புக்கு விதைகள் இட்ட மகாத்மாவையும் அந்த மகாத்மாவின் ஆத்மாவாக இருந்த பவதாரிணியையும் நினைத்துக் கொள்வார் ஸ்வாமிஜி. நனைந்த கண்களால் தோப்புக்கு மேலாகத் துழாவுவார். அங்கே பவதாரிணியின் ஆலய மாடங்கள் நீல விசும்புக்கிடையே தோன்றி அவரை மனோலயமடையச் செய்யும். 'உடம்பைச் சக்கையாகப் பிழிந்து உழைத்தாகி விட்டது. உள்ளத்தையும் கடைந்து கடைந்து இருக்கிற வெண்ணெயை யெல்லாம் எடுத்து உலகுக்குத் தந்தாகி விட்டது. பவதாரிணித் தாயே, எப்போது உன் மடியிலே வந்து விச்ராந்தியாக விழப் போகிறேன்?'

பிரிகிற தருணத்தில் பிறந்த நாள் ஆசை அபிலாஷைகள் மீண்டும் தோன்றும் என்று சொல்வார்கள். பசுவோடும், குரங்கோடும், தோகை மயிலோடும், மாடப் புறாவோடும் தோழமை பூண்டு விளையாடியவனல்லவா குழந்தை நரேன்? அதே மனப்பாங்கு இப்போது ஸ்வாமிஜியிடம் திரும்பிற்று. மடத்தைச் சேர்ந்த வாயில்லா ஜீவன்களிடம் அவருக்கு வாத்ஸல்யம் பெருகலாயிற்று. மாடுகளின் மேய்ச்சல் பூமியில் மடத்து நந்தவனம் 'ஊடுருவல்' செய்து விட்டால், ஆக்கிரமிப்புச் செய்து விட்டதாக பிரம்மானந்தரிடம் சண்டையிடுவார் ஸ்வாமிஜி.

பாகா என்ற நாய்தான் மடத்தின் எல்லாப் பிராணிகளுக்கும் தலைவன். ஒருமுறை அது ஏதோ போக்கிரித்தனம் செய்து விட்டது. அதைக் கங்கையின் அக்கரையில் கொண்டு போய் விட்டார்கள். அன்று இரவே அது பேலூருக்குச் செல்லும் ஒரு படகில் தாவிக் குதித்து மடத்துக்குத் திரும்பி நேரே ஸ்வாமிஜியின் அறை வாசலில் போய்ப் படுத்துக் கொண்டு விட்டது. அதற்குத் தெரியும், அவருக்கு மேல் அங்கே 'அப்பீல்' கிடையாது என்று. மறுநாள் காலை வெளியே வந்த ஸ்வாமிஜி பாகாவின் மீதுதான் தடுக்கிக் கொண்டார். அது வாலைக் குழைத்தது. அதன் எண்ணமும் பலித்தது.

நீரிலே மிதந்தால் ஹம்ஸம்; அதுவே நிலத்திலே மிதந்தால் ஆடு என ஸ்வாமிஜி எண்ணியிருப்பாரோ என்னவோ? தமது பேரன்புக்குப் பாத்திரமான ஆட்டுக்கு 'ஹம்ஸி' என்று பெயரிட்டிருந்தார். ஸ்வாமிஜி தமது தேநீருக்கு ஆட்டுப் பால்தான் சேர்ப்பது வழக்கம். பால் கறந்து கொள்ளுமுன் அந்தச் சிறிய ஜீவனிடம் உலகுக்கெல்லாம் தாய்மை பொங்கிப் பால் சுரப்பதை நினைத்துப் பார்ப்பார். "ஹம்ஸி, ஹம்ஸி! எனக்குக் கொஞ்சம் பால் தருவாயா?" என்று தாயிடம் குழந்தை போல் கெஞ்சிக் கேட்பார்.

அன்னையின் ரூபமாகவே கருதி, 'மாத்ரு' என்று அவர் பெயரிட்டிருந்த ஆட்டுக்குட்டி அவருக்குப் பரம செல்லம். அதைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவர் தள்ளாத உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடியாடுவதைப் பார்க்கும் போது இவரா சர்வ மத மகாசபையிலும், சமய சரித்திர மகாநாட்டிலும் மகத்தான பிரசங்கங்கள் புரிந்த தத்துவ ஞானி என்று அதிசயமாயிருக்கும். மாத்ருவுக்கு மடத்தில் சர்வ சுதந்திரமும் உண்டு. ஸ்வாமிஜி அதன் கழுத்தில் கட்டியிருந்த சலங்கைப் பட்டை குலுங்க அது அவருடைய அறைக்குள் தன்னிச்சையுடன் சென்று அவரது சோபாவிலேயே படுத்துத் தூங்கும். மாத்ரு ஸ்வாமிஜியின் கண் முன்பே கண்ணை மூடிவிட்டது. அப்போது அவர் ஆற்றொணாத் துயரம் அடைந்தார். "சரத்சந்திரா! நான் அன்பு செய்கிறவர்கள் அல்பாயுளில் போய்விடுகிறார்கள்" என்று துயரத்துடன் கூறினார். ஆண்டவன் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறானோ அவர்கள் அல்பாயுளில் மறைந்து விடுவார்கள் என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. ஸ்வாமிஜியே இதன் உண்மையை நிரூபிக்கப் போகிறாரே!

பல பசுக்களும், செம்மறியாடுகளும், வாத்துக்களும், நாரைகளும், ஒரு மானும் ஸ்வாமிஜியின் 'விசுவ குடும்பத்து' அங்கத்

தினர் ஆவர். இந்தக் குடும்பத்தைப் பற்றி ஸ்வாமிஜி குதூகலத்துடன் உறவு கொண்டாடி எழுதுவதைப் பாருங்கள்:

''மழையானது பரம சிரத்தையுடன் இறங்கி வந்திருக்கிறது. பெய்கிறதோ, பெய்கிறதோ அப்படிப் பெய்து இங்கே ஒரே வெள்ளக் காடாக ஆக்கி யிருக்கிறது. நதி மட்டம் உயர்ந்து கொண்டே வருகிறது. கரையெல்லாம் நீர் பெருகுகிறது. ஏரிகளும் குட்டைகளும் வழிகின்றன. மடத்தில் தேங்கியுள்ள தண்ணீருக்கு வடிகால் வெட்டுவதில் இவ்வளவு நாழி ஈடுபட்டுவிட்டு இப்போது தான் திரும்பினேன். என் பெரிய நாரை இருக்கிறதே அதற்கு ஏகக் கொண்டாட்டம். வாத்துக்களுக்கும் அப்படியேதான். பயந்தாங் கொள்ளி மான்தான் மடத்திலிருந்தே ஓடிப் போய், சில நாட்களுக்கு எங்களை யெல்லாம் ரொம்ப விசாரப்படுத்தி விட்டது. என் வாத்துக்களில் ஒன்று நேற்று துரதிருஷ்டவசமாக மாண்டு போய் விட்டது. ஒரு வாரமாகவே மூச்சு விட முடியாமல் அது தவித்துக் கொண்டிருந்தது. குறும்பு நிறைந்த என் குருபாயி ஒருவர், 'இந்தக் கலிகாலத்தில் காலம் தள்ளுவது ரொம்பவும் சிரமம் ஸ்வாமிகளே! சீதம் அதிகமாகி விட்டதற்காக வாத்துக்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதாயும், தவளைகள் மூக்கைச் சிந்திப் போடுவதாயும் அல்லவா ஆகி விட்டது!' என்கிறார்.....''

இந்தக் கடிதத்தில் குறிப்பாக ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பீர்கள். ஆஸ்துமாவுடன் அல்லல்பட்ட ஸ்வாமிஜி மழை நீருக்குக் கால்வாய் வெட்டிவிடும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்! காலில் செருப்புக்கூட அணியாமல் இப்படி அவர் ஈரத்தில் திரிவார். மேல் நாடுகளில் எதற்கெடுத்தாலும் சம்பிரதாயம் பார்த்துப் பழகியதற்கு மாறாக, மடத்துச் சூழ்நிலையில் தம் இஷ்டப்படி யெல்லாம் செய்து களித்தார்.

ஸ்வாமிஜி உடலில் பட்ட ஹிம்சையைப் பற்றி மீண்டும் மீண்டும் நினைப்பதும் எழுதுவதுமே ஹிம்சையாகத்தான் இருக்கிறது. ஆனால் சொல்லாமலும் விடுவதற்கில்லை. கம்பீரமான அவரது தோற்றம் நடுவில் நலிவு கண்டது ஒருவிதத்தில் வேதனை உண்டாக்கியதெனில், இப்போது நீர் சுரந்து அவருடைய உடல் உப்பியது அதைவிட வேதனையாயிருந்தது. எவ்வளவோ நடையாய் நடந்து பழகிய அவரது திருப் பாதங்கள் இப்போது அவர் ஓய்வு கொண்டிருக்கும் போதே வீங்கிப் போயின. ஒரு சிறிய ஸ்பரிசம்கூட அவரது உடலைத் துன்புறுத்திற்று. தூக்கம் என்பதை அவர் கண்டு ஆன நாட்கள் எத்தனையோ! ஆனாலும் அவர் சர்வேசுவரியிடம் உடம்பை ஒப்பித்து விட்டு, தாம் இன்பமாகவே இருக்க முயன்றார் — குருமஹராஜ் போலவே. இயன்ற மட்டும் மடத்துக்கு வருபவர்களை யெல்லாம் பார்க்க முடியாமல் பார்த்துப் பேச முடியாமல் பேசி அனுப்பினார்.

''ராமகிருஷ்ணர் 'காளி காளி' என்று சொல்லி வந்தாரே அது அவரது மறைவுக்கு மூன்று அல்லது நாலு நாளைக்கு முன்பு என் உடலையும் உயிரையும் பிடித்துக் கொண்டு விட்டது. அதுதான் என்னை ஓயாமல் வேலை வாங்குகிறது. நான் அமைதியாக இருக்கவோ என் சொந்த சுகங்களைத் தேடவோ அது என்னை விடுவதே இல்லை.....'' என்றார் ஸ்வாமிஜி ஒரு நாள். அப்படியே பழைய நினைவுகளில் நீந்தலானார்; நினைவு அலைகளை அருகிலிருந்தோரிடமும் வீசினார்.

''குருமஹராஜ் காலமாவதற்கு மூன்று அல்லது நாலு நாட்களுக்கு முன்பு நானும் அவரும் தனியாக இருந்தோம். அவர் என்னைத் தம் அருகே அழைத்தார். நான் அவர் முன் அமர்ந்தேன். அவர் என் கண்களையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அப்படியே சமாதி நிலை அடைந்தார். மின்சாரம் போன்ற ஒரு சூக்ஷ்மமான சக்தி, ஆற்றல் வாய்ந்த அலைகளாக அவரது உடலிலிருந்து புறப்பட்டது; அப்படியே எனக்குள் புகுந்தது. சிறிது போதுக்குப் பின் எனக்கும் வெளியுலகப் பிரக்ஞை அற்றுப் போயிற்று. சமாதியில் ஆழ்ந்துவிட்டேன். அந்த நிலையில் எவ்வளவு காலம் இருந்தேனோ அறியேன். நான் உணர்வுகளைத் திரும்பப் பெற்றபோது குருமஹராஜ் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். 'ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் மிகவும் மிருதுவான குரலில், ''என் நரேந்தர், என்னிடமிருந்த சகலத்தையும் உனக்குக் கொடுத்து விட்டேன்; நான் பக்கிரியாகி விட்டேன். இந்தச் சக்தியினால் நீ உலகில் மகத்தான காரியங்களைச் சாதிப்பாய்!'' என்றார்.

''அந்தச் சக்திதான் என்னை ஓயாமல் ஒழியாமல் வேலை புரியச் செய்கிறது. அதனுடைய சுழலிலே என்னைச் சுழற்றிச் சுழற்றி ஆட்டி வைக்கிறது. இந்த உடம்பு இருக்கிறதே, இது சும்மா உட்காருவதற்காகப் படைக்கப் படவில்லை.''

இப்படிப் பேசியதால் அவர் தம்மை ஆட்டி வைத்த அன்னையிடம் அலுத்துப் போனதாகப் பொருளில்லை. அனந்தகோடி மக்களிடையே



உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-I சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

ப்யூர் சில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீர்படி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/6/64

தம்மை ஒரு பொருட்டாகக் கருதித் தம் மூலம் லோக சேவை செய்தாளே என்று மகிழ்ச்சியே கொண்டார். நன்றியுடன் 1901-ம் ஆண்டு நவராத்திரியில் சாஸ்திரோக்தமான முறையில் துர்கா பூஜை நடத்தினார். பேலூரிலிருந்தும், தக்ஷிணேச்வரத்திலிருந்தும் நிறைய வேதியர்களை வரவழைத்துச் சிறப்பாக வெகுமானம் செய்தார். ஏராளமாக நிவேதனம் செய்து பிரசாதத்தை ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அளித்தார்.

ஸப்தமியன்று இரவு ஸ்வாமிஜிக்குக் காய்ச்சல் கண்டு விட்டது. மறு நாள் காலை அவரால் பூஜையைக் கண்ணால் காணக்கூட இயலவில்லை. தேவி மகிஷாசுரமர்த்தினி ஆவிர்பாவமான அஷ்டமியும் நவமியும் கூடுகிற சந்தி நேரம். அப்போது செய்யப்படும் உத்தமமான பூஜைக்கு ஸ்வாமிஜி தத்தித் தள்ளாடிக்கொண்டு வந்து சேர்ந்து விட்டார். ''ஓர் ஆசையும் என்னிடம் இருக்கக் கூடாது: உன்னைப் பூஜித்துப் பார்க்கக் கூட நான் ஆசைப்படலாகாது என நினைக்கிறாயா தேவி?'' என்று எண்ணினார். ஜகன்மாதாவின் பாதகமலங்களுக்கு மும்முறை புஷ்பாஞ்சலி செலுத்தினார்—அப்படி ஒரு புஷ்பமாகத் தானும் அவள் அடியில் விழும் நாளை அவாவியபடியே.

மறு நாள் அவரது உடல் நிலை சிறிது தேறிற்று. அன்றிரவு அம்பிகையின் முன்னால் அமர்ந்து பக்தி புளகிதமாக கானம் செய்தார் — ஆதியில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உள்ளுருகிப் பாடிய அதே பாடல்களைத் தான். கேட்டவர்களும் உருகினர். 'முன்பு இப்படியெல்லாம் தேவாமுதம் படைத்த அந்த ராமகிருஷ்ணரை இழந்தோம். அந்த ஒருவரின் இழப்பையே தாங்க முடியவில்லை. இப்போது, ராமகிருஷ்ணர் — விவேகாநந்தர் இருவராகவும் வாழும் இவரையும் இழந்தால்? அவருக்குப் பின்னரேனும் இவர் இருந்தார், இவருக்குப் பின்?' அடியார்கள் உள்ளம் குமைந்தது.

அன்னை புவனேச்வரி ஸ்வாமிஜிக்குச் சேதி சொல்லி அனுப்பினாள்—குழந்தையாக இருந்தபோது நரேனுக்குக் கடுமையான காய்ச்சல் கண்டதாம்; அப்போது குழந்தை பிழைத்தால் கல்கத்தா காளியின் சந்நிதியில் அங்கப் பிரதட்சணம் செய்விப்பதாக புவனேச்வரி பிரார்த்தித்துக் கொண்டாளாம். நரேனுக்கு நோவு தீர்ந்தது. ஆனால் அவள் வேண்டுதல் விஷயத்தை மறந்தே விட்டாள். இத்தனை ஆண்டுகளுக்குப் பின் இப்போது மகன் நோய்வாய்ப்பட்டுள்ளபோதுதான் அவளுக்கு அது நினைவு வந்தது. நேர்த்திக் கடன் தீர்க்க விரும்பினாள்.

ஸ்வாமிஜிக்கு அன்னையிடமிருந்து தகவல் வந்தபோது இலேசாக ஜுரம் கண்டிருந்தது. நடக்கப் போவதென்ன என்பதும் அவருக்குத் தெரியும். என்றாலும் தாயின் திருப்திக்காகக் காளி கட்டத்துக்குச் சென்றார். கங்கையில் முழுகினார். கல்கத்தாவுக்கே பெயரளித்திருந்த காளி மாதாவின் ஆலயத்துக்கு ஈர வஸ்திரத்துடன் சென்றார். சந்நிதியில் மும்முறை அங்கப்பிரதட்சிணம் செய்தார். அம்பிகையை வணங்கி எழுந்துவிட்டு, ஏழு முறை கோவிலை வலம் வந்தார். தேவிக்குத் தாமே ஹோமமும் செய்தார். இவையெல்லாம் நற்செயல்கள்தாமே? இவற்றுக்காக ஸ்வாமிஜி தமது தீர்க்காயுள் என்ற **வேறு ஒரு பயனை** எதிர்பார்ப்பாரா என்ன?

அவ்வாண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸில் கலந்துகொண்ட தலைவர்கள் ஸ்வாமிஜியைச் சந்தித்தனர். அவர்களோடு பாரதத்தின் புனர் வாழ்வு பற்றிப் பல திட்டங்களை ஆராய்ந்த ஸ்வாமிஜி வேத கலாசாலை ஒன்று நிறுவவும், ஸம்ஸ்கிருத கல்வியை வளர்க்கவும் காங்கிரஸ் முயற்சி எடுக்க வேண்டும் என்று யோசனை கூறினார். வேத தர்மத்தின் மீதே சுதந்திர அரசியல் எழும்ப வேண்டுமென அவர் ஆசைப்பட்டிருக்கிறார்!

ஆண்டு இறுதியில் ஸ்வாமிஜியின் இனிமை அவ்வளவும், எளிமை அவ்வளவும் பிரவகிக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன.

சமூகப் பிரஷ்டமான சந்தல வகுப்பைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் மடத்துத் தோட்டத்தில் வேலை செய்து வந்தனர். அவர்களுடைய துயரக் கதைகளையெல்லாம் ஸ்வாமிஜி அநுதாபத்துடன் கேட்பார்.

சந்தலர்களில் கேஷ்டா என்பவனிடம் ஸ்வாமிஜிக்கு விசேஷமான வாத்ஸல்யமுண்டு. அவன் அவரிடம் சற்றுத் தைரியமாகவே பேசுவான். ''சாமியாரே! நீங்கள் எங்களோடு பேசுவதால் எங்கள் வேலை கெட்டுப் போகிறதென்று மேஸ்திரி சாமியார் கோபித்துக்கொள்கிறார்'' என்றான் அவன் ஒரு நாள். 'மேஸ்திரி சாமியாரான' அத்வைதாநந்தரை ஸ்வாமிஜி கண்டித்து அந்த எளிய மக்களிடம் தயை காட்ட வேண்டுமென்று கூறினார்.

அவர்களின் துயரங்களைக் கேட்கும்போது ஸ்வாமிஜிக்குக் கண்களில் நீர் முட்டும். ''சாமியாரே, இனிமேல் நீங்கள் போகவேண்டியதுதான். உங்களை அழவைத்து எங்கள் கஷ்டத்தைச் சொல்ல மாட்டோம்'' என்பான் கேஷ்டா அன்போடு.

ஒரு நாள் ''உங்களுக்கெல்லாம் ஒரு விருந்தளிக்கிறேனே!'' என்றார் ஸ்வாமிஜி. ''ஹாஹும்! உங்கள் உப்பைச் சாப்பிட்டால் எங்கள் ஜாதி போய்விடுமே'' என்றனர் அந்தத் தொழிலாளிகள்.

அத்தனை ஜாதி அபிமானம் அவர்களுக்கு!

''உணவில் உப்புத்தானே சேர்க்கக்கூடாது? நான் உப்புப் பொடியை உங்களுக்குத் தனியாக அளிக்கிறேன்'' என்று பிடிவாதம் பிடித்தார் ஸ்வாமிஜி.

அவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இனிப்புக்களும், பூரியும், தயிருமாகத் தடபுடலாகச் சந்தலருக்கு விருந்து நடைபெற்றது பேலூர் மடத்திலே. ஸ்வாமிஜியே அக்கறையுடன் மேற்பார்வையிட்டார். வயிறார உண்டு வாழ்த்தினர் அந்த ஏழை மக்கள்.

ஸ்வாமிஜி உள்ளம் உருகினார். ''நீங்கள் எல்லாரும் நாராயணர்கள். உங்களுக்கு உணவிட்டு இன்று நான் ஆண்டவனுக்கே விருந்தளித்து விட்டேன்'' என்றார். தம் சீடரிடம், ''நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. வாஸ்தவமாகவே பிரபுவை அவர்களில் பார்த்

தேன். குற்றமற்ற இந்த எளியோரிடமின்றி ஐயனை வேறெங்கு காணமுடியும்?'' என்றார்.

ஸ்வாமிஜி வாரணாசி செல்ல வேண்டுமென்று விரும்பினார். முன்பு பல ஆண்டுகளுக்கு முன் அவர் விசுவநாதனை வணங்கித் திரும்புகையில், ''நான் சமூகத்தின் மீது இடியேறு போல் விழுகிற நாள் வந்த பின்தான் இந்த க்ஷேத்திரத்துக்குத் திரும்புவேன்'' என்று பிரதிக்ஞை செய்து கொண்டிருந்தார். இன்று அவ்வாறே சமூகத்தை ஒரு கலக்குக் கலக்கிய பின் காசிக்குச் சென்று விசுவேசுவரனுக்கு நன்றி கூற அவர் எண்ணியிருக்கலாம். அதோடு, வாரணாசியில் வதியும் வீரேசுவரனுக்கு புவனேசுவரி நோன்பு நோற்றுப் பெற்ற பிள்ளைதானே அவர்? தம்மை இந்த உலகுக்குக் கொண்டு வந்தவனையே தாம் உலகை விட்டு நீங்கவும் உத்தரவு கேட்க விரும்பினாரோ என்னவோ?

1902-ம் ஆண்டுத் தொடக்கத்தில் காசிக்குச் சென்றார். தேக சுகவீனத்தையும் எண்ணாமல் சுகமாக கங்கையில் ஸ்நானம் செய்தார். சாமானிய யாத்திரிகர்போல விசுவநாதன் ஆலயத்துக்குச் சென்று சென்று தொழுதார். சாதுக்கள் சங்கத்தில் சந்தோஷித்தார்.

சிறிது காலம் ரம்மியமாக வாழ்ந்து பேலூருக்குத் திரும்பினார்.

1902ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிவேதிதைக்கு இப்படி எழுதினார். ''உனக்கு எல்லாச் சக்திகளும் சித்திக்குமாக! ஸ்ரீ மாதாவே உனது கைகளும், கருத்துமாக இருக்கட்டும்! யாரும் தடுக்கவொண்ணாத அதிகமான சக்தியும், கூடுமானால் அதோடு எல்லையற்ற சாந்தியும் உனக்குக் கிட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்....

''ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் ஏதேனும் சத்தியம் இருக்குமாயின் அவர் உன்னை ஆட்கொள்ளட்டும் — என்னைச் செய்தாரே, அது போல! அல்ல...அதைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு!''

பரமஹம்ஸர் தமது சக்திகளை ஸ்வாமிஜியிடம் அளித்துச் சென்றது போல, விவேகானந்த ஸ்வாமியும் தமது சக்திகளையெல்லாம் சீடர்களுக்கு அளித்துவிட்டுக் கிளம்ப ஆயத்தமானார் — சக்தியை விட்டு சாந்தியை நாடி விட்டார் — என்பது புரிகிறதல்லவா?

ஒரு நாள் சரத் சந்திரரிடம் மகா வீரனாகிய ஹனுமந்தனை ஞானம், பக்தி, புத்தி, புலனடக்கம், சேவை எல்லாவற்றுக்கும் லட்சியம் என்பதை விளக்கியபடி ஸ்வாமிஜி மாடியிலிருந்து இறங்கினார். முன்வாயிலில் மாமரத்தடியே போட்டிருந்த கட்டிலில் வந்து அமர்ந்து கொண்டார். அவரது கண்கள் பளபளத்தன. உடல் முழுதும் ஆத்மிக சக்தி ஜ்வலித்தது.

''பிரம்மத்தை நீ எங்கே தேடுகிறாய்? எல்லாவற்றிலுமே அல்லவா அது உள்ளுறைகிறது? கண்ணில் தெரிகிற பிரம்மத்தை விட்டு எதெதிலோ மனத்தைச் செலுத்துகிறீர்களே, வெட்கம், வெட்கம்! இதோ உன் கண் முன்னால் உள்ளங்கை நெல்லிக் கனியாக பிரம்மம் இருக்கிறது. உனக்குத் தெரியவில்லை? **இங்கே — இங்கே—இங்கேயே பிரம்மம் இருக்கிறது.''**

உணர்ச்சியின் உன்னத சிகரத்திலிருந்து அருட்சுனையைப் பெரு நீர்வீழ்ச்சியாகப் பெருக்கினார் ஸ்வாமிஜி. அந்த வீழ்ச்சியில் பத்துக் கோடி வோல்ட் மின்சாரக் கனம் ஏறினாற் போன்ற வார்த்தைகள் பிறந்தன. மின்சாரத்தின் அழுத்தத்தில் அந்தச் சூழல் முழுவதும் பிரம்மமான ஒளி பாய்ந்தது. தினப்படி அலுவல்களில் ஈடுபட்டிருந்த சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். பெரிய விளக்குமாற்றால் வராந்தாவைப் பெருக்கிக் கொண்டிருந்த தோட்டியின் கையிலிருந்து விளக்குமாறு விழுந்தது. அவனுக்கும் நிஷ்டை கூடிவிட்டது. கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு, பூஜை புரிவதற்காக ஆலயப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த பிரேமானந்தர், படியேறும் நிலையிலேயே பரவசமாகிச் சிலையானார்.

கால் மணி நேரத்துக்கு பேலூர் மடத்தில் யாருக்கும் இந்த உலக நினைவே இருக்கவில்லை. அவர்களை இந்த உலகுக்கு ஸ்வாமிஜியேதான் மீட்டுத் தந்தார். பிரேமானந்தரைப் பார்த்து, ''பூஜைக்குப் போ'' என்று அவர் பிறப்பித்த உத்தரவுதான் மோன அலைகளைக் கலைத்து மற்றவர்களுக்கும் சுய உணர்வை ஊட்டியது.

ஸ்வாமி விவேகானந்தர் எய்தியிருந்த சத்திய சாக்ஷாத்காரத்துக்கு இந்த ஒரு சம்பவம் போதும்! எனினும் இத்தகைய அனந்தமான ஆற்றலைக் காட்டி உலகை மாற்றுவது அழகில்லை; மக்கள் சுயமாக முயன்று வெற்றி பெற உதவுவதோடு தம் பணி முடிய வேண்டியதே என அவர் கருதினார். பிரம்மம் அன்று மனிதனாயிற்று; இன்று அந்த மனிதன் பிரம்மமாகி விட்டதால் இங்கு அவனுக்கு வேலையில்லை. பிரம்ம சக்தியைக் கட்டுப்படுத்த இயலாத தாம் அதில் ஒன்றவேண்டியதுதான்!

தம் பணியின் நிறைவை ஒருநாள் ஸ்வாமிஜி எடுத்துக் கூறினார் :

''ஏற்கனவே இருப்பதை அழிப்பதல்ல என் பணி. அதனைப் புனர் நிர்மாணிப்பதே என் பணி. உலக நாடுகளின் சரித்திரங்களைப் பார். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு மகா புருஷன் அதன் தேசிய வாழ்வின் கேந்திரமாக விளங்குவான். அவனது கருத்துக்கள் மக்கள் யாவர் மீதும் சக்தியுடன் பாய்கின்றன. நீங்கள் யாவரும் புத்திசாலிப் பிள்ளைகள், என் சீடர்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் காரியத்தில் என்ன செய்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களுடைய ஒரு வாழ்வை மற்ற பலரின் வாழ்வுகளுக்காக நீங்கள் அளிக்கக் கூடாதா? வேதாந்தம் படிப்பதும், தியானம் பயில்வதும், இன்னோரன்ன பிறவும், அடுத்த ஜன்மத்தில் வைத்துக் கொள்ளக் கூடாதா? பிறருக்குச் சேவை செய்வதிலேயே இந்த உடல் அழியட்டும். அப்படியாகுமானால் நீங்கள் என்னிடம் வந்தது வீண் போகவில்லை என்று மகிழ்ச்சி கொள்வேன்'' என்றார்.

ஃ ஃ ஃ

ஸ்வாமிஜி வாரணாசியிலிருந்து திரும்பிச் சில நாட்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி நிகழ்ந்தது.

அன்று அவரால் அறையை விட்டு வெளி வரவே முடியாமல் பலவீனமாக இருந்தது.

ஜயந்தி விழாவை இருள் கப்பிக் கொண்டது. மடத்தினருக்கும், வைபவத்தில் கலந்து கொண்ட மற்றோருக்கும் இனம் தெரியாத நிலையாக இருந்தது!

ஸங்கீர்த்தன கோஷ்டியானது பூஜா மண்டபத்திலிருந்து வெளியேறி வந்தது. ஆவல் மீதூற ஸ்வாமிஜி படுக்கையிலிருந்து எழுந்து ஊர்ந்தபடியே வந்து ஜன்னல் கம்பி யில் சாய்ந்துகொண்டு கீழே பார்த்தார். கருணை வழிகிற அந்த வதனத்தைக் கீழே இருந்து கண்டவர்கள் தெய்வமே தங்களை நோக்குவதாகத்தான் எண்ணினர்.

ஃ ஃ ஃ

குருபாயிக்களின் வேண்டுகோளுக்கிணங்கி, கவிராஜ மகாநந்த ஸென் குப்தா என்ற ஆயுர் வேத நிபுணரிடம் வைத்தியம் செய்து கொள்ள ஸ்வாமிஜி இணங்கினார்.

உப்பு சேர்த்துக் கொள்ளக் கூடாது, நீரே பருகக் கூடாது என்று வைத்தியர் கடும் பத் தியம் விதித்தார். உடலைக் காத்துக் கொள் வதைவிட, உடலின் மீது மனத்துக்குள்ள கட்டுப்பாட்டைப் பரிசோதித்துப் பார்க்கவே ஸ்வாமிஜி உணவுக் கட்டுப்பாட்டை ஏற்றார். உலகுக்கெல்லாம் அமிருததாரை பொழிந் தவர் தொண்டை வறண்ட போதிலும் ஒரு துளி நீர் கூடப் பருக முடியாத நிலை ஏற் பட்டது.

ஸ்வாமிஜி சொன்னார்: ''இப்போது நான் விரும்பினாலும்கூட என் தொண்டையில் நீர் இறங்க மறுக்கிறது. இருபத்தியொரு நாட் களுக்கு நான் நீர் பருகாமல் இருந்தேன். பிறகு வாய் கொப்புளிப்பதற்காக நீரை வார்த்துக் கொண்டபோதுகூடத் தொண்டை யின் தசைநார்கள் தாமாகவே இறுகிக் கொண்டன; சொட்டு நீரும் அன்னக் குழா யில் இறங்காமல் இறுகின. உடம்பு என்பது மனத்தின் பணியாள்தான்.''

பரமஹம்ஸரின் உடல் அணுக்களும் உள்ள உணர்வும் ஒன்றிப் போய், பணத்தின் ஸ்பரிசம் பட்டாலும் அவருக்குப் பற்றி எரிந்தது நினைவு வருகிறதல்லவா? நமது தேசத்தின் புராதனச் சிற்பங்களில் எப்படி அங்கங்களும், சிந்தனைகளும் ஒன்றி லயிக்கின்றனவோ அவ் வாறே நிருநூர்த்தங்களாக வாழ்பவர்கள் தான் மகான்கள்.

உடல் எவ்வளவு க்ஷீணித்தாலும் ஸ்வாமிஜி யின் அறிவு எப்போதும் போல் தீட்சண்ய மாகவே இருந்தது.

'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்ற அறிவுக் களஞ்சியத்தின் இருபத்து ஐந்து பாகங்களை ஸ்வாமிஜியின் அறையில் கண்ட சரத் சந்திரர், ''ஒரு வாழ்நாள் போதுமோ இவற்றைப் படித்து முடிக்க?'' என்று கேட்டார்.

''நீ என்ன சொல்கிறாய்? நான் இந்தச் சிறிது காலத்துக்குள் பத்துப் பகுதிகளைப் படித்துவிட்டேன். அவ்வளவையும் நினைவில் வைத்திருக்கிறேன்'' என்றார் ஸ்வாமிஜி.

சரத்துக்கு ஒரு குதூகலம் ஏற்பட்டது.

அந்தப் பத்துப் பகுதிகளையும் எடுத்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு புத்தகத்தி லிருந்தும் ஸ்வாமிஜியைக் கேள்விகள் கேட் டார். நுணுக்கமான, சிக்கலான விஷயங்கள் உள்பட ஸ்வாமிஜி அற்புதமாக விடை பகர்ந் தார்! பிரம்மசரியத்தின் சக்தி அது! பிரம்ம சரியத்தைப் பற்றி சரத் சந்திரருக்கு விளக்க லானார் ஸ்வாமிஜி.

இச்சமயத்தில் அங்கு வந்த பிரம்மாநந்த ஸ்வாமி சரத்சந்திரரிடம், ''உனக்குக் கொஞ்ச மேனும் சுவு இரக்கம் இருக்கிறதா? ஸ்வாமி ஜியை எவ்வளவு பேச வைத்துவிட்டாய்? அவருடைய சிகித்சை முறையை மறந்து விட்டாயா?'' என்று சினந்துகொண்டார்.

ஸ்வாமிஜிக்கும் சினமேற்பட்டது. ''உங்கள் சிகித்சை இங்கு யாருக்கு வேண்டிக் கிடந் தது? இவர்கள் என் மைந்தர்கள். இவர் களுக்கு உபதேசிப்பதில் என் உடல் அழிந்து போனாலும் எனக்கு அதுவும் ஒரு பொருட்டு இல்லை'' என்றார்.

ஃ ஃ ஃ

1902ம் ஆண்டு மே மாதம் பிறந்தது..

யாத்திரைக்கு மும்முரமாக ஆயத்தம் செய்து கொண்டிருந்தார் ஸ்வாமிஜி. உள்



நாட்டிலிருந்த சந்நியாசிச் சீடர்கள் யாவருக்கும் கடிதம் எழுதித் தம்மிடம் வரவழைத்துக் கொண்டு, சிறிது நாட்கள் அன்பு பொழிந்து விட்டுத் திரும்ப அனுப்பினார். அவர் விடை கொடுத்தபோது தங்களை அவர் எதற்கு வரவழைத்தார் என்று அறியாமலே அவர்கள் பேதையராகத் திரும்பினர்.

மடத்தின் விவகாரங்களில் கூட ஈடுபடாமல் ஒதுங்கி நிற்கலானார் ஸ்வாமிஜி. அப்படி ஒதுங்கும் அழகு பெரியவர்களுக்குத்தான் தெரியும். எப்படியும் மற்றவர்களே காரியங்களை நடத்த வேண்டிய தருணம் நெருங்கிக் கொண்டிருக்கிறதே! ''எப்போதும் சிஷ்யர்களுடன் இருப்பதால் குரு அவர்களைக் குட்டிச்சுவராக்கி விடுகிறார்! சிஷ்யன் பயிற்சி பெற்று விட்ட பின் குரு விலகவேண்டியதுதான்'' என்றார் ஸ்வாமிஜி. சீடர்களுக்கு நெஞ்சு நொந்தது.

ஒருநாள் ஸ்வாமிஜியுடன் அவர்கள் தக்ஷிணேசுவரத்து நாட்களைக் கொட்டி அளந்து கொண்டிருந்தார்கள். யாரோ ஒருவர் சட்டென்று, ''ஸ்வாமிஜி, தாங்கள் யார் என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டீர்களா?'' என்று கேட்டார். ஸ்வாமிஜி பளிச்சென்று ''ஓ! அறிந்து விட்டேன்'' என்றார். கனத்த மேகம் போல் அங்கு மௌனம் சூழ்ந்தது.

''நரேன் தன்னை அறிந்து விட்டால்...'' — குருநாதன் கூறிய சொற்கள் சீடர்களின் உள்ளத்தைத் துளைத்தன.

ஜூன் மாதம் ஒவ்வொரு நாட்களாகக் கமந்து தள்ளிக் கொண்டிருந்தது. மாதக் கடைசியில் ஒரு நாள் ஸ்வாமிஜி சுத்தானந்தரைக் கூப்பிட்டு ''பஞ்சாங்கம் கொண்டு வா'' என்றார்.

பஞ்சாங்கம் கொண்டு வரப்பட்டது.

ஸ்வாமிஜி ஒவ்வொரு நாளாகப் பார்த்துச் சிந்திக்கலானார்.

எதற்கு நாள் பார்த்தார் என்று அப்போது யார் அறிந்தார்கள்?

தக்ஷிணாயனம் பிறந்துவிடக் கூடாது என்று நாள் பார்த்திருக்கிறார்.

ஜகன்மாதாவுக்கு உகந்த சுக்கிரவாரமாகவும் பார்த்துக் கொண்டு விட்டார்.

அது அவரது பெருமையைப் பாருக்குப் பரப்பிய அமெரிக்காவின் விடுதலை நாளாகவும் அமைந்ததில் ஒரு பொருத்தமுண்டல்லவா?

ஜூலை முதல் தேதி பிரேமானந்தருடன் உலவிக் கொண்டிருந்த ஸ்ரீமத் விவேகானந்தர் கங்கைக் கரையில் ஓரிடத்தை அவருக்குச் சுட்டிக் காட்டினார். ''இந்த உடலை அங்கு...'' என்று அவர் கூறியபோது பிரேமானந்தருக்குத் தம்மீதே அவர் அனலை வாரிக் கொட்டியது போலிருந்தது.

அன்றைக்கு ஏகாதசி. ஸ்வாமிஜி உபவாசமிருந்தார்.

சகோதரி நிவேதிதை தனது பெண் பள்ளி விஷயமாக அவரிடம் ஏதோ ஆலோசனை கேட்க வந்தாள். கர்மம் முழுவதையும் கழித்துவிட்ட ஸ்வாமிஜி ''குருபாயிக்களைக் கேட்டுக்கொள்'' என்று கூறினார். ஆனால் அன்பை என்றும் கழிக்க முடியாதே! எனவே தாம் உபவாசமிருந்த போதிலும் அவளை உண்ணச் சொன்னார். தாமே பரிமாறினார். வேக வைத்த பலா விதைகளையும் உருளைக் கிழங்கையும், அன்னத்தையும், குளிர்ந்த பாலையும் தமது கரத்தாலேயே அளித்தார்.

அவள் உண்டு முடித்ததும் அவரே அவள் கைகழுவுவதற்கு நீர் வார்த்தார்; அவளது கையைத் துடைத்துக் கொள்ளத் துவாலையை நீட்டினார். ராஜஸூய யாகத்தில் வாசுதேவன் விருந்தினரின் பாதங்களைக் கழுவிய எளிமை நினைவு வருகிறதல்லவா?

''ஸ்வாமிஜி, நான் தங்களுக்குச் செய்ய வேண்டிய உபசரணையைத் தாங்கள் எனக்குச் செய்கிறீர்களே!'' என்றாள் நிவேதிதை.

''ஏன், இயேசுநாதன் தனது சீடர்களின் பாதங்களையும் கழுவவில்லையா?'' என்று கேட்டார் ஸ்வாமிஜி.

'ஆனால்..... ஆனால்.... அது அவர் இறுதியில் செய்த காரியமல்லவா?' என்ற வார்த்தைகள் நிவேதிதையின் தொண்டையில் மோதித் துயரத்தில் உடைந்தன.

அந்த நாளும் ஏனோ வந்தே விட்டது!

1902ம் ஆண்டு ஜூலை நாலாந் தேதி, வெள்ளிக்கிழமை!

வழக்கத்தைவிட முன்னதாகவே எழுந்திருந்தார் ஸ்வாமிஜி.

சிறிது தேநீர் உட்கொண்டு பூஜாக்ருகத்துக்குச் சென்றார்.

புழுக்கமான இடத்தில் தியானம் செய்து வழக்கமில்லாத ஸ்வாமிஜி அன்று ஏனோ பூஜாக்ருகத்தின் கதவுகளையெல்லாம் அடைக்கச் சொல்லி ஏகாந்த தியானத்தில் அமர்ந்தார். ஆதிக்கருப்பையின் இறுக்கத்துக்கு ஆசைப்பட்டுவிட்டாரே!

வழக்கத்தைவிட வெகு நீண்ட காலம் தியான சமாதியில் ஆழ்ந்திருந்தார் ஸ்வாமிஜி.

தியானத்தை விடத் தியாகம் பெரிது எனக் கருதி யிருந்த நாட்களெல்லாம் முடிந்து போகப்போகும் தினமல்லவா அது?

அன்று தியானத்தில் அவர் என்னவெல்லாம் கண்டாரோ, கேட்டாரோ யார் அறிய முடியும்? தேவியையும் குருநாதனையும் சம்மதம் கேட்டிருப்பாரோ?

தியாகம் வேண்டியது செய்தாயிற்று. இனி செய்வதற்கு எதுவும் இல்லை. இந்தியாவுக்கு ஹிந்து மதத்தையும், உலகத்துக்கு ஆத்மிகத்தையும் நிச்சயமாகக் காத்துக் தந்தாகிவிட்டது. இனி ...? அம்பிகை அங்கீகாரம் தந்து விட்டாளா?

தியானத்திலிருந்து கலைந்த பின்னும் அவள் நினைவாகவேதான் இருந்தார் ஸ்வாமிஜி.

பூஜாக்ருகத்தின் படிகளில் இறங்கும் போது அவரையும் அறியாமல், அம்பிகை மீதமைந்த கமலாகாந்தரின் ஓர் அற்புதப் பாடலை அவரது அமுதக் குரல் இசைத்தது.

காளி என் அன்னை கருநிறத்தவளா?
மனக் கமலங்களை மலர்ந்திடச் செய்யும்
திவ்விய ஒளியாய்த் திகழும் திகம்பரி
கருநிறத்தாள்போல் காணினும் மெய்யாய்
காளி என் அன்னை கருநிறம்தானா?
கரியவள் என்றே காசினி கூறினும்

நம்புவதில்லை இந்நேயன் நெஞ்சகம்
வெண்மையாய் விளங்கும் விழுப்பொருள்
அவளே
செம்மையாய் நீலமாய் சொக்கத் தங்கமாய்
பலப்பல நிறத்தில் பலவாய் வருவாள்
காளி என் அன்னை கருநிறத்தவளா?

காளி என் அன்னை யாரென அறியேன்
ஆயுள் எல்லாம் இதை ஓர்ந்து அயர்ந்தேன்
புருஷன் அவளே; பிரகிருதி அவளே
பரவெளியான பராசக்தி அவளே
சிற்றறிவால் இதைச் சிந்தனை செய்தால்
கமலாகாந்தன் கலங்கிடுகின்றான்.

ஒரே ஒளி ஏழு வண்ணங்களும் ஆவது போல் ஒரே பொருள்தான் எல்லாமாகி இருக்கிறது. எட்ட இருந்து காணும் ஆகாய நீலமும், கடல் நீலமும் அண்மையை அடைந்தால் நிறமற்றுப் போவது போல் காளியின் நீலமும் அவளை அண்டினவருக்கு நிறமற்ற நிர்க்குணமாகும்.

கருப்பாவது, வெளுப்பாவது? வெளிர் நிறங்களே அடர்ந்தால் கருப்பாக வேண்டியது தான். அவ்வாறே கருப்பு அடர்ந்தாலும் வெளுப்பாக வேண்டியதுதான். வஸ்திரத்தில் நீலத்தைச் சேர்த்துத் துவைத்தால் வெண்மை கூடுதலாகிறது. அடர்ந்துள்ளபோது வெண்மையாக உள்ள பால் நீர்த்து ஓடும் போது நீலமாகிறது. அடர்ந்த கருமுகில்கள் இளகும் போது நிறமற்ற நீராக மழை பொழிகின்றன. வெண்மை பிறந்த சத்துவத்துக்கு மூர்த்தியான நாரணன் சியாமளனாக விளங்குகிறான்; சியாமளம் பிறக்கும் தமோ மூர்த்தியான ருத்திரனே வெண்சங்கமாக இலங்குகிறான். எல்லாம் ஒன்றுதான்! ஏகம் ஸத்!

வண்ணமற்ற பரம்பொருளே கருப்பாகும் போது காளியாகிறது; பசுமையாகும்போது பார்வதியாகிறது; வெண்மையாகும்போது கௌரியாகிறது; செம்மையாகும்போது அருணையான லலிதையாகிறது; பொன்னிற மாகும் ஹைமவதியாகிறது.

இத்தனை ரூபங்களிலும் கருத்த காளிக்குத் தான் தனியிடம்! அத்வைதத்தின் ஒருமைக்குக் கருமை மிகவும் நெருக்கம். ஒளியிலே பலவாறாகக் காணும் உலகப் பொருள்களெல்லாம் நிசியின் கருமையில் பேதமின்றி ஒன்றுகின்றன அல்லவா? நிசிதான் தேவி என்று வேதமே கீதமிசைக்கிறது. தத்வார்த்தமான ஓர் இரவும் உண்டு. அதுவே ஞானியின் பகல் என்கிறான் பகவான். உலகம் காணாத அந்தக் கருமைதான் காளி.

சிற்றறிவால் இப்படி எவ்வளவோ சிந்தனை செய்யலாம். ஆனால் அறிவைத் தூக்கி எறிந்து விட்டு அநுபவிக்கத் தொடங்கினால் கலக்கமெல்லாம் தெளியும். அப்படித் தெளிந்து விட்டார் ஸ்வாமிஜி: அம்பிகையைத் தெரிந்து விட்டார். பயங்கரத்தை வழிபடத் தம்மைப் பழக்கிக் கொண்டவர் பயங்கரமேதான் ஆனந்தம், கருமையேதான் வெண்மை என்று புரிந்து கொண்டு விட்டார். ஒளிந்து விளையாடும் அன்னையைக் கண்டு பிடித்து விட்ட பெருமையுடன் ஆத்ம கானம் செய்தார்.

தம்மையறியாமலே பாடியது போல், பாடி முடிந்ததும் தம்மையறியாமலே பேசிக் கொண்டார்: ''காளியை மட்டும்தானா? இந்த விவேகானந்தனையும் யார் புரிந்து கொண்டார்கள்? அவன் என்ன செய்தான் என்று யார் அறிந்தார்கள்? இன்னொரு விவேகானந்தன் இருந்தால் அவனால்தான் புரிந்து கொள்ள முடியும். இன்னும் ஒரு விவேகானந்தன் என்ன? காலவெள்ளத்தில் எத்தனையோ விவேகானந்தர்கள் தோன்றத் தான் போகிறார்கள்!''

பல காலமாகத் தனித்தே உண்டு வந்த ஸ்வாமிஜி அன்று குருபாயிக்களுடனும், மற்ற சிடர்களுடனுமாகச் சேர்ந்து போஜனம் செய்து களித்தார். மிகவும் ரசித்துச் சாப்பிட்டார். அநுபவிக்க வேண்டியதை' யெல்லாம் அநுபவித்துத் தீர்த்தாக வேண்டுமல்லவா? ''இன்றுபோல் என்றும் இருந்ததில்லை'' என்றார் ஸ்வாமிஜி உண்டபடியே.

பிற்பகல் ஸ்வாமிஜி பிரம்மசாரிகளுக்கு சம்ஸ்கிருத வியாகரணம் போதித்தார். மூன்று மணி நெருடலான பொருளைப் போதித்த போதிலும் சிறிதுகூட அலுப்புத் தட்டவில்லை. வேடிக்கைக் கதைகள், விகடத் துணுக்குகள் இவற்றின் மூலமே சூத்திரங்களை நினைவு கொள்ளப் புதுப் புது வழிகளைச் சொல்லிக் கொடுத்தார் ஸ்வாமிஜி.

காளி மாதா காலத்தை அளந்து போட்டுக் கொண்டே யிருந்தாள். ஒரு புனித வாழ்வுக்குக் கடைசிக் கனக் கோலைப் போட்டுக் கொண்டிருந்தாள்.

ஸ்வாமிஜி பிரேமாநந்தருடன் உலவப் புறப்பட்டார். இன்று உடலில் அசாதாரணமான தெம்பு இருந்தது போலும். மடத்தைத் தாண்டி பேலூர் கடைத் தெரு வரையில் சென்றார். பல விஷயங்களைப் பற்றிப் பேசினார். முக்கியமாக வேதத்தைப் பிரசாரம் செய்ய வேண்டியது குறித்து நிறையச் சொன்னார். வேதத்துக்காக ஒரு கல்லூரி தொடங்க வேண்டும் என்ற தமது விருப்பத்தைப் பற்றியும் ஆர்வமுடன் குறிப்பிட்டார்.

''வேதத்தைப் பயிலுவதால் என்னவிசேஷ நலன் கிடைக்கும் ஸ்வாமிஜி?'' என்று கேட்டார் பிரேமாநந்தர்.

''மூடநம்பிக்கைகள் அழியும்'' என்றார் ஸ்வாமிஜி பளிச்சென்று.

மடத்துக்குத் திரும்பியபின் சாதுக்களிடம் சிறிது போது பேசிக் கொண்டிருந்தார். தேசங்கள் பல உன்னதமாக எழுந்ததையும் வீழ்ந்ததையும் பற்றிப் பேசினார். ''ஆனால் இந்தியா அமரத்துவம் பெற்றது. ஆண்டவனைத் தேடுவதிலேயே ஈடுபட்டால் இந்தியா என்றும் வாழும். ஆனால் அரசியலையும் சமூகச் சச்சரவுகளையும் தேடிப் போனால் இந்தியா மடிந்து விடும்'' என்றார்.

இறுதி போதனையை உள்ளத்தில் இருத்திக் கொள்வோமா?

மாலை என்ற மாலையைக் கையிலேந்தி இரவை எதிர்பார்த்து நின்றாள் பூமித் தாய்.


...THEY THINK ALIKE
...THEY MUNCH ALIKE
SATHE'S WHAT THEY LIKE
SATHE
BISCUITS
SATHE BISCUIT & CHOCOLATE CO. LTD., POONA-2.

பேலூர் மடத்தின் பூஜாக்கிருகத்தில் மணிகள் ஒலித்தன. அந்த ஒலியில் விளக்கம் பெற்ற மோனத்தில் கரைய விரும்பினார் ஸ்வாமிஜி. தமதறைக்குச் சென்றார்.

''நான் கூப்பிடும் வரையில் யாரும் வர வேண்டாம்'' என்று கூறி விட்டு கங்கையை நோக்கி அமர்ந்தார். தியானம் புரியலானார்.

உள்ளுக்குள்ளே புரண்டு கொண்டிருந்த கங்கையானது சமுத்திரத்தில் பூரணமாகக் கலந்து தன் உருவை இழக்கத் துடித்துக் கொண்டிருந்தது. கங்காநதி அவ்வாறு தானும் கடலில் கலந்து கொண்டே தான் இருக்கிறாள். அதே போதில் உலகிலும் ஓடி மக்களுக்கு வளமை கூட்டுகிறாள். ஸ்வாமிஜியும் அம்பிகையை இடைவிடாது பற்றியபடி உலக சேவை புரிந்தாயிற்று. இனி அம்பிகையை மட்டும் பற்றிக் கொள்ள வேண்டியதுதான்! எத்தனை எத்தனை அலைகளை, சுழல்களை, வெள்ளங்களை வீசியாயிற்று! போதும், பவதாரிணித் தாயே போதும்!

ஏழு மணியிலிருந்து எட்டு மணி வரை நிஷ்டை புரிந்தார் ஸ்வாமிஜி.

சீடர் ஒருவரைக் கூப்பிட்டார். ''எல்லாக் கதவுகளையும் திறந்து விடு. என் தலைக்குக் கொஞ்சம் விசிறு'' என்றார்!

உடம்புக்கு நோவு வந்து தீர்ந்து போகும் சமயத்தில் வேர்த்து விடும். உடம்பையே நோவாகக் கருதிய ஞானிக்கு அந்த நோவு முடியுமுன் வேர்த்து விட்டதா?

ஸ்வாமிஜி தமது படுக்கையில் இளந்தென்றல் போல் நிதானமாகப் படுத்தார்.

சிறிது நேரத்துக்குப் பின், ''விசிறியது போதுமப்பனே! என் காலைக் கொஞ்சம் தேய்த்து விடுவாயா?'' என்றார்.

ஆஹா, சீடருக்குப் பாதம் பாலித்து விட்டார்!

ஒரே அமைதி.

அவர் உறங்குவதாகவே எண்ணினார் சீடர்.

ஒன்பது மணிக்கு ஸ்வாமிஜியின் கைகள் சிறிதே நடுங்கின. ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். இந்த மண்ணுலகத்தில் வீசும் காற்றை—மண்ணுலகின் பாவமும் பாவனமும் படாமல் தானாக விளங்கும் பவன அலையை—கடைசி முறையாக உள்ளுக்கிழுத்துக் கொண்டார்.

சென்னையிலே ஸ்ரீ ராமகிருஷ்ணானந்த ஸ்வாமிகள் அப்போது ஜபம் புரிந்து கொண்டிருந்தார். அவரது சுவாசகோசங்களில் நிரம்பியிருந்த பிராண வாயுவில் பிராண நாதனின் குரல் கேட்டது:

''அன்பா, நான் போய் வருகிறேன்.''

ஆம்.... ஸ்வாமி விவேகானந்தர் உள்ளுக்கு இழுத்த அந்த நீண்ட மூச்சு வெளியேறும் போது.....

பூ உடலிலிருந்து உயிர் மணம் வெளியேறி விட்டது!

சுமார் முப்பத்தொன்பதரை ஆண்டுகள் உலகில் மணந்த விவேகானந்த மணம் அன்னையின் அடிமலரில் — அவளோடு ஒன்றிய குருமஹராஜின் அடிமலரில் லயித்து விட்டது.

நாதப் பிரம்மத்தின் சப்த ஸ்வரங்களாகிய சப்த ரிஷியரில் ஒருவரிலிருந்து உதித்து



கள்ளத்தனமாகக் குருஷேவைக் கடத்திக் கொண்டு போகும் முயற்சி தோல்வி.

—ஸ்டாக் ஹோம் செய்தி

கடத்திக் கொண்டு போக முயன்றவர்கள் தங்களை என்ன கார்டன் மக்லிஸ்டர், ஜான் பில்பி ஆகியோருக்குச் சமமாக எண்ணிக் கொண்டார்களா அல்லது ஸ்வீடிஷ் போலீஸாரைத்தான் நமது ஸி. ஐ. டி.க்களுடன் ஒப்பிட்டு நோக்க முடியுமா?

ஃ ஃ ஃ

வாஹினி ஸ்டுடியோவில் தீ! —தலைப்பு

ஏதோ ஷூட்டிங்குக்காகத் தீ மூட்டி இருப்பார்கள் என்று யாரும் அசிரத்தையாக இருந்து விட்டிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

ஃ ஃ ஃ

இந்தியாவுக்கு அதிகமான அயல்நாட்டு டூரிஸ்டுகளைக் கவர்ந்திழுக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இதற்காக சர்க்கார் தரப்பில் இரண்டு புதிய பெரிய கார்ப்பொரேஷன்கள் நிறுவப்படும்.

—செய்தி

உற்பத்தியைப் பெருக்காமல், எதையுமே ஏற்றுமதி செய்யாமல் அந்நியச் செலாவணி சம்பாதிக்க ஒரே வழி இதுதானே?

உலகில் உலவிய சுகந்தம் நிசப்த நிலையில் நிறைவு கண்டு விட்டது!

கருணையைப் பொழிந்த கடை விழிகளிலும், அமுத வாக்கைப் பொழிந்த இதழ்க் கடைகளிலும், எங்கெங்கும் தெய்விகத்தை மோந்த நாசி நுனியிலும் செந்துளிகளைத் தேனாக அரும்பு கட்டி விட்டு மணம் பிரிந்தது!

கவிம் புராணம் அநுசாஸிதாரம்
அணோரணீயாம்ஸம் அநுஸ்மரேத்ய: |
ஸர்வஸ்ய தாதாரம் அசிந்த்ய ரூபம்
ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத் ||
ப்ரயாணகாலே மனஸாசலேன பக்த்யா
யுக்தோ யோகபலேன சைவ |
ப்ருவோர் மத்யே ப்ராணமாவேச்யஸம்யக
ஸ தம் பரம் புருஷம் உபைதி திவ்யம் ||


யாவும் அறிந்தவனும், யாவற்றுக்கும் முந்தியவனும், யாவற்றையும் ஆள்பவனும், அணுவினும் நுணுகியவனும், வினைப் பயனை வழங்குபவனும், அதிதற்கரிய உருவனும், ஆதித்ய வண்ணனும், இருளுக்கு அப்பாற்பட்டவனுமான அவனை, எவன் தனது இறுதிக் காலத்தில் பக்தியுடன், அசையா மனதுடன் யோக பலத்தால் புருவ மத்தியில் பிராணனை நிலைநாட்டி ஸ்மரிக்கிறானோ அவன் மரிப்பதில்லை; அந்தப் பரம புருஷனையே அடைகிறான்.

அருஞ்செயல்களையும் நாடகமாக்காமல் இயல்பாக வாழ்ந்த மகான், யோக பலத்தால்

தேக வியோகம் செய்ததையும் நாடகமாக்காமல் இயல்பாக நிறைவேற்றி விட்டார்.

ஸ்வாமிஜி யோகத்தில் நிலைத்துத் தமது தேகத்தைத் தியாகம் செய்ததற்கு அடையாளமாகவே அவரது கடைவிழிகளிலும், இதழ்க்கடையிலும், நாசி நுனியிலும் செந்துளிகள் அரும்பி நின்றன.

ஃ ஃ ஃ



செக்கர் வானத்தின் ஒளியில் அலைகளைச் செந்துளிகளாகச் சரித்துக் கொண்டிருந்தாள் கங்கா மாதா. அன்று பிற்பகல் குருபாயிக்கள்—முக்கியமாக நிவேதிதை—தனது கரையில் குமுறியதை எண்ணித் தானும் குமுறினள். குமுறிய நிவேதிதையின்மீது குளிர்ந்து வீசிய காற்றானதுஅக்கினியில் ஒன்றிக் கொண்டிருந்த ஞானக்கினியின் துவராடையை ஏந்தி வந்து அவள்மீது போர்த்தியதை எண்ணினள் கங்காதேவி. துயரங்களே இல்லாத துறவற சாந்த நிலைதன்னையும் போர்த்தினற் போல் உணர்ந்தாள்.

சந்நியாசிக் கோலம் கொண்ட சந்நியா கால வானத்தின் நீண்ட நீண்ட மூலிகள் கங்கை நதியில் நிழல்களாக முழுகி அவளுக்குக் காஷாயம் அணிவித்தன.

அதோ கங்கைக் கரையிலும் ஒரு சந்நியாச ஒளி.

சந்நியாச வேந்தனை அணைந்து; தானும் மெல்ல மெல்ல அணைந்து வரும் அக்கினி பகவானின் சாந்த ஒளிதான் அது.

அவர் பார்த்துப் பார்த்து வளர்த்த அதே பேலூர் மடம்!

அவர் பிரேமாநந்தரிடம் கூறிய அதே இடம்!

அந்த இடத்துக்குக் குடை பிடித்த அவரது அபிமானத்தருவாகிய வில்வ விருட்சம் தன் இலைகளையே அன்பு அலைகளாக வீசி உதிர்த்து அக்கினியில்ஆஹுதிசெலுத்துகிறது;

இந்த வில்வ விருட்சம் வேறு, விவேகாநந்தர் வேறா?

வில்வ விருட்சம் மேலே மேலே வளர்ந்து சென்று கதிரவனின் ஒளியைக் கிரகிக்கிறது.

விவேகாநந்தர் அறிவுக் கனலை மேலே பெய்துகொண்டு உயர்ந்து உயர்ந்து நின்றார்.

ஆனால் உயர்ந்து செல்லும் கிளைகளில் விருட்சம் நிலைநிற்கவில்லை. இமை இமை எளிமையுடன் வேரோடிச் சென்று புனிதகங்கையைப் பருகி அந்தத் தாழ்மையிலேயே நிலைநிற்கிறது வில்வத்தரு;

விவேகாநந்தரும் இமை இமை எளிமையுடன் இறங்கிச் சென்று அருட்புனலைப் பருகி அந்த அருளிலேயே நிலை நின்றார்!

சூரிய ஒளியையும் கங்கையின் தண்மையையும் எத்தனையோ ரஸவாதங்களில் குழைத்துக் குழைத்து இந்த விருட்சம் இலைகளாகவும், பூக்களாகவும், கனிகளாகவும் வழங்குகிறது.

அறிவுக் கனலையும், அருட்புனலையும் குழைத்து ரஸவாதம் செய்த விவேகாநந்தன் எத்தனையோ பசுமைகளையும், எத்தனையோ மணங்களையும், எத்தனையோ இனிமைகளையும் நாளிலமெங்கும் பொலியச் செய்து விட்டான்! பசுமையும், மணமும் இனிமையும் சேர்ந்த— ஆனால் இவற்றிலிருந்து தனி நிற்கும்—விருட்சமாகக் கம்பீரத்துடன் நின்றான்.

யாரையும் பிரமிக்கச் செய்து எட்ட நிறுத்தும் கம்பீரமாக அல்லாமல், யாவரையும் தன்பால் அழைத்து நிழல் தந்த விவேகாநந்தனே தான், இந்த வில்வவிருட்சமா?

வில்வமரம் ஒன்று பட்டுப் போனாலும் அந்த விருட்ச பரம்பரை என்றும் அழியாது. தேவிக்கு நிகராக, வேத காலத்திலிருந்து பரமேசுவரனின் பாதத்தில் விழுந்து விழுந்து பணியும் வில்வம் என்றும் அழியாது.

வேத காலத்திலிருந்து தேவியின் வடிவமாக வந்துள்ள விவேகாநந்த பரம்பரையும் என்றும் அழியாது.

பிறருக்குப் பிறப்பறுப்பதற்காக அந்த வம்சம் மீண்டும் மீண்டும் தியாகத் தோப்பில் விளைந்து கொண்டேதான் இருக்கும். வாக்கை நிறைவேற்றுவதற்காக விவேகாநந்தர்கள் மீண்டும் மீண்டும் இம் மண்ணுலகுக்கு வந்து கொண்டேதான் இருப்பார்கள்;

ஆகா! மணி முழங்கினால் அபிலாஷை பலிக்கும் என்பார்களே! இதோ மணி ஓசை ரகசிய கீதமாகக் கேட்கிறதே! எங்கிருந்து வருகிறது? ஆம்! அந்த மணி ஓசைதான்!



பரம ஹம்ஸ, விவேகாநந்த தீபங்களை ஏற்றிய மணிவிளக்காகிய பவதாரிணியின் ஆலயமணி நாதம்தான் இது! காளியின் கருமை உலகமெல்லாம் கனியத் தொடங்கும் புனிதவேளையில் பவதாரிணிக்கு ஆராதனை நிகழ்கிறது!

ஓம் ஓம் என்று தகிஷிணேசுவரத்து ஆலயமணி முழங்குகிறது!

சுபம் ஓம் தத்ஸத்!

சகல வீட்டு வசதிகளுடனும் சுகமான பிரயாணத்திற்கு

SCI


தி ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்

(ஒரு இந்திய அரசாங்கத்தின் நிறுவனம்)

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:

ஸ்டீல்கிரீட் ஹவுஸ் 4வது மாடி, தின்ஷாவாச்சா ரோடு, பம்பாய்-1

சென்னை – நாகப்பட்டினம் – ஸ்ட்ரெயிட்ஸ்



t. S. S. ஸ்டேட் ஆப் மதராஸ்

சென்னையிலிருந்து 24-7-1964

நாகப்பட்டினத்திலிருந்து 25-7-1964

அன்று புறப்படும்

இதர விவரங்களுக்கு கீழ்க்கண்ட ஏஜண்டுகளை அணுகவும்

K. P. V. ஷேக் முகம்மது ராவுத்தர் & கோ.

41, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1
தபால் பெட்டி நெ. 1264
போன்: 22761 தந்தி: "SHIPINDIA"

பண்டகசாலை
நாகப்பட்டினம்
போன்: 72 தந்தி: "SHIPINDIA"

திருவெறும்பூரிலுள்ள கன மின்சார நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி திரு ஜி. ஏ. விசுவநாதன் அவர்களுடைய புதல்வி ஸ்ரீமதி கீதா நடராஜன் செக்கோஸ்லோவேகியாவிலுள்ள பெர்லேு சங்கீதக் கல்லூரியில் மேற் படிப்புக்காக விமானம் மூலம் சென்றுள்ளார். இவர் சென்னை சர்வகலாசாலையில் சங்கீதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். மத்திய கர்நாடக சங்கீதக் கல்லூரியில் சங்கீத வித்வான் தேறியவர். சர்வகலாசாலை மான்ய கமிஷனின் நிதி உதவி பெற்றுச் சர்வகலாசாலையில் சங்கீத ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். இவரது இசைத் திறமை மேலும் கடர்விட்டுப் பிரகாசிக்க அயல் நாட்டுக்குச் சென்றுள்ளார்.



சிரிக்கவும் சிந்திக்கவும்

உடம்புக்கு ஏதாவது ஒன்று ஒத்துக் கொள்ளாவிட்டால், 'அது ஒத்துக் கொள்ளவில்லை' என்று சொல்லி வந்தோம். இன்று அப்படிச் சொன்னுல் 'கர்நாடகம்', 'பழைய கால நாட்டுப்புறம்' என்று பரிகசிப்பார்கள்.

அது 'அலர்ஜி'. அது உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது. அதை மரியாதையாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் கடைசியில் 'ஜி' என்ற ஹிந்தி முடிவு உள்ளதாயிருக்கிறது போலும்!

வைத்தியரிடம் போய் 'மூக்கின் நுனியில் அரிக்கிறது' என்று சொன்னுல் அவர் உடனே ''சேப்பங்கிழங்கு சேர்த்துக் கொண்டீரா?'' ''பருத்திக் கொட்டை தின்றீர்களா?'' என்றெல்லாம் கேட்பார். கடைசியில் ''உங்களுக்குச் சாதம் அலர்ஜி. அதைச் சாப்பிடுவதை ஒரு வாரத்துக்கு நிறுத்தி வையுங்கள்'' என்பார். அத்துடன் இருபது மாத்திரைகள் கொண்ட பாட்டில் பதினறு ரூபாய் தொண்ணூற்றைந்து பைசா விலையுள்ள மருந்தை எழுதிக் கொடுப்பார்.

நேருஜி முதன் முதலாகப் பெரம்பூர் கோச் பாக்டரியை அதன் ஆரம்ப காலத்தில் பார்வையிட வந்தபோது அவரைச் சுற்றிலும் அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார்கள். அவர் அப்போது உற்சாகமாக இல்லை. முகம் வேதனையடைந்திருந்தது. ''எங்கு பார்த்தாலும் சுவர், சுவர், சுவர்தானு? என்னை இத்தனையையும் ஏன் பார்க்கச் சொல்லுகிறீர்கள். எனக்குச் சுவர் 'அலர்ஜி' என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்றார். சிறைச்சாலைச் சுவர்களைப் பல வருட காலம், அல்லும் பகலும் பார்த்துப் பார்த்து வந்திருப்பதில் அவருக்கு அது விஷயத்தில் அலர்ஜி ஏற்பட்டிருந்தது.

பூரி சத்ய நாராயண சின்ஹா விமான மந்திரியாக்கப்பட்ட போது அவர், ''எனக்கு விமானப் பிரயாணம் அலர்ஜி என்று தெரிந்தும் என்னை அது சம்பந்தமான இலாகா மந்திரியாக்குகிறீர்களே! என்ன அநியாயம்!'' என்று பரிதவித்தார். இப்போது அந்த இலாகா அவரிடமில்லை.

நமது தேசத்தில் மந்திரி சபை அமைக்கும் போது ஒருவர் அதற்கு லாயக்கா, இல்லையா என்று பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அது அவருக்கு அலர்ஜியா இல்லையா என்று பார்க்க வேண்டியதுதான் முக்கியமாகியிருக்கிறது.

பதவிகளில் உள்நாட்டு மந்திரி பதவி, நிதி மந்திரி பதவி, இந்த இரண்டு விஷயங்களிலும் யாருக்கும் 'அலர்ஜி' கிடையாது. லைசென்ஸ்கள், கோட்டாக்கள் வழங்கும் வர்த்தக மந்திரி பதவி விஷயத்திலும் அநேகமாக யாருக்கும் அந்த வியாதி தோன்றுவதில்லை. ஆனால் எல்லோருக்கும் உணவு விவசாய மந்திரி பதவி 'அலர்ஜி'.

அப்புறம் நபருக்கு நபர் வேறு 'அலர்ஜி' இந்த மந்திரிக்கு அந்த மந்திரி அலர்ஜி. அந்த மந்திரிக்கு இந்த மந்திரி அலர்ஜி: இவர்கள் இரண்டு பேருக்கும் மூன்ருவது மந்திரியொருவர் மிகவும் கடுமையான அலர்ஜி!

ஃ ஃ ஃ

ஒருவர்: ஏன், சார்! உங்கள் கடையில் 'பெண்களை ஆளப் பிறந்தவர்கள் ஆண்கள்' என்ற புஸ்தகம் இருக்கிறதா?

கடைக்காரர்: இல்லையே! இது போன்ற கற்பனை விஷயங்களைக் கொண்ட நூல்களை நாங்கள் விற்பதில்லை. வேறு கடைகளில் விசாரித்துப் பாருங்கள்.

ஃ ஃ ஃ

சக சகாப்தம் 2186ம் ஆண்டு, அதாவது கி. பி. 2264 ஆண்டு, தபால் பில்லைகள் சேகரிப்போர் சங்க விழாவொன்றில் ஒரு பண்டித மணி பேசுகிருர். அவர் கையில் ஒரு தபால் பில்லை இருக்கிறது.



''இது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெளியானது. இந்திய தேசப் பிதாவான காந்திஜிக்குப் பிறகு, இந்தியத் தேச மாமாவாக இருந்த நேருஜி இதில் காட்சியளிக்கிருர். அவருக்கு எதிரே, பில்லையின் அடிப்பக்கத்தில் இருப்பது என்ன? கைதேர்ந்த தோட்டக் கலைஞன் ஒருவன் தன் கத்திரி கொண்டு ஒழுங்காகக் கத்திரித்து விட்டிருக்கும் நறுமலர்ச் செடிகளா? தேச நிர்மாணத்துக்கு அத்தியாவசியமான சிமெண்ட் மூட்டைகளா? அல்லது நேருஜி பெரிதும் விரும்பும் இந்தியப் பொதுமக்களின் கூட்டமா? நீங்கள் இப்படியெல்லாம் பல விதத்தில் கற்பனை செய்து மகிழும்படியாக அந்தப் பகுதி அமைந்திருக்கிறது.

அதோ பில்லையின் வலது கோடியில் உயரே மூன்று இலக்கங்கள் இருக்கின்றன.

இவற்றில் முதலில் இருப்பது பூஜ்யம். கோழி முட்டை வடிவமுள்ளது எது? உலகம்! அது இந்தப் பில்லையில் இயற்கையான நிலைமையில் சுழன்று கொண்டிருக்கவில்லை, நின்று கொண்டிருக்கிறது. அது உலகத்தின் நிலை இன்று சரியாக இல்லை என்பதைக் குறிக்கிறது. அப்புறம்?

நீங்கள் சற்று நிதானிக்க வேண்டும். யோசனை செய்து பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் ஒரு புள்ளி வைத்திருக்கிறது.

யோசனை செய்து பார்த்தால் உலகத்தில் உள்ள பல தேசத்தினரும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி இல்லாமல் ஒன்றுபட வேண்டும் என்பதைக் குறிக்கத்தான் 1 என்று போட்டிருக்கிறது.

இந்த ஒன்றுக்கு அப்புறம் கடைசியில் 5 என்றிருப்பதைப் பாருங்கள். அது ஓர் அரசியல் மந்திரத்தை எடுத்துக் காட்டி நிற்கிறது. ஆம், பாஞ்ச் சீல் அல்லது பஞ்ச சீலம் என்ற அரசியல் மகா மந்திரம்தான் அது. ஆகவே 0.15 என்பது இன்று அமைதியற்று நிலை பிறழ்ந்து நிற்கும் உலகத்தினர் ஒன்றுபட வேண்டுமானால் பஞ்ச சீலக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்று பறைபறைந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய உயரிய தத்துவத்தை எடுத்துக் காட்டும்படி நேருஜியின் தபால் பில்லையைக் கற்பனை செய்த சித்திரக்காரரை, அதைத் தயாரித்த அதிகாரிகளை உலக மக்கள் என்றென்றும் பாராட்ட வேண்டும். அதற்குப் பதிலாக அந்தக் காலத்து மக்கள் ரூ. 0.15 என்றோ அல்லது 15 பைசா என்றோ ஏன் போடவில்லை என்று குறை கூறினார்கள். நேருஜி உருவமுள்ள ஒரு பில்லைக்கு விலையா? அதற்கு மதிப்பேது?

ஃ ஃ ஃ

இரவு மணி ஒன்பது இருக்கும். போலீஸ்காரர் ஒருவர் டிரக் ஒன்றை நிறுத்தி, ''டிரக்குக்குப் பின்னால் ஏன் சிவப்பு விளக்குப் போடவில்லை?'', என்று கடிந்தார்.

டிரைவர் சட்டென்று கீழே குதித்துப் பின்னால் ஓடிப் போய்ப் பார்த்தான். திடுக்குற்றான். போலீஸ்காரரின் கேள்விக்குப் பதில் சொல்லத் தோன்றாமல் நின்றான். ''ஏன் சிவப்பு விளக்குப் போட வில்லை?'' என்று போலீஸ்காரர் சீறினார்.

''சும்மா இரு, ஐயா! உனக்குச் சிவப்பு விளக்குக் கவலை. என் கவலை உனக்கு என்ன தெரியும்? பின்னாலே சேர்த்திருந்த டிரயிலரையே காணுமே ஐயா!'' என்றான் டிரைவர்.

ஃ ஃ ஃ

சென்ற சிலமாதங்களாக நமது மந்திரிகளின் மோட்டார் வண்டிகள் ஒழுங்காக நடந்து கொள்ளாமலிருந்து வருகின்றன. கேரள மந்திரி ஸ்ரீ சாக்கோவின் வண்டி 'ஒரு பையன் மீது ஏறப் பார்த்ததில் யாருக்கும் உயிர் போய்விடவில்லை. ஆனால், ஸ்ரீ சாக்கோவின் மந்திரி பதவி போய்விட்டது.

இதற்குப் பிறகு ஒரிஸ்ஸாவில் ஒரு மந்திரியின் வண்டியும், பீஹாரில் ஒரு மந்திரியின் வண்டியும், மகாராஷ்டிரத்தில் ஒரு மந்திரியின் வண்டியும், உத்தரப் பிரதேசத்தில் ஒரு மந்திரியின் வண்டியும் அதற்குத் தோன்றிய படி மரம், கம்பம், பாலம் முதலியவற்றைத் தாக்கின. ஆனால் யாருக்கும் ஆபத்தில்லை. சில தினங்கள் முன் சென்னை ராஜ்ய முதல் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம் அவர்களின் மோட்டார் வண்டி தெய்வமே என்று சாலையோடு போய்க் கொண்டிருந்தது. அது இரண்டு நாட்களுக்குப் பிறகு திருவேற்காடு கருமாரியம்மன் கும்பாபிஷேகத்துக்குப் போவதாகக் கூட இருந்தது. ஆனால், ஒரு லாரி அதைத் தாக்க வந்தது. வண்டியில் மு. ம. இருப்பதைப் பார்த்ததும் பேசாமல் சென்றுவிட்டுப் பிறகு திடீரென்று தன் பின் பக்கத்தால் இடித்துவிட்டுப் போயிற்று. அந்த லாரிக்கும் மோட்டார் வண்டிக்கும் என்ன மனத் தாங்கலோ தெரியவில்லை. நல்லவேளை முதல் மந்திரிக்குப் பலமாகக் காயமேற்படவில்லை. வைத்தியசாலையில் குணமடைந்து வருகிறார்.

இப்படிப் பல ராஜ்ய மந்திரிகள் தங்களையும்மீறி, தாங்கள் இஷ்டப்படாமலேயே வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்ய நேர்வதால் அங்கெல்லாம் சில நாட்கள் வரையிலாவது காரியங்கள் பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் நடைபெறக் கூடும். ஆனால் அப்படி நடப்பதற்காக நமது மந்திரிகளுக்கு விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கலாமா?

மோட்டார் வண்டிகளுக்கு அரசாங்கத்தின் மீது எதற்காகத்தான் கோபமேற்பட்டிருக்கும்? மலிவான மோட்டார் வண்டிகள் தயாரிக்காமல் நொண்டிச் சாக்குகள் சொல்லி வருவதற்காகவா? இல்லை, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அயல் நாட்டு மோட்டார் வண்டிகளை வழக்கம்போல் ஏலம் போட்டுப் பொது மக்களுக்கு விற்காமல் தானே எடுத்துக்கொண்டுவிட முயற்சி செய்ததற்காகவா? தெரியவில்லை.

சுமார் ஒன்றே கால் மாதங்களுக்கு முன்னர் ஆந்திர ராஜ்யக் கல்வி மந்திரி ஸ்ரீ பி.வி. ராஜுவை ஒரு மோட்டார் கார் விபத்துக்குள்ளாக்கிற்று. ஆனால் கடவுளருளால் அவர் குணமடைந்து வருகிறார்.

ஸ்ரீ ராஜுக்கு ஏற்பட்ட விபத்து வைத்திய உலக விந்தையாகி விட்டது. அவர் 39 நாட்களாகத் தம் நினைவிழந்திருந்தார். நேருஜி காலமானதோ, லால் பஹாதூர் சாஸ்திரி பிரதம மந்திரியானதோ, பஞ்சாப் முதன் மந்திரி கெய்ரோன் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டதோ எதுவுமே அவருக்குத் தெரியாது! அவர் முழு நினைவு பெற்றுப் பத்திரிகைகளைப் படித்தால் அதிலுள்ள செய்திகளைப் பார்த்துத் திகைத்துப் போவார்!

அவருக்குச் சுயநினைவு வந்து கண் விழித்துக் கொண்ட உடனே தமது மனைவி ஸ்ரீமதி மாதுரியைப் பார்த்து, ''காப்பி கொண்டு வா!'' என்றாராம்.

காப்பி போர்டார் கவனிக்க!

ஃ ஃ ஃ

''என்னடா, ராமு! நீ என்னடா தப்புப் பண்ணினே? உனக்குக் கோர்ட் சம்மன் வந்திருக்கே!''

''முந்திய நாள் டிக்கெட்டை வைத்துக் கொண்டு நான் ரயிலில் பிரயாணம் செய்தேன் என்று பிடித்து விட்டார்கள்.''

''அப்படி நீ போகலாமா?''

''நான் எங்கேடா போனேன்? அந்த ரயில் அல்லவா இரண்டு நாட்கள் தாமதித்து வந்தது?''

—என். ஆர்.

தோல்நல பாதுகாப்பிற்கு

விக்கோ அற்கஜா



குளிப்பதற்கு 15 நிமிடங்களுக்கு முன் தேகத்தில் தேய்ப்பதற்கான ஓர் ஆயுர்வேத எண்ணெய். இதைத் தவறாது உபயோகித்தால் அது உங்கள் கவர்ச்சியை மிகைப்படுத்தி, உங்களைத் தோல் வியாதிகளிலிருந்து பாதுகாக்கிறது.

Vicco
LABORATORIES
BOMBAY 14

TAMIL

விக்கோ லாபரடரீஸ், பம்பாய்-14

ஸ்டாக்கிஸ்டுகள்:

சென்னை: ஆர். எஸ். கவுடர் & கோ. 59, பந்தர் தெரு - சென்னை-1

கோயமுத்தூர்: R. தேசாய் கவுண்டர் & கோ. அவினாசி ரோடு - கோயமுத்தூர்

பெங்களூர்: கே. எஸ். கவுடர் & கோ கபேதார் சத்திரம் தெரு, பெங்களூர்

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்

பரிசுப் பார்சல்கள்!

திடீர் இட்லி, தோசை சாம்பார், ரசம் (எல்லாம் தனித்தனி பவுடர்கள்) மற்றும் ஊறுகாய்கள்

(Registered)

இலவசமாக

தென்னிந்திய உணவுப் பொருள்களை அயல்நாடுகளில் உள்ள உங்கள் நண்பர்களுக்குப் பரிசுப் பார்சல்களாக இந்தியாவிலிருந்து ரூ. 50/- வரை (பாக்கிங் செலவு உள்பட) தபால் பார்சலில் கப்பலில் அனுப்பி வைக்கலாம்.

குறிப்பு: தங்கள் ஆர்டர் கிடைத்தவுடன் நாங்களே மேற்படி பார்சல்களை குறிப்பிட்ட விலாசதாரருக்கு உலகத்தின் எந்த பாகத்துக்கும் அனுப்பிவைக்கிறோம்.

கப்பல் மூலம் தபால் பார்சலாக அனுப்ப, கட்டண விபரமடங்கிய இலவச பிரசுரத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.

46, தம்பு செட்டி தெரு, சென்னை-1

(போன்: 23665)

வளரும் குழந்தைகளுக்குத் தேவை

KALZANA



வேடனும் சீடனும்



கலாபாரதி

காடு ஒன்றில் ஞானி ஒருவர் ஒரு மரத்தடியின் கீழ் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்த போது, மரத்தின் மேலிருந்து அம்பினால் அடிபட்ட பறவை ஒன்று 'பொத்'தென்று அவர் எதிரே கீழே தரையில் விழுந்தது. தவத்துக்கு இடையூறு ஏற்பட்டதால் ஞானி விழித்துப் பார்த்தார். பறவையை அடித்து வீழ்த்திய வேடன் உடல் நடுங்கியபடி கைகூப்பி வாய் புதைத்து ஞானியின் மன்னிப்பைக் கோர எதிரே வந்து நின்றான்.

சாபமிட நினைத்த அந்தக் கோபம் கொண்ட ஞானி, ''பறவையைக் கொன்ற உன் உயிர் இப்போது என்ன ஆகும், தெரியுமா? என் சாபத்திலிருந்து நீ தப்பிக்க வேண்டுமானால் எனக்கு ஒரு காரியம் நீ செய்தாக வேண்டும். கண்ணன் என்னும் மாடு மேய்ப்பவன் ஒருவன் இருக்கிறான். அவனைக் காணவே இங்கு வந்திருக்கிறேன். அவனைக் காணாததால் எனக்குத் தொல்லையாக இருக்கிறது. தலையின் கேசத்தின் முன்பகுதியில் மயில் பீலி தரித்திருப்பான். மலர்ந்த தாமரை போல் எப்போதும் சிரித்த முகமாய் இருப்பான். கையிலே புல்லாங்குழல் கொண்டு கானம் இசைத்த வண்ணம் இருப்பான். இந்த அடையாளங்களையெல்லாம் கொண்டு, அந்தக் கண்ணனைக் கைகாலோடு கட்டிப் பிடித்து, என் கண் முன்னே கொண்டு நிறுத்தினால், உன்னை நீ காப்பாற்றிக் கொள்ளலாம். தெரிந்ததா, போய்வா?'' என்று அனுப்பினார்.

தாற்காலிக விடுதலைபெற்ற வேடன் ''கண்ணா....கண்ணா' என்று காட்டுக் கத்தலாய்க் கத்தியபடி காடு வனாந்தரங்களையெல்லாம் சுற்றியலைந்தான். எதிரொலிதான் கேட்டது அவனுக்கு.

கண்ணன்..... கண்ணன் என்றே வேடன் கண்ணயரவில்லை..... மாற்றுடை உடுக்கவில்லை.... எண்ணமெல்லாம் கண்ணனை நினைத்த வண்ணம் தான்......

ஒரு மாதம் கழிந்த பின்னர் ஞானியை அணுகி, ''இந்தக் காடு முழுதும் தேடிப் பார்த்து விட்டேன். கண்ணன் கிடைக்கவில்லை. ஆனால் நீங்கள் சொன்ன புல்லாங் குழல் இசை மட்டும் கொஞ்சம் கொஞ்சம் எங்கோ காற்றுவாக்கில் காதில் விழுகிறது. அது உண்மையோ அல்லது எனது பிரமையோ தெரியவில்லை!'' என்றான்.

'' அப்படியா....... அப்போது விடாதே. மீண்டும் முயற்சி செய்து பார். இல்லையானால் விளக்கில் விட்டில் பூச்சி விழுந்து சாம்பல் ஆவது போல் தான் உன் கதியும் ஆகும். நினைவிருக்கட்டும். ஜாக்கிரதை....ஹூ....ம்'' என்றார் ஞானி.

திரும்பிப் போன வேடன் சில வாரங்கள் கழிந்தபின் ஞானியிடம் வந்து, ''பெரியவரே! குழலின் கீதம் இப்போது எனக்கு வெகு சமீபத்திலே கேட்கிறது. மனிதன் நடந்து வரும் ஓசையும் நெருங்கிக் கேட்பதை அறிகிறேன். என்னைப் பார்த்துச் சிரிப்பது போன்ற ஒலியும் என் காதில்படுகிறது. ஆனால் அந்தத் தெய்வீக கீதம், அந்தச் சிரிப்பொலி இவற்றில் லயித்து நான் மெய்ம்மறந்து பரவசமடைந்து என்னையே மறந்து விடுகிறேன். என்னவோ என் போதாத காலம்..... விதி தெரியாமல் தவறு செய்து விட்டேன் உங்களுக்கு. நான் செய்த குற்றத்தை மறந்து மன்னித்து என்னை உயிரோடு போக விடுங்கள் சாமி'' என்று கெஞ்சினான்.

ஞானியார் வேடனிடம், ''இது தான் உனக்குக் கடைசிச் சந்தர்ப்பம். இந்தத் தடவை நீ சென்று வென்று வர வேண்டும். வெற்றி ஒன்றே செய்..... இன்றே செய்.... நன்றே செய்'' என்று அனுப்பினார்.

ஒரு வாரத்துக்குப்பின் ஓர் ஆளைத் தூக்கி வந்த களை தாங்காது மூச்சு விட்டுக் கொண்டு ஞானியாரின் எதிரே நின்றான் வேடன்.

''அப்பப்பா.... இந்த ஆளு என்ன பாடுபடுத்தி விட்டான் நம்மை..... சாமியாரே! நன்றாகப் பாருங்கள் இவனை..... என்னை எப்படியெல்லாம் ஏமாற்றினான் தெரியுமா? ஞானியாரே! உங்கள் அருளினால் இவனைக்

கண்டுபிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். இறுகப் பிடித்த என் பிடியிலிருந்து இதோ நழுவப் பார்க்கிறான். நன்றாகப் பாருங்கள் இவனை. உங்களுக்குத் தெரிய வில்லையா இவனை? ஆஹா, எத்தனை அழகு? நீலவண்ண அழகுத் திருமேனி...நெற்றியிலே கஸ்தூரி திலகம்...கேசத்தின் முன்னே நெளிந்தாடும் மயில்பீலி, மார்பிலே கௌஸ்துப மணி....திருஉருவத்திலே தவழ்ந்தாடும் மஞ்சள் துணி...கையிலேகுழல்...



முகத்திலே புன்சிரிப்பு.... இன்னுமுமா உங்களுக்கு இவனைத் தெரிய வில்லை? இந்த இடம் முழுதும் கஸ்தூரி மணம் 'கம்' மென்று கமழுகிறதே.... நல்ல குழலிசை நாதம் நாற்புறமும் ஒலிக்கிறதே....கௌஸ்துபமணியின் ஒளி காட்டின் இருளையே போக்குவது போல் வீசுகிறதே..... மயில்பீலி குழலிசைக்கேற்ப அசைந்தாடுகிறதே. இவைகளை யெல்லாம் நீங்கள் உணர வில்லையா? உங்களுக்கு ஒன்றுமே புலப்பட வில்லையா? ஞானியாரே..... அவன் அணைப்பிலேதான் நான் எவ்வளவு இன்பம் அடைகிறேன்... இதோ அவன் என் தழுவலிலிருந்து நழுவப் பார்க்கிறான். அவன் ஓடி விடுவதற்குள் சீக்கிரம் வந்து பிடித்துக் கொள்ளுங்கள்.

ஆ.... கண்ணன் ஓடி விட்டான். ஆஹா! எத்தகைய பேரானுபவம் எனக்கு.... சாமி...இனி என் உயிர் போனாலும் போகட்டும். என் உயிரென்ன... எல்லாவற்றையும் விட்டுவிடச் சித்தமாயிருக்கிறேன். அவனை மீண்டும் காணும் வரை எனக்கு ஒன்றுமே ஓடாது...சாமி...!''

ஞானி ஒன்றும் புரியாமல் பிரமித்து நின்று விட்டார். வெறும் பாமரனும், ஜடமாய், மிருக வாழ்க்கை வாழ்ந்த வேடன், கண்ணனை எண்ணிய மாத்திரத்தில் எப்படிப் பண்டிதன் போல் பேசுகிறான். ஒன்றுமறியாத பாமரனுக்கு இத்தகைய பேரானந்த அனுபவமா? ஆண்டவன் இருவுள்ளத்தை வேடன் உணர்ந்த அளவு தான் உணர வில்லையே....

''அன்பனே! வேடன் — வெறும் மூடன் என உன்னை நினைத்தேன். நான்தான் மூடன். இனி உன் சீடன். நீதான் மகாபுருஷன். ஞானி நானல்ல.... நீதான். உனது பக்திக்கும் ஏகாக்கிர சித்தத்துக்கும், வைராக்கியத்துக்கும் முன்னால் நான் ஒன்றுமே இல்லை'' என்று வேடனைக் குருவாகஎண்ணி அந்தச் சீடன் மேலே விழுந்து வணங்கினார். அவரது தூய கண்ணீர் அவனது புனித பாதங்களை நனைத்தது.

ஸ்டெயின்லஸ் ஸ்டீல்

நீண்ட நெடுங் காலமாகவே மனிதன் இரும்பின் உபயோகத்தை அறிந்திருந்தான். ஆதி மனிதனின் வாழ்வில் வெண்கலக் காலத்தை இரும்புக் காலம் தொடருகிறது. ஐயாயிரம் வருஷங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் பிரமிட்டுகளில் இரும்புக் கத்தி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எகிப்தில் இரும்பினாலான மணிகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இதன் காலம் கி. மு. 6000 என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.


கறுத்துப் போகாத துருப்பிடிக்காத இரும்பைக் (ஸ்டெயின்லஸ் ஸ்டீல்) கண்டு பிடித்த கதை ரொம்ப வேடிக்கையானது. கடந்த யுத்தத்தின்போது துப்பாக்கிக் குழல்கள் துருப்பிடிக்காதிருக்க ஏதாவது செய்தாக வேண்டும் என்ற பிரச்னை எழுந்தது. ஹென்ரி பிரார்லே என்பவரை இதுபற்றிக் குடைந்தார்கள் அதிகாரிகள். இவர் துப்பாக்கிக் குழல் செய்யும் இரும்போடு 14 சதவிகிதம் குரோமியம் என்ற உலோகத்தைக் கலந்து பார்த்தார். அவை சரியாக அமையவில்லை என்று விரக்தியுடன் அதை ஒரு மூலையில் தூக்கி எறிந்தார். ஒரு வாரம் கழித்து, புதிய கலவையில் உருவாக்கிய குழாயின் உடைந்த பகுதிகள் பளபளப்பாக அப்படியே இருப்பதைக் கண்டு பிரார்லே திகைத்துப் போய் விட்டார். துருப்பிடிக்காத இரும்பைத் தாம் கண்டு பிடித்து விட்டோம் என்பதை அவரால் நம்பவே முடியவில்லை.

ஸ்டெயின்லஸ் ஸ்டீலைப் பற்றி ஒரு சுவையான கதை சொல்லப்படுகிறது. 'ஷெப்பீல்டில்' முதன் முதலில் இந்தத் துருப் பிடிக்காத இரும்பைத் தயாரித்த போது அது எதிர்பார்த்த அளவு பிரபலமடையவில்லை. ஆராய்ச்சிப் பகுதி மிகவும் வேதனையோடு இருந்தது.

இந்த நிலையில் ஒரு தொழிலாளியின் மனைவி தனக்கு ஒரு மோதிரம் செய்து வருமாறு தன் காதலனை நச்சரித்து வந்தாள். அவனும் தனது நிர்வாகஸ்தர்களுக்குத் தெரியாமல் இந்தப் புதிய இரும்புக் கலவை உலோகத்தினால் தனது திறமை யெல்லாம் காட்டி ஒரு மோதிரம் செய்து கொண்டு போய்க் கொடுத்தான். அது பார்ப்பதற்குப் பிளாட்டினம் போலவே இருந்ததால் அதே மாதிரி தங்களுக்கும் ஒரு மோதிரம் வேண்டும் என்று எல்லாப் பெண்களும் தங்கள் கணவன்மார்களை நச்சரிக்க ஆரம்பித்த பிறகுதான் தொழிற்சாலை நிர்வாகிகளுக்கு விஷயம் புரிந்தது. புதிய இரும்பைப் பற்றிய பிரச்னை தீர்ந்து விட்டதாக அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

குண்டு மல்லிகை

அரு.ராமநாதன்



பிச்சமணிக்கும் லலிதாவுக்கும் நடக்கப் போகும் திருமணத்தைப் பற்றி ஜகந்நாதன் விவரித்துக் கொண்டே போனார். லலிதாவைப் பற்றி மிகவும் உயர்த்தியாகப் பேசினார்.

''பிச்சமணியை விட லலிதா இரண்டு வயது சின்னவளாம்!''

உமா தலை குனிந்துகொண்டாள். அவள் முகம் வெளிறிவிட்டது என்பதை அவளே உணர்ந்தாள்.

''அந்தப் பெண் ரொம்ப ரொம்ப அழகாகவும் இருப்பாளாம்! பிச்சுமணிக்கு வெகு பொருத்தமானவளாம்! இருவரையும் ஒன்றாக நிறுத்திக் கண் குளிரப் பார்த்தால் ரதியும் மன்மதனும் போல் இருப்பார்களாம்! பட்லர் இருதயசாமி கவிச் சக்கரவர்த்தி கம்பனாகப் பிறந்திருந்தால் லலிதாவை வர்ணித்தே ஒரு மகா காவியம் பாடித் தள்ளியிருப்பான்! நானும் அந்தப் பெண்ணை ஒரு சமயம் நேரில் பார்த்தேன். குறுகுறுவென்று உன் தங்கையைப் போலவே இருக்கிறாள்! உன் தங்கைக்கும் பள்ளிப் பருவத்தில் பிராண சிநேகிதியாம்! ஆனால் உன்னைப் போன்ற அமைதியான போக்கும் அடக்கமான பெண்மையின் பண்புகளும் வாய்ந்தவள்! இரு துருவங்கள் போன்ற உன்னையும்

உன் தங்கையையும் ஒரே உருவத்தில் பார்த்தால் எப்படி இருக்குமோ அது தான் லலிதா!'' என்றார் ஜகந்நாதன் வெகு கச்சிதமாக.

உமா இப்போது தலை நிமிர்ந்து பார்த்தாளே தவிர எதுவும் பேசவில்லை; பேச முடியவில்லை.

''அந்தப் பெண் கல்லூரியில் படிக்கிறவள்! பிச்சுமணிக்கு மனைவியாக மட்டுமல்ல, வாத்தியாரம்மாவாகவும் விளங்கக் கூடிய தகுதி உள்ளவள்! அவனுடைய வீரப் பரம்பரைக்கு வம்ச விளக்காக அழகழகாக அரை டஜன் ஆண் குழந்தைகள் பிறக்கும் என்றும் அந்தப் பெண்ணின் ஜாதகத்தில் எழுதியிருக்கிறதாம். அதனால் அவளையே எப்படியும் தன் பேரனுக்கு மணம் முடித்துவிட வேண்டுமென்று தாத்தா தீர்மானம் பண்ணிவிட்டாராம். பட்லர் இருதயசாமிக்கும் தன் கையாலே தூக்கி வளர்த்த பிச்சுமணியைக் கூடிய சீக்கிரம் கல்யாணக் கோலத்தில் பார்க்கப் போகிறோம் என்ற சந்தோஷம் தாங்க முடியவில்லை. அதனாலேயே அவனுக்கு நெஞ்சு வலி வந்திருக்கும்!''

உமாவின் கண்கள் ஏனோ கலங்கின. அவள் ஏதோ யோசித்துத் தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு எங்கோ பார்த்தபடி, ''அந்தப் பெண்ணையே பிச்சுமணி கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழட்டும்!'' என்றாள்.

''ஆனால் பிச்சுமணியைப் பொறுத்த வரை நான் அப்படி நினைக்கவில்லை, உமா! அவன் மிகவும் உணர்ச்சிகரமான வாலிபன்! அமைதியற்ற போக்கும் படபடப்பும் உள்ளவன். எதிலும் எளிதில் திருப்தியடைய மாட்டான். லலிதாவையே அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தாலும் தானும் சந்தோஷமாக வாழ மாட்டான். அந்தப் பெண்ணையும் சந்தோஷமாக இருக்க விட மாட்டான். அந்தத் தம்பதிகளின் வாழ்க்கை உணர்ச்சிகளின் போராட்டமாகவே இருந்து வரும்.''

உமா கரகரக்கும் குரலில், ''அந்தப் பெண் உள்ளூறக் காதலித்தால் பிச்சுமணி சந்தோஷமாக வாழ வேண்டும் என்றே ஆசைப்படுவாள். அதற்காகத் தன்னையும் பொருட்படுத்தாமல் அரும்பாடுபடுவாள்!'' என்றாள்.

''அந்தப் பெண் உள்ளூறப் பிச்சுமணியை உயிருக்குயிராய்க் காதலிக்கிறாளே தவிர அப்பா அவனும் அவளைக் காதலிப்பானென்று தோன்றவில்லை. ஏனெனில் பிச்சுமணியின் உள்ளத்தில் ஏற்கனவே வேறொரு பெண் குடியேறிக் காதல் தேவதையாக வீற்றிருக்கிறாள்! இப்போது புதிதாக ஒரு பெண் அந்த உள்ளத்தில் இடம் பிடித்து ஒண்டுக் குடித்தனம் நடத்த முடியுமா?'' என்று அழுத்தமாகக் கேட்டார் ஜகந்நாதன்.

உமாவின் நெஞ்சு விம்மியது. வெகு சிரமப்பட்டுத் தன் விம்மலை அடக்கிக் கொண்டாள்.

பிறகு அவள் கரகரக்கும் குரலில், ''அந்தப் பெண் புத்திசாலியாக இருந்தால் பிச்சுமணியின் மனத்தை மாற்றித் தன் வசப்படுத்தி விடுவாள்'' என்றாள்.

''இல்லை! காதலில் புத்திசாலித்தனத்துக்கு இடமேயில்லை! இருதயத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் மட்டும்தான் அதில் இடமுண்டு!'' என்ற ஜகந்நாதன், ''ஆகவே அந்தப் பெண் பரிதாபத்துக்குரியவளே தவிரப் பொறாமைப்படத் தக்கவளல்ல!'' என்று கூறி முடித்தார்.

உமா ஒரு கணம் மௌனமாக இருந்த பிறகு ஏதோ யோசித்தவளாக, ''தாத்தாவும் பேரனும் தீர்த்த யாத்திரைக்குப் போயிருந்தார்களே, இன்னும் கன்யாகுமரியில்தான் இருக்கிறார்களா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். இன்னும் நாலைந்து தினங்களுக்குள் அவர்கள் திரும்பி வந்து விடுவார்கள். ஒரு வேளை கலியாணத்தை முன்னிட்டு அவசரமாகத் திடீரென்று இன்றோ நாளையோ கூட வந்து சேர்ந்து விடலாம்!''

உமா மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தாள். அவளுடைய முகத்தை ஜகந்நாதன் கூர்ந்து பார்த்தார். அவளுடைய அழகான முகத்தின் அமைதிக்கு அடியில் ஒருவித சோக பாவம் குடிகொண்டிருந்தது. சில பெண்களுக்குச் சிரித்த முகத்தைவிட ஒருவித சோக பாவமான முகமே அலாதியான கவர்ச்சியை ஊட்டி விடுவதுமுண்டு. உமாவின் முகத்திலுள்ள கனிவையும், வாய்ப்புறத்து மிருதுவான கோடுகளையும், அதன் இனிமையான வளைவுகளையும் பார்க்கும்போது சிற்றாடைப் பருவத்தில் அவள் சிரித்து மகிழும் சித்திரக் கிளியாகவே இருந்திருப்பாள் என்று தோன்றியது.

அப்படித் தன்னை அவர் ஆழ்ந்து நோக்குவதை உணர்ந்ததும் உமாவின் வெளிறிய முகத்தில் ஒருவித நாணச் சிவப்பு படர்ந்தது. அவள் தன் விழிகளைத் தூக்கித் தன் விற்புருவங்களையே வினாக் குறியாக வளைத்து, ''டாக்டர்'' என்றாள்.

''உமா! இப்போது உன் கல்யாணத்தைப் பற்றி நீ சிந்திக்க வேண்டும்'' என்றார் ஜகந்நாதன் பரிவோடு.

''நீங்களா கல்யாணத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள், டாக்டர்? கல்யாணம் என்பதே கால் விலங்கு போன்ற ஓர் அடிமைப் பந்தம் என்ற கொள்கை உடையவரல்லவா நீங்கள்?'' என்று உமா வியப்புடன் கேட்டாள்.

''அந்தக் கொள்கை என்னைப் போன்றவனுக்குத்தான்! உன்னைப் போன்ற குடும்பப் பாங்கான பெண்களுக்கு அல்ல!''

உமா வறட்சியாக மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் வேதனையும் விரக்தியும் தொனித்தன.

''உமா! உனக்குக் கன்யாகுமரியிலிருந்து பிச்சுமணி ஒரு கடிதம் எழுதியிருந்தானல்லவா?''

''டாக்டர்.....?'' என்று உமா மீண்டும் தன் புருவங்களாலேயே வினாக் குறி எழுப்பினாள்.

''அந்தக் கனமான கடிதத்தில் பிச்சுமணி என்னவெல்லாம் எழுதியிருந்தான் என்று நீ சொல்ல வேண்டியது இல்லை. அவனுக்கு உன் மீதுள்ள காதலையெல்லாம் அடை மழைபோல் கொட்டியிருப்பான். கடைசியில் தன்னை ஏற்றுக் கொள்ளும்படியும் உருக்கமாக ஒரு வேண்டுகோள் விடுத்திருப்பான். அது எனக்குத் தெரியும்!'' என்ற ஜகந்நாதன் இன்னும் தீவிரமாக உமாவை உற்றுப் பார்த்த வண்ணம், ''அந்தக் கடிதத்துக்கு நீ பதில் எழுதினாயா?'' என்று கேட்டார்.

'ஆமாம்' என்பதுபோல் உமா பரிதாபமாகத் தலையாட்டினாள்.


''அவனுடைய காதலை ஏற்க மறுத்தாயா...?''

உமாவுக்கு அழுகை வந்து விடும் போல் இருந்தது.

''பிச்சுமணியின் காதலை நீ ஏற்க மறுக்கிறாய்? அவனை நீ கலியாணம் செய்துகொண்டால் உலகம் ஏதாவது சொல்லும் என்று பயப்படுகிறாயா?''

''டாக்டர்! இனி என் வாழ்நாளில் கல்யாணம் என்ற பிரச்னைக்கே இடமில்லை'' என்ற உமாவின் குரல் தழுதழுத்தது.

''ஏன்? உனக்கு ஏற்கனவே ஒரு கல்யாணம் நிச்சயமாகித் தாலி கட்டப் போகும் நேரத்திலே மாப்பிள்ளை மாயமாக மறைந்து விட்டான். அதாவது குடிப் பழக்கத்தில் மிருகமாகி விட்ட அவன் உன்னை மனைவியாக வரித்துக் கொள்ளப் பயந்து ஓடி விட்டான். அந்த



''என்ன, உம் மனைவிக்குப் பிடில் வாசிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறீர்?''
''எலித் தொந்தரவு ரொம்ப ஜாஸ்தியாப் போச்சு! அதுக்கு என்ன வழின்னு பார்த்தேன். இப்ப வீட்டில் ஒரு எலி இல்லே!''

அளவுக்காவது அவனுக்கு மனிதத் தன்மை இருந்ததென்பது நீ செய்த புண்ணியம்தான்!''


''என் மீதுள்ள அளவற்ற அன்பினால் தான் அவர் தம் பெற்றோர் முதல் சகலத்தையும் துறந்து விட்டுத் தலை மறைவாகப் போயிருக்கிறார். அதை நினைத்த போது அவர் மீது எனக்கு மதிப்பும் அன்பும்தான் அதிகரித்தன. நான் மனப்பூர்வமாக அவர் ஒருவருக்கே என் இருதயத்தில் இடமளித்து அவரையே மானசீகமாகக் காதலித்தேனாகையால் இனி மறுபடியும் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்கவே நான் விரும்பவில்லை!'' என்ற உமாவின் கண்களில் நீர் மல்கியது.

''அதோடு உன் வாழ்க்கையே முடிந்து விட்டதாக ஆகிவிடுமா? நீ மறுபடியும் மனப்பூர்வமாக ஓர் ஆடவனைக் காதலித்தால் உன் வாழ்க்கை மறுமலர்ச்சி பெற்று விடும்!''

''நான்... நான்... காதலிக்கும் வயதைத் தாண்டி விட்டேன் டாக்டர்!'' என்று விம்மிய உமா, ''எப்படியோ அதன் சுவையை என் வாழ்வில் இழந்து விட்டேன்! அது என்ன என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அது மறுபடியும் என் வாழ்க்கையில் வரப் போவதே இல்லை!'' என்று ஒரு பெரு மூச்சு விட்டாள்.

''இல்லை, உமா! வசந்த காலம் என்பது வாழ்க்கையில் ஒரு முறைதான் வர முடியும் என்று நினைப்பது தவறு! வாழ்க்கை முழுவதையுமே வசந்த காலமாக்கிக் கொள்ள வேண்டும். அதுதான்

அன்னையைப் போன்ற அழகொளி படைத்தவள்.




தாயைப் பார்த்தால்
மகளைப் பார்க்கவேண்டாம்.
ஒரே அச்சு! 'சகோதரிகளோ?'
என்றுகூடச் சிலர் சந்தேகிக்கின்றனர்.
தாயின் வழி சென்று தன் அழகைப்
பராமரிக்கிறாள் அவள். ஆண்டுகள் பல
சென்றாலும் அவள் எழில் குன்றாது. காரணம்,
தொடர்ந்து அவள் உபயோகிப்பது 'ஹேஸலின்'
ஸ்னோ. ...தனியாகவோ, பவுடர் படியும்
தளமாகவோ எழிலைப் பாதுகாத்து, அதற்கு
மெருகூட்டுகிறது 'ஹேஸலின்' ஸ்னோ.
'ஹேஸலின்' ஸ்னோ
உங்களுக்கு எழிலூட்டுகிறது.
'ஹேஸலின்' வரிசையில் மேலும் கிடைப்பவை
கோல்ட் க்ரீம், டால்கம்.
பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி (இந்தியா)
ப்ரைவேட் லிட்.
த. பெ. நெ. 290, பம்பாய்-1
BI.BW.25 TA15

புத்திசாலித்தனம்! மனச்சாட்சி என்ற பெயரில் உன்னுடைய வெறும் மனப் பிரமைக்காக, வெறும் நிழலுக்காக நிஜமான வாழ்க்கையைப் புறக்கணிப்பது என்பது தியாகமல்ல, அது நரபலிக்கே சமானமாகும்!''

''நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''நான் என்ன சொன்னாலும் நீ உன் உணர்வுகளின்படியேதான் நடப்பாய். அது எனக்குத் தெரியும்! ஆனால் உன் வாழ்க்கையைச் சந்தோஷமான பூஞ்சோலையாக்கிக் கொள்வதோ அல்லது கடைசி வரை வறட்சியான பாலைவனமாக்கிக் கொள்வதோ உன் கையில்தான் இருக்கிறது! அதைப் பற்றி நீ விரைவில் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிடு!'' என்று ஜகந்நாதன் கூறிவிட்டுக் காரை 'விர்' ரென்று கிளப்பிச் சென்றார்.

அத்தியாயம் நாற்பத்தொன்பது

நீறு பூத்த நெருப்பு

உமா தன் புடவை ரவிக்கைகளையெல்லாம் அழகாக அடுக்கி வைக்கலாம் என்ற எண்ணத்துடன் தன் பெரிய டிரங்குப் பெட்டியை எடுத்தாள். அடுத்த கணம் அந்தப் பெட்டிக்குள் பிச்சுமணியின் கடிதம் இருக்கிறதென்ற நினைவு வந்ததும் சட்டென்று அதைத் தள்ளி வைத்து விட்டாள்.

பிச்சுமணியின் திருமணத்தைப்பற்றி டாக்டர் ஜகந்நாதன் நிகழ்த்திய உரையாடல்கள் அவள் மனத்தில் வந்து வந்து விழுந்தன. அந்தத் திருமண விஷயம் உண்மையாக இருக்குமா அல்லது வெறும் வதந்திதானா என்று அவள் குழம்பினாள். அதைத் தன்னால் ஏன் நம்ப முடியவில்லை என்று தன்னையே கேட்டுக் கொண்டாள். ஆனால் அதற்கு இருதயத்திலிருந்து கிடைக்கக் கூடிய பதிலைக் கேட்கத் துணியாமல் தன் எண்ணங்களை வேறொரு தடத்தில் ஓட விட்டாள். பிச்சுமணியைத் தன் மனத்திலிருந்து முற்றிலும் அகற்றிவிடவேண்டும் என்று ஏற்கனவே அவள் உறுதியாகத் தீர்மானித்திருந்தாள். ஆனால் அது தன் இருதயத்தையே தன் கைகளாலேயே பிய்த்துப் பெயர்த்து அப்பால் வைக்கும் முயற்சி போலவே தோன்றியது. அதனால் தன் கவனம் முழுவதையும் தன்னால் முடிந்த அளவு ஏதாவது வேலைகளில் ஓயாமல் ஈடுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டுமென்றும் தவித்தாள். அவளுக்குப் பிச்சுமணி கன்யாகுமரியிலிருந்து கடிதம் எழுதிய பிறகு அவனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை. அப்படியென்றால் அந்தக் கடிதத்துக்கு அவள் எழுதிய பதில் கடிதத்தை ஒப்புக்கொண்டு விட்டான், அவன் அந்தக் கடிதத்தில் கூறிய பிரகாரமே அவளை மறந்துவிடப் பிச்சுமணி சம்மதித்துவிட்டான் என்றே தோன்றியது. அப்படித்தான் உமா தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றாள். தன்னையும் பிச்சுமணியையும் பொறுத்த வரையில் அந்தக் கடிதத்தோடு எல்லாமே தீர்ந்துவிட்டது என்றும் முடிவு கட்டிக்கொண்டாள். அதற்கு மேல் தன் அந்தராத்மாவில் எழக்கூடிய கேள்விகளுக்கு இடமளிக்கவும் அவள் மறுத்துவிட்டாள்.

அன்று சனிக்கிழமையாதலால் பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலுக்குப் போய்விட்டு உமா தன் வீட்டை நோக்கித் திரும்பி வ்ந்தாள். அந்திப் பொழுது. இருட்டி விட்டது.

அவள் தன் வீடு இருக்கும் வீதியில் ஏறிச் சிறிது தூரம் நடந்ததுமே, வேறொரு திருப்பத்திலிருந்து அவளுக்குப் பின்புறம் காலடி ஓசைகள் தொடர்ந்து வந்தன. தன்னை அவ்வாறு பின்தொடர்வது யார் என்பதை அவளுடைய இருதயத்தின் எழுச்சியே எடுத்தியம்பியது. உமா தன்னைத் திடப்படுத்திக் கொள்ள முயன்றாள். ஆனால் அவளுடைய அறிவின் அங்குசத்தையும் மீறி மதயானை போல் முரண்டெழும் இருதயத்தின் இன்பக் கிளுகிளுப்பில் அவளுடைய சக்தி அனைத்தும் அமுங்கி மறைந்துவிட்டன. வேட்டைக்காரனிடமிருந்து தப்பி ஓடும் மான்குட்டியின் மூச்சுகளைப் போலவே அவளுடைய பெருமூச்சுகள் துரித கதியில் இரைந்தன. கால்களின் நடுக்கத்தால் அவளால் விரைந்து செல்ல முடியவில்லை. அவளுடைய உள்ளுணர்ச்சிகளோ பறந்தோடி விடும்படி தூண்டிக் கொண்டே இருந்தன. ஆனால் அதற்குத் தேவையான சக்திதான் அப்போது அவளிடம் இல்லை. சட்டென்று உமா அந்த வீதியின் குறுக்கேயுள்ள சந்தில் திரும்பினாள். அங்கு தெரு விளக்கின் வெளிச்சம் எட்டாத ஓர் இருட்பகுதியை அவள் அடைந்து விட்டாள். தன்னைக்

கவனிக்காமல் பிச்சுமணி கடந்துபோய் விடுவான் என்று நினைத்தாள்.

காலடி ஓசை தடதடவென்று அவளை நோக்கி ஓடிவந்தது. உமா அப்படியே அயர்ந்து போய் ஒரு சுவர் மீது ஒட்டிய படி நின்று விட்டாள்.

இனி தப்ப முடியாது. பிடிபட்டுவிட்டோம் என்று அவளுக்குத் தோன்றியது. அவளுடைய கையைப் பிச்சுமணி கெட்டியாகவே பிடித்துக்கொண்டு விட்டான். ஆண்மையனைத்தும் அந்தப் பிடியில் நர்த்தனமாடிப் பெண்மையின் எதிரொலியில் இணைந்துவிடவே தவித்தன.

உமா தன் குரலில் ஒரு வியப்பையும் தன் முகத்தில் ஒரு புன்முறுவலையும் மிகச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு, ''நீயா, பிச்சுமணி?...'' என்று கேட்டாள்.

''நான்தான் என்பது உங்களுக்குத் தெரியும் உமா!'' என்றான் பிச்சுமணி நறுக்குத் தெறித்தாற்போல.

படபடக்கும் கண்ணிமைகளை உமா ஒரு கணம் மூடிக் கொண்டாள்.

''என்னிடமிருந்து ஏன் ஓடிவிட முயலுகிறீர்கள், உமா?'' என்று பிச்சுமணி கேட்டான்.

அப்போது அவன் கைப்பிடியில் இருந்த உமாவின் மிருதுவான கை நடுங்குவதை அவன் உணர்ந்திருக்க வேண்டும். உடனே அவனுடைய மனத் தாங்கலான போக்கு மாறிவிட்டது. பாசப் பரிவின் உறுதியோடு அவன் தன் கைவிரல்களால் அவளுடைய விரல்களைப் பின்னி மூடிக் கொண்டான். பிறகு அவளுடைய முகத்தைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான்.

''உமா! என் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை!''

உமா மறுபடியும் தன் கண்ணிமைகளை மூடிக் கொண்டாள்.

''என்னைப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் எண்ணவில்லையா, உமா?'' என்று ஆவலோடு கேட்ட பிச்சுமணி ''நானும் தாத்தாவும் தீர்த்தயாத்திரையிலிருந்து இன்று மாலைதான் வந்தோம். வந்ததுமே உங்களைப் பார்க்க நான் கிளம்பிவிட்டேன். என் பேபியை (ஆஸ்டின் காரை) உங்கள் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள சந்தில் நிறுத்தி யிருக்கிறேன்!'' என்றான்.

உமா தன் கண்கள் விரிய அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''அப்பப்பா! தீர்த்த யாத்திரை போதும் போதும் என்று ஆகிவிட்டது.''

''ஏன், அந்த யாத்திரையில் நீ சந்தோஷப்படவில்லையா?'' என்று உமா எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு கேட்டாள்.

பிச்சுமணி மறுபடியும் சிரித்தான். ஆனால் சற்று வறட்சியாகவே சிரித்தான். ''நான் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காக அங்கே போகவில்லை. என் தாத்தாவுக்குத் துணையாகத்தான் போனேன். அங்கே கன்யாகுமரியிலேயே இன்னும் சில நாட்கள் தங்கியிருக்கும்படி நேர்ந்தால் கடலில் விழுந்து மூழ்கியே போயிருப்பேன்!'' என்றான் பிச்சுமணி ஒரு பொருமலுடன்.

''அசட்டுத்தனமாகப் பேசாதே!'' என்று உமா கண்டித்தாள். தன் கை விரல்களையும் சட்டென்று அவனுடைய பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டாள். இப்போது அவளுடைய குழப்பம், நெஞ்சின் படபடப்பு எல்லாம் கடந்து போய் விட்டன. அவள் இப்போது தன்னை நொந்து கொண்டும், பிச்சுமணிக்காக வருந்திக்கொண்டுமே நின்றாள்.

''உமா! நான் கன்யாகுமரியில் வலம்புரிச்சங்கம், குங்குமச் சிமிழ், முத்து வளையல்கள், கருமணி மாலைகள் எல்லாம் வாங்கினேன்....''

''வாங்க வேண்டியதுதானே!'' என்று உமா பெருமூச்செறிந்தாள்.

''உங்களுக்காகத்தான் நான் வாங்கி வந்தேன்!''

''எனக்கா?''

''பின்னே யாருக்கு என்று நினைத்தீர்கள் உமா?''

உமா பதில் சொல்ல வில்லை.

அவளது முகத்தைப் பிச்சுமணி கூர்ந்து பார்த்தபடி ''உமா! என்னிடம் நீங்கள் ஏதாவது கேட்க வேண்டியிருக்கிறதா? எதாக இருந்தாலும் கேட்டுவிடுங்கள்!'' என்றான்.

''இல்லை, இல்லை, ஒன்றும் இல்லை!'' என்று உமா வேகமாகத் தலையாட்டினாள்.

''எனக்கும் லலிதாவுக்கும் கல்யாணம் நடக்கப் போகிறது என்று கேள்விப்பட்டீர்களா?''

உமா நன்றாக நிமிர்ந்து பிச்சுமணியைப் பார்த்தாள். பிறகு அவள் ''ஆமாம்!'' என்றாள் உணர்ச்சியைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல்.

''டாக்டர் ஜகந்நாதன்தானே இதை உங்களிடம் சொன்னார்?''

''ஆமாம்! உனக்கும் லலிதாவுக்கும் கூடிய சீக்கிரம் கல்யாணம் நடக்கும் இல்லையா?''

''அப்படித்தான் எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்!'' என்றான் பிச்சுமணி.

(தொடரும்)


வேறொரு டார்ச்சும் இதைப்
போல் நன்ருக உழைத்து
நீடித்து
ழிருப்ப
தில்லை
டைப் 3592— ரூ 3.00 மட்டுமே
எவரெடி

வழக்கறிஞர் வரிசை

நீண்ட குச்சி, ஒன்றினால் விளிம்பு கட்டிய மேஜை மீதிருக்கும் ஒரு பந்தைக் குறிபார்த்துத் தள்ளி அந்தப் பந்து பக்குவமாக மற்றப் பல பந்துகளின் மீது மோதிப் பைக்குள் அவைகளைத் தள்ளி 'பாயிண்டு'களையும் வெற்றியையும் பெறுவது பில்லியர்ட்ஸ் என்னும் விளையாட்டில்!

இதே மாதிரி சட்டம் என்கிற விளிம்பு கட்டப்பட்ட நீதிஸ்தலத்தில் திறமை என்ற குச்சி கொண்டு வாதம் என்ற பந்தை விஷயங்கள் என்ற மற்றப் பந்துகளின்மீது மோத விட்டு அவைகளை வெற்றிகரமாக நீதிபதிகளின் உள்ளங்களில் தள்ளுவது வழக்கறிஞர் தொழில்!

முந்தியது பொழுதுபோக்கு! பிந்தியது தொழில்! இரண்டிலுமே ஒரே அளவில் திறமை காட்டி வெற்றியும் பெற்ற நபர் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் சாக்ஷாத் டி. வி. முத்துக்கிருஷ்ணையர்தான்!

திருச்சி மாவட்டம் திருச்செந்துறையைச் சேர்ந்த திரு முத்துக்கிருஷ்ணையர் கிறிஸ்துவக் கல்லூரி, மாநிலக் கல்லூரி, சட்டக் கல்லூரிகளில் தம் படிப்பை முடித்துக் கொண்டு 1903ம் ஆண்டில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். அப்போது இவருடைய நெருங்கிய நண்பரான திரு டி. வி. சேஷகிரி ஐயர் 'அப்பலேட் சைட்' என்று குறிப்பிடப்படும் புனர்விசாரணைப் பிரிவில் பிரபல வழக்கறிஞராக விளங்கி வந்தார். ஆகவே அவருடன் தொழில் தொடர்பு கொண்டு அவருக்கு ஜூனியராகப் பணியாற்றத் தொடங்கினார். ஏற்கனவே 'ஒரிஜினல் சைடில்' விசாரணையான விஷயங்களை மீண்டும் அலசி ஆராய்ந்து, புனர் விசாரணைக்கு வாக்காக, சாதகமாக அடுக்கி அற்புதமாக விரித்து வாதாடும் ஆற்றலைச் சேஷகிரி ஐயரிடம் சேர்ந்த சில வருஷங்களுக்குள்ளாகவே முத்துக்கிருஷ்ணையர் பெற்றுத் தாமாகவே பல பெரிய ஜாம்பவான்களுக்கு எதிராக நின்று வாதாடத் தொடங்கினார். பேரும் புகழும் தாமாகவே அவரை வந்தடைந்தன.

சட்டத்தில் வெகு நல்ல பரிச்சயமுண்டு. தாம் எடுத்துக் கொண்டிருக்கும் வழக்குகளின் விஷயங்களைக் குறிப்பிட்ட கோணங்களிலிருந்து ஒருவித தீர்மான அடிப்படையில் அமைத்துக் கொள்ளும் சாமர்த்தியம் உண்டு. இதனால் சட்டங்களைத் தம்மிடம் உள்ள விஷயங்களுடன் இணைத்துத் திறமையுடன் வாதாடும் தன்மையில் நிகரற்றவராகப் பிரகாசிக்கத் தொடங்கினார்.

'அந்த நாட்களில் அவரது தோற்றம் கம்பீரம் நிறைந்ததாக இருக்கும். கோவையாகவும் குளுமையாகவும் பேசும் திறனும் நிறைய உண்டு. ஆகவே ஆரம்ப நாட்களிலிருந்தே அவர் நீதிபதிகளின் உள்ளங்களில் தம்மைப் பற்றிச் சிறந்த அபிப்பிராயத்தைத் தோற்றுவித்து விட்டார்' என்று அவருடன் பழகியவர்கள் சொல்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் இன்று கூட எண்பத்திரண்டு வயதைக் கடந்த பின்னும் அவர் கம்பீரமாக மாலை வேளைகளில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து தமக்குப் பிடித்தமான புத்தகங்களில் கவனத்தைச் செலுத்துகிறார். உடல் வேண்டுமானால் ஓரளவு தளர்ந்திருக்கலாமே தவிர, உள்ளமும் குரலும் அப்படியேதான் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். சமீப காலம் வரை கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுகள் பார்ப்பதில் கூட நிறைய ஆர்வம் காட்டி வந்தாராம். அவரே ஆதி நாட்களில் ஒரு விளையாட்டு விற்பன்னராம்! கால்பந்து ஆட்டம் கல்லூரி நாட்களில் அவருக்கு மிகவும் பிடித்தமானது.

இவர் கையாண்ட வழக்குகளில் அந்த நாட்களில் 'கூத்தநாடித் தோப்பு' அப்பீல் வழக்கு பிரசித்தமானது. வாரிசு இல்லாத பெருந்தனக்காரர் ஒருவர் தமது சொத்துக்களெல்லாம் குறிப்பிட்ட தர்மத்துக்கும் பொதுப் பணிக்கும் என்று எழுதி வைத்து விட்டுக் காலமானார். கீழ்க்கோர்ட்டில் சில சாட்சிகள் கூறியதை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட பொதுப் பணி நிர்வாகிகளுக்கு எதிராக, உயிலே பொய்யானது என்ற அடிப்படையில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. வழக்கு அப்பீலுக்கு வந்தது.

அப்பீல் நீதிபதிகளில் ஒருவர் ஆரம்பத்திலேயே கொஞ்சம் கடூரமாக உட்கார்ந்தார். கீழ்க் கோர்ட் தீர்ப்பின் ஆதரவாளர் போலக் காணப்பட்டார். ஆனால் பொதுப் பணி நிர்வாகிகள் சார்பில் ஆஜரான முத்துக்கிருஷ்ணையர் நிதானமாகக் கீழ்க் கோர்ட்டு சாட்சியங்களை அலச ஆரம்பித்தார். எந்த விதங்களிலும் பொதுப் பணி நிர்வாகிகள் தனித் தனியாகவோ கூட்டாகவோ உயிலின் மூலம் ஒரு பைசாக்கூட சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று விவரித்தார். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் ஒரு பொய் உயிலைத் தயாரிக்க வேண்டிய அவசியம் எங்கிருந்து வருகிறது என்று விவாதித்தார். முடிவு: அப்பீல் வெற்றி!



திரு டி. வி. முத்துக்கிருஷ்ணையர்

திரு முத்துக்கிருஷ்ணையர் அதிகமாக சிவில் வழக்குகளைத்தான் கையாண்டார்! அதற்காகக் கிரிமினல் வழக்குகளை எடுத்துக் கொள்ளாமல் இல்லை. ஒரு தடவை சர்க்-

காரே கிரிமினல் வழக்கு ஒன்றில் அவரைப் பிரத்தியேகமாக பப்ளிக் பிராசிக்யூடராக நியமித்து நடத்த ஏற்பாடு செய்தது.

மற்றொரு தஞ்சாவூர் மிராசுதார் குடும்ப தஸ்தாவேஜு வழக்கில் இவரின் அப்பீல் வாதத்தின் வேகத்தையும் கோவையையும் நீதிபதிகள் பாராட்டி இவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தார்கள். ஆனால் எதிர்த்தரப்பினர் பிரிவி கவுன்சிலுக்கு வழக்கைக் கொண்டு போனார்கள். இவர் இங்கிலாந்தில் உள்ள பாரிஸ்டர்களுக்கு ஆலோசனை சொல்ல அங்கும் போனார். தம் கட்சிக்காரருக்குக் கடல் கடந்த வெற்றியுடன் திரும்பி வந்தார்.

ஆதி நாட்களில் இந்திய தேசிய காங்கிரசுடன் ஐயர் நிறையத் தொடர்பு கொண்டிருந்தார். நாளடைவில் தீவிரவாதிகள் முன்னணிக்கு வரவே இவர் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுங்கிக் கொண்டார். சைமன் கமிஷன் சென்னைக்கு வந்ததையொட்டி நிகழ்ந்த கலவரத்தைக் கண்டிக்கும் வகையில் மறு நாள் கோகலே ஹாலில் நடந்த கூட்டத்தில் பலர் பேசினார்கள். ஆனாலும், முத்துக்கிருஷ்ணையர் ஆணித்தரமாகவும், அழுத்தமாகவும் பேசிய பேச்சு பல நாட்கள் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தவர்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

முத்துக்கிருஷ்ணையரிடம் ஜூனியராக வந்து தொழில் பயின்றவர்களில் பலர், ஜில்லா நீதிபதிகளாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை இவரிடம் ஜூனியராக இருந்தவர். இன்று சென்னை உயர் நீதிமன்றப் பிரதம நீதிபதியாக இருக்கும் திரு ராமச்சந்திரய்யர் இவருடன் பல வழக்குகளில் ஒன்றாக வேலை செய்தவர். திரு வைத்தியநாதய்யர் இப்போது ஒரு சீனியர் வழக்கறிஞர்.

தம் ஜூனியர்களுக்கு முத்துக்கிருஷ்ணையர் அநேகமாக ஒரு முரட்டுப் பள்ளிக்கூட உபாத்தியாயராகவே விளங்கினாராம். சரியான மேற்கோள்களை, 'லா ஜர்னல்'களிலிருந்து தேடிப் பிடிக்கும் வரை, விடவே மாட்டாராம். இதே மாதிரி கேஸ் விஷயங்களைப் புரிந்து கொள்ளும் வரை கேள்விகள் கேட்டுத் துளைத்து விடுவாராம். பிரஸ்தாப வழக்குகளில் சட்ட நுணுக்கங்களை எப்படிப் பொருத்தி வாதாடுவது என்பதைக் கணக்குப் பரீட்சை மாதிரியே ஜூனியர்களுக்கு நடத்தி விளக்குவார்.

'ஃப்ரீ மேசன்' ஸ்தாபனத்துடன் முத்துக்கிருஷ்ணையர் நிறையத் தொடர்பு கொண்டவர். கலா ரசிகரும் கூட. சென்னை கருணை விலாச சபா காரியதரிசியாகப் பல தடவைகள் பணியாற்றியிருக்கிறார். வழக்கறிஞர் சங்கக் காரியதரிசியாகவும் இருந்திருக்கிறார்.

முழுக்க முழுக்க அரை நூற்றாண்டு காலம் பிரமிப்பூட்டும் வண்ணம் தொழில் நடத்தி விட்டு 1953ம் ஆண்டு ஓய்வு பெற்று இன்று நிம்மதியாக ஒதுங்கி நிற்கும் திரு முத்துக்கிருஷ்ணையர் சிறந்த சம்பாஷணையாளர். பல இளைஞர்களுக்கு அந்தக் காலத்தில் ஆதர்சத் தொழில் வழிகாட்டியாக இருந்து பணி செய்தவர்.

— **கோமதி ஸ்வாமிநாதன்**

ராணி கிடாலோ

ராணி கிடாலோ என்ற நாக பெண்மணி சுதந்திர பலிபீடத்தில் தன்னையே தியாகம் செய்தவள். அந்நிய ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட நாகர்கள் முனைந்தது கண்டு பிரிட்டிஷார் கலங்கினார்கள். ஹையதேவ், ஜதுநாங் என்ற இரு நாகர் தலைவர்களைப் பிடித்துத் தூக்கிலிட்டார்கள். இந்தச் சம்பவம் கிடாலோவிடம் தேச வெறியையே கிளப்பி விட்டு விட்டது.

1930ல் இந்தியாவெங்கும் அஸ்ஸாம் உள்படச் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருந்த சமயம். இவள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைக் கிளறி விட்டாள். இவளை ஒரு தெய்வம் என்றே மக்கள் கருதினர். அவளை எல்லாரும் ராணி என்று அழைத்தனர். 1932ல் ஒரு டாக்டரின் உதவியால் அவளைப் பிரிட்டிஷார் பிடித்தனர். இவள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டது. ஜெயிலுக்குள்ளேயே விசாரணை நடைபெற்றது. அவளுக்கு ஆயுள் தண்டனை விதித்தார்கள். அவள் இருந்த சிறையைத் தாக்கி விடுவிக்க நாகர்கள் ஏராளமாகக் கூடி விட்டார்கள். அவர்களைக் கிடாலோவே அடக்கினாள். ''என்னை அவர்கள் இரண்டு வருடங்களுக்கு மேல் சிறையில் வைத்திருக்க முடியாது. மகாத்மா காந்தியை அப்போது பார்க்கச் செல்வேன். நாடு சுதந்திரமடைவது நிச்சயம்'' என்றாள் அவள்.

சிறையிலிருந்து அவள் விடுபடவேயில்லை. அங்கு அவளை மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். 1935ம் ஆண்டில் பண்டித நேரு ஷில்சாருக்கு விஜயம் செய்தார். 'ராணி' கிடாலோவின் வீரச் செயல்கள் அவர் காதுக்கு எட்டின. அவளை விடுவிக்கத் தம்மால் இயன்ற முயற்சி செய்து வெற்றியும் பெற்றார்.

1936ல் அலஹாபாத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் இப்பெண்மணியின் விடுதலையைக் கோரி ஒரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. 1945-ல் கிடாலோ விடுதலையடைந்தாள். ஆனால் நாகாலாந்து இன்று பாரத நாட்டின் ஒரு பகுதியாக இணைந்திருப்பதை அவள் காணக் கொடுத்து வைக்கவில்லை.

—**லலிதா நடராஜன்**


நிச்சயமாகத் தெரியுமா?
ஆம், கவர்ச்சி மிக்கவள்தான். அழகான ஆடை அணிந்திருக்கிறாள்; படிப்பிலும் சுறுசுறுப்பானவள்தான். ஆனால் எளிதில் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவள்தானா என்பது நிச்சயமாகத் தெரியுமா?
உடலில் துர்நாற்றம் வீசும் கிருமிகளை உங்களால் தவிர்க்க முடியாது. ஆனால் வழக்கமாக சிந்தால் உபயோகித்து அவைகளை அழித்து விடலாம். இந்தியாவில் அற்புதக் கிருமிநாசினி ஜி-11* கொண்ட ஒரே சோப் இதுதான். லட்சக்கணக்கான மக்கள் உபயோகித்து, பரிசீலனை செய்யப்பட்டது. உங்களுடைய பிரபல்யம் பெரிதும் அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.
மகிழ்ச்சியூட்டும், நறுமணம் பொருந்திய சிந்தால் சருமத்தைக் கறைப்படுத்தும் கிருமிகளைக் கூட அழித்து விடும். அதனால் மேனி மாசற்று விளங்கும்.
நிச்சயமான பாதுகாப்பிற்கு குழந்தையை சிந்தால் சோப் கொண்டு நீராட்டி, துர்நாற்றம் போக்கும் இளம் மணம் கமழும், இதமான ஜி-11 அடங்கிய சிந்தால் டால்கம் பவுடரைத் தூவித் தடவுங்கள்
* எல். கிவாடன் அண்டு கம்பெனியின் ட்ரேட் மார்க்
* விவரமான "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு "கோத்ரெஜ், பம்பாய்-12", என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.
வியர்வை நாற்றத்தைப் போக்கி எழிலுடன் விளங்கச் செய்யும் சோப்
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
Godrej
கோத்ரெஜ்
சோப்புகளில் முதன்மையான பெயர்
CT. 10A. TAM.

நளபாகம்

ஜி.எஸ். பாலகிருஷ்ணன்



அன்புள்ள பாட்டிக்கு,

வடக்கே வேலையாக வந்தாலும் வந்தேன், வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டு எத்தனையோ யுகங்களாகி விட்டன. வற்றல் குழம்பு, வடு மாங்காய், ஊறுகாய் போன்ற சுவையான தயாரிப்புகளுக்காக நாக்கு என்னமா ஏங்குகிறது தெரியுமா? எத்தனை நாளைக்குத்தான் 'சப்'பென்றிருக்கும் சப்பாத்தியையும் 'ஆலு மட்டரை'யும் விழுங்க முடியும்? எனக்குச் சீடை சாப்பிட வேண்டும் போல் இருக்கிறது; முறுக்கை வாயில் போட்டு நொறுக்க வேண்டும் போல் தோன்றுகிறது. தேன்குழலை நினைத்தால் நாவெல்லாம் நீர் சுரக்கிறது.

மற்றப்படி எனக்குச் சௌகரியம்தான். ரூர்க்கி வழியாகப் போகும் கங்கைக் கால்வாயின் கரையில் உட்கார்ந்து கனவு காணக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே! அடிக்கடி ஹரித்துவாருக்கும், ரிஷிகேசத்துக்கும் சென்று இயற்கை அழகுகளை ரசிப்பதில் மனம் என்னமா தெம்பு பெறுகிறது தெரியுமா? 'மசூரி' உண்மையிலேயே ஒரு பூலோக சொர்க்கம்தான்.

நல்ல சாப்பாடு கிடைப்பதற்கு மட்டும் ஏதாவது வழி ஏற்பட்டு விட்டால் ரூர்க்கியிலேயே நான் நிரந்தரமாகத் தங்கி விடுவேன்.

ரூர்க்கி அன்புள்ள பேரன்
5–1–49 மணி

அன்புள்ள மணிக்கு,

உன் கடிதம். ஹரித்துவாரையும், ரிஷிகேசத்தையும் நீ வர்ணித்திருப்பதைப் பார்த்தால் உடனே தீர்த்த யாத்திரை கிளம்ப வேண்டும் போல் தோன்றுகிறது. கங்கையில் அமிழ்ந்து நீராடக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

உனக்கு நல்ல சாப்பாடு கிடைக்கவில்லை என்று கேள்விப்பட்டதும் என் மனசு ரொம்பக் கஷ்டப்பட்டது. உடனே எனக்கு ராசம்மாவின் நினைவுதான் வந்தது. அவளுக்கு வடக்கே வேலை செய்து பழக்கமுண்டு. புது தில்லியில் 'கரோல் பாக்'கில் இரண்டு வருடங்கள் ஓர் எஞ்சினீயர் வீட்டில் வேலை பார்த்திருக்கிறாள். வயது அறுபதானாலும்கூட ஓடி ஆடி வேலை செய்வாள்.

அவளுடைய சமையலைப் பற்றி நான் அதிகமாக எழுத வேண்டிய அவசியமில்லை. ராசம்மாவின் வேப்பம்பூ ரசம் ரொம்பப் பிரசித்தமானது. பொரிவிளங்காய் செய்வதில் அவளுக்கு நிகர் அவளேதான். உன்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வாள் அவள். ஒழுங்காக எண்ணெய் தேய்த்துக் கொள்கிறாயா என்று கவனிக்கும்படி பிரத்தியேகமாகக் கூறியிருக்கிறேன்.

மறந்து விட்டேனே! நாளைக்கு 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸி'ல் அவள் இங்கிருந்து கிளம்புகிறாள். ரயிலடியில் சந்திக்கவும்.

உப்பிலியப்பன் துணை.

சென்னை அன்புள்ள
10–1–49 பாட்டி.



அன்புள்ள பாட்டிக்கு,

ராசம்மாவின் ருசியான சமையலைச் சாப்பிடப் போய் நான் ஓரிரண்டு பவுண்டுகள் கூடி யிருப்பதென்னவோ உண்மை. அவள் செய்த கத்திரிக்காய் ரசவாங்கியை ஒரு கை பார்த்த என் வட இந்திய நண்பர்கள் அடிக்கடி என் வீட்டுக்கு விஜயம் செய்கிறார்கள். அவள் செய்த கைமுறுக்கு யந்திரத்தில் செய்ததோ என்று வியந்தான் ஓர் அமெரிக்க மாது.

எல்லாம் சரிதான்...... ஆனால் ராசம்மாவின் ஒரு கல்யாண குணம்தான் என் பொறுமையைச் சோதிக்கிறது. எனக்கு வரும் அத்தனை கடிதங்களையும் அவளுக்கு நான் வரிக்கு வரி படித்துக் காட்ட வேண்டுமாம். அதே போல் எழுதும் கடிதங்களையும், அவளுக்குக் காட்டி, 'அப்ரூவல்' பெற்ற பிறகுதான் அனுப்பலாமாம். ஏதாவது கடிதத்தை நான் படித்துக்காட்ட மறுத்தால் அவளுக்குப் பொல்லாத கோபம் வந்து விடுகிறது. தன்னை 'வேற்று மனுஷி'யாக நடத்தும் வீட்டில் அவள் வேலை செய்ய மாட்டாளாம். ஆபீஸ் கடிதங்களெல்லாம் உனக்குப் புரியாது என்று சொன்னாலும், 'நான் என்ன முட்டாளா?' என்று பெரிதாக அழத் தொடங்கி விடுகிறாள்.

இன்னொரு கஷ்டம் என்ன தெரியுமா? வாய் தவறிக்கூட அவளை 'குக்' என்று குறிப்பிட்டு விடக் கூடாது. அன்று வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்த அமெரிக்க மாதிடம் அவளை 'குக்' என்று குறிப்பிட்டு விட்டேன். அடுத்த நிமிஷம் ராட்சஸியாக மாறி விட்டாள் ராசம்மா. 'என்னைப் பார்த்தால் 'குக்'காட்டமாவா இருக்கிறது?' என்று சீறினாளே பார்க்கலாம்.

அதிகம் வளர்ப்பானேன்! ராசம்மா இனிமேல் இங்கு வேலை செய்ய மாட்டாளாம். அவளை நாளைக்கு ஊருக்கு அனுப்புகிறேன். வந்துசேர்ந்த விவரத்துக்குக் கடிதமெழுதவும்.

ரூர்க்கி அன்புள்ள
25-1-49 மணி

அன்புள்ள மணிக்கு,

ராசம்மா பத்திரமாக வந்து சேர்ந்தாள். நீ அவளை 'குக்' என்று சொன்னதற்காக உன்னை இன்னும் திட்டிக் கொண்டிருக்கிறாள்.

போனது போகட்டும். உனக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்துப் போட நாளைய ரயிலில் அப்பாழ்வானை அனுப்புகிறேன். இவன் ரொம்ப நல்ல பையன். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆராவமுதாச்சாரி வீட்டிலே பல வருஷங்கள் வேலை பார்த்தவன். இவனுக்குப் பத்தியச் சமையல்கூடத் தெரியும். உனக்கு ஏதாவது தலை வலி, ஜுரம் என்றால் மணக்க மணக்க மிளகு ரசம் பண்ணித் தருவான்.

மறந்து விட்டேனே! பின்னையாண்டானுக்குச் சங்கீதத்திலே ஒரே ஆர்வம். கராடி வெங்கோபாச்சாரியிடம் குருகுல வாசம் பண்ணிக் கர்நாடக சங்கீதத்தைக் கரைத்துக் குடித்திருக்கிறான். ஊஞ்சல் பாட்டுக்கள்கூடத் தெரியும் என்றால் நீ நம்ப மாட்டாய். பொம்மனாட்டிகளெல்லாம் வெட்கித் தலை குனியும்படி 'ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜயமங்களம்' பாடுவான்.

பையன் வடநாட்டுக்குப் புதுசு. அதனால் தவறாமல் ரயிலடிக்கு வந்து அழைத்துப் போ.

சென்னை அன்புள்ள
30-1-49 பாட்டி

அன்புள்ள பாட்டிக்கு,

அப்பாழ்வான் வந்து சேர்ந்தான். அவனுடைய 'தளிகை' என்னவோ பிரமாதமாகத்தான் இருக்கிறது. அவன் சமைத்த கறி அமுதையும், கனி அமுதையும் என் நண்பர்கள் வெகுவாக ரசித்தார்கள். ஆனால் ஒரோரு சமயம் சமையலில் தன் ஆராய்ச்சித் திறனை அவன் புகுத்த முயலும்போதுதான் சங்கடமேற்படுகிறது. கத்திரிக் காயினால் அல்வாசெய்வதற்கும், பாவற்காயினால் 'கேக்' செய்வதற்கும் அவன் முயலுகையில்தான் எனக்கு உடம்பை என்னவோ செய்கிறது.

'குருகுல வாசம்' செய்கையில் ஏற்பட்ட பழக்கமோ என்னவோ, துவைத்து உலர்த்திய புடவைகளை மடித்து வைக்க அப்பாழ்வானுக்கு ரொம்பப் பிடிக்குமாம். இதற்காகவே என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறான்! தவிர, குழந்தையை மடியில் விட்டுக் கொண்டு, 'கண் மணியே கண் வளராயோ?' என்று பாட்டுப் பாடியபடி பால் புகட்ட அவனுக்கு ரொம்ப இஷ்டமாம். எனக்கு அந்தக் காட்சியைக் கற்பனை செய்தாலே நடுக்கம் ஏற்படுகிறது. இப்பொழுதுகூட ஒரோரு சமயம், குஷி ஏற்பட்டு, அப்பாழ்வான் சங்கடமான சமையலை மறந்து சங்கீதம் பாடுவதுண்டு.

பாட வேண்டாம் என்று நான் கேட்டுக் கொண்டதற்காகக் கோபித்துக் கொண்டு, பெட்டி படுக்கையுடன் வெளியேறி விட்டான். இனிமேல் திரும்பி வரமாட்டான் என்று தான் தோன்றுகிறது.

ரூர்க்கி அன்புள்ள
10-2-49 மணி

அன்புள்ள மணிக்கு,

அப்பாழ்வான் கோபித்துக் கொண்டு போய் விட்டான் என்று அறிய எனக்கு ரொம்ப வருத்தம்.

போகட்டும், எம். ஜி. வி. பதி என்ற வேங்கடாஜலபதியை உனக்குச் சமைத்துப்





''எவனோ ஜன்னல் வழியா உள்ளே புகுந்து என் சாப்பாட்டுத் தட்டைத் திருடிக்கிட்டுப் போயிட்டானுங்க!''

போட அனுப்புகிறேன். என்ன விழிக்கிறாய்? மொட்டை வெங்கிட்டுவை உனக்கு நினைவில்லையா? சானுப் பாட்டியின் சாக்ஷாத் பேரன். சினிமாவில் சில்லறை நடிகனாக இருந்த போது பெயரை எம். ஜி. வி. பதின்னு மாற்றிண்டானும். பேஷாகச் சமைத்துப் போடுவான். கொஞ்சம் கைமருந்தும் தெரியும். இவனாவது ஒழுங்காக இருக்கிறானா பார்ப்போம்.

சென்னை — அன்புள்ள
25—2—49 — பாட்டி

அன்புள்ள பாட்டிக்கு,

எம். ஜி. வி. பதியின் சமையலையாவது சாப்பிட்டுத் தொலைத்து விடலாம். அவனுடைய் தொண தொணப்புத்தான் சகிக்காது போ!

தன்னுடைய சினிமா அனுபவங்களை அவன் அவிழ்த்து விடுகையில் அறைந்து விடலாம் போல் தோன்றும். 'சிவசாப விமோசன'த்தில் தான் பூத கணமாக நடித்த திறமையையும், 'அல்லி தர்பாரி'ல் தான் அல்லிக்கு வெண்சாமரம் வீசுகையில் முகத்தில் வரவழைத்துக் கொண்ட சோக பாவத்தையும் பற்றி விடாது பேசித் தள்ளுவான் மனுஷன்.

சினிமா தொணதொணப்பையாவது பொறுத்துக் கொண்டு விடலாம். அவனுடைய வேதாந்த விசாரம்தான் பெரிய தலைவலி போ! சாம்பார்தான் சம்சாரமாம். அதில் மிதக்கும் கத்திரிக்காய்தான் ஜீவாத்மாவாம். அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் மிளகாய்ப் பொடிதான் பரமாத்மாவாம்! — இத்யாதி.

எல்லாவற்றையும் விட, வைத்தியனாக மாறிக் கண்ட கண்ட சூரணத்தையெல்லாம் என்னை அவன் விழுங்க வைக்கும்போதுதான் ஆத்திரம் எல்லையை மீறும். ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் என் நாடியைப் பிடித்துப் பார்ப்பான் அவன். அடுத்த நிமிஷம் எனக்குக் கடுமையான ஜுரம் அடிப்பதாகக் குறிப்பிடுவான். நான் என்ன மறுத்தாலும் செவி சாய்க்க மாட்டான். ''நீ சிறு பிள்ளை. உனக்கு ஒன்றும் தெரியாது'' என்று படுக்க வைத்து விடுவான். தொடர்ந்து தன்னுடைய கை மருந்துகளைப் பிரயோகிக்கத் தொடங்குவான்.

சென்ற வாரம் என் உத்தியோக உயர்வுக்கான பேட்டி இருந்தது. முதல் நாள் இரவு என் முகத்தைப் பார்த்து உடம்பு சரியில்லை என்று கண்டு பிடித்தான் மிஸ்டர் பதி. தொடர்ந்து ஒரு சூரணம் தரப்பட்டது. எத்தனையோ சூரணங்களை விழுங்கினது போல் அதையும் விழுங்கித் தொலைத்தேன் நான்.

அந்தப் பாழாய்ப்போன தூக்க மருந்து முப்பது மணி நேரம் தூங்க வைத்தது. பேட்டி எல்லாம் கோவிந்தா! என் முகத்தில் ஒரு புதுக் களை ஜொலிப்பதாகச் சொல்லி அறைக்குள் வந்த மாஜி சினிமா நடிகனை நான் அறையாமல் விட்டது அவன் பாக்கியம்.

பாட்டி! இனிமேல் சென்னையிலிருந்து நீ எனக்காக 'குக்' அனுப்ப வேண்டாம். இங்கேயே ஒரு பஞ்சாபியைப் பார்த்து வைத்திருக்கிறேன். சமையல் எல்லாம் பிரமாதமாக இருக்கும் என்று கேள்வி.

ரூர்க்கி — அன்புள்ள
26—3—49 — மணி

அன்புள்ள மணிக்கு,

எனக்கு என்ன எழுதுவதென்றே தெரியவில்லை. நான் அனுப்பின அத்தனை சமையற்காரர்களும் உன்னிடம் தங்காமல் போனதை நினைத்தால் எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிறது.

பஞ்சாபியைச் சமையலுக்கு அமர்த்தப் போவதாக எழுதியிருக்கிறாய். அந்தச் சமையலெல்லாம் உன் உடம்புக்கு ஒத்து வருமா? ஒத்துக் கொண்டாலும் அவன் நிரந்தரமாகத் தங்குவான் என்று என்ன நிச்சயம்?

சென்னை — அன்புள்ள
30—3—49 — பாட்டி

அன்புள்ள பாட்டிக்கு,


நீ இனிமேல் என் உடம்பைக் குறித்து அநாவசியமாகக் கவலைப்பட வேண்டாம். பஞ்சாபிச் சமையல், நம்ம பக்கத்துச் சமையலைவிட என் உடலுக்கு இன்னும் ஜோராக ஒத்துக் கொள்கிறது. தந்தூரிச் சப்பாத்தியும், மட்டர் பனீரும் என்ன ருசி தெரியுமா? ஆஹா கோப்தாவை நான் எப்படி வர்ணிப்பேன்?

பஞ்சாபி நிரந்தரமாகத் தங்குவதைப் பற்றிச் சந்தேகம் கிளப்பியிருக்கிறாய். பாட்டி! நீ நிஷ்கவலையாய்த் தூங்கு. சந்தோஷ் குமாரி இனி என்னை விட்டுப் போகவே மாட்டாள். நேற்று 'ரிஜிஸ்தாரர்' ஆபீஸில் அவளை என் நிரந்தரச் சமையற்காரியாக்கிக் கொண்டு விட்டேன்.

ஜீலம், சீனாப் நதிக் கரையில் பிறந்து வளர்ந்த உன் அழகிய நாட்டுப்பெண்ணுக்கு அடுத்த தபாலில் ஆசிகளை அனுப்புவாயா?

ரூர்க்கி — அன்புள்ள
5—4—49 — மணி

பிலிப்ஸ்



தொடக்கத்தி
லிருந்தேயுள்ள

மில்க் ஆப்

மக்னீஷியா



குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற, மிகச் சிறந்த அமிலநாசினியும் பேதி மருந்தும் ஆகும்

கோடிக்கணக்கானவர்கள் இந்த நம்பகமான முறையில் சமனம் காணுகின்றனர்

தொடக்கத்திலிருந்தேயுள்ளதும் உண்மையானதுமான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷ்யா, உலகெங்கும் கோடிக்கணக்கானவர்கள் தெரிந்து உபயோகித்து வரும் ஒன்றாகும். மலச்சிக்கல் அஜிறணமுண்டாகும் கஷ்டங்கள் இவைகளிலிருந்து நிவாரணம்பெற மில்க் ஆப் மக்னீஷ்யாவைப் போல் வேறில்லை. குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பேதி மருந்து! பிலிப்ஸ்!

உபயோகத்திற்காக ரஜிஸ்டர் செய்து தயாரிப்பவர்கள்
டேம்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யு) பிரைவேட் லிட்.





காற்றுள்ள போதே.

என்.டி.சீனிவாசன்



புதியவரின் குரலை அடுத்துத் தன் மகனின் பதில் காதில் விழுந்தது — பக்கத்து அறையில் இருந்து.

கிழவரின் முகம் கடுகடுத்தது; உதடுகள் துடிதுடித்தன. தாம் படுத்திருந்த கட்டிலை விட்டு அவர் எழுந்திருக்க முயன்றார்; ஆனால் முடியவில்லை.

"என்ன சார், நீங்கள் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறீர்களே! நீங்கள் மறைக்க முயல்வது மூன்று லக்ஷ ரூபாய் வருமானம்...... அதற்கு வரி என்ன என்பதை நீங்கள் கணக்குப் போட்டுப் பார்த்தீர்களா? நான் கேட்பது அதில் கால் பங்குகூடத் தேறவில்லை....." சிவசங்கரன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

"இருபதாயிரம் வைத்துக் கொள்ளுங்கள்"—வந்திருந்த புதியவர் கெஞ்சினார்.

"இதென்ன கத்திரிக்காய்ப் பேரமா? முப்பதாயிரம்கொடுத்தால் நீங்கள் கவலையில்லாமல் இருக்கலாம். இல்லாவிட்டால்.." சிவசங்கரன் எழுந்திருந்தான்.

புதியவர்—மோஹன்குமார் — சிறிது நேரம் யோசித்தார்.

பிறகு, "சரி, சனிக்கிழமை மாலை நாலு மணிக்கு மறுபடியும் உங்களைப் பார்க்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அவரும் எழுந்தார்.

"பணத்துடன் வாருங்கள்.... மற்ற விஷயங்களைச் சுலபமாகச் சரி செய்து விடலாம்....."

மோஹன்குமார் சிவசங்கரனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றார். சிவசங்கரன் கீழே போனான்.

"சிவசங்கரா! நீ செய்கிற காரியம் நியாயமா, தர்மமா? யோசித்துப் பார்த்தாயா?...."—கிழவர், அவனுடைய தகப்பனார், உதடுகள் துடிக்க அவனைக் கேட்டார்.

"அப்பா! நியாயம் தர்மம் இதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் நாம் இப்போது இருக்கும் நிலையிலேயே ஆயுள் முழுதும் இருக்க வேண்டியதுதான். இத்தனை நாட்கள் நான் உலகம் தெரியாதவனாக இருந்து விட்டேன். சந்தர்ப்பம் என்பது வாழ்வில் ஒருவனுக்கு ஒரு தரம்தான் வருகிறது. கிடைத்த சந்தர்ப்பத்தை ஒருவன் நழுவ விட்டு விட்டால், பிறகு அவன் ஆயுள் முழுதும் அழுதுகொண்டே இருக்க வேண்டியதுதான்....."

"என் உத்தியோக காலத்தில் எனக்கும் இது மாதிரி சந்தர்ப்பங்கள் நான்கைந்து முறை வந்தன..... ஆனால்....."

"நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதன் பலனைத்தான் நாம் இப்போது பார்க்கிறோமே. நமக்குக் கிடைக்கும் சம்பளத்தை மட்டும் நம்பிக் கொண்டிருந்தால், நாலாறு வருஷங்கள் நாம் உத்தியோகம் பார்த்தாலும் கூட இதே நிலையில்தான் இருக்க வேண்டும். நேற்று வேலைக்கு வந்தவனெல்லாம் சொந்தக் கார் என்ன, பங்களா என்ன, பாங்கில் பணமென்ன — எப்படியெல்லாம் இருக்கிறார்கள்! இந்த மோஹன்குமார் எமகாதகன். எப்படியும் இவன் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவான். அவன் பணமென்னவோ நியாயமாக அரசாங்கத்துக்குப் போகப் போவதில்லை. வேறு எவனுக்கோ போகப் போகிறது. அது எனக்குத்தான் வரட்டுமே!" — அவன் தன் காரியத்தைக் கவனிக்கச் சென்று விட்டான்.

மோஹன்குமார் மாடிக்கு வந்து மிகவும் ஆயாசத்துடன் சோபாவில் உட்கார்ந்தார்.

ஸ்ரீராம் — அவருடைய அந்தரங்கக் காரியதரிசி — மெதுவாக வந்து அவர் எதிரே இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தான். ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பிறகு மோஹன் குமார்தான் பேச ஆரம்பித்தார்.

"ஸ்ரீராம்! இந்தப் புதிய அதிகாரியை நாம் சமாளிப்பது ரொம்பக் கஷ்டம் என்று நினைக்கிறேன். முன்பு இருந்தவர் ஐந்து, ஆறு மிஞ்சிப் போனால் பத்து கொடுத்தால் வாங்கிக் கொண்டு விடுவார். இவன் ஒரேயடியாக முப்பது கேட்கிறான்....."

"முப்பதா? அடேயப்பா...!"—ஸ்ரீராமின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

"அடுத்த தடவை நாற்பது கேட்பான் போலிருக்கிறது...... ஹூம்! அவனைச் சொல்லி என்ன பயன்?.... ஊழல் நம்மிடம் இருக்கிறது..... பழைய குப்பைகளை யெல்லாம் கிளறி விட்டால் என்ன செய்வது என்று

பயத்தில் நாம் அவன் எதைக் கேட்டாலும் கொடுக்க வேண்டிய நிலையில்...''

சட்டென்று ஸ்ரீராம் நிமிர்ந்தான்.

''சாப்!....'' — மெதுவாக அவன் பேச ஆரம்பித்தான். திடீரென்று ஒரு சிறந்த யோசனை அவன் மனத்தில் உதயமாகிவிட்டது என்பதை அவன் முகம் உணர்த்தியது. ஒரு முறை தன்னைச் சுற்றிலும் அவன் பார்த்துக் கொண்டான். பிறகு மெல்லிய குரலில் தன் யோசனையைச் சொன்னான். அவன் பேசி முடித்ததும் உற்சாகம் தாங்க மாட்டாமல் மோஹன்குமார் அவன் முதுகில் ஒரு ஷொட்டுக் கொடுத்தார்.

''ஸ்ரீராம்! இத்தனை வருஷங்களாக நீ எத்தனையோ இக்கட்டான சந்தர்ப்பங்களில் என்னைக் காப்பாற்றி இருக்கிறாய். ஆனால் இது போல் ஓர் அருமையான யோசனையை இது வரை நான் உன்னிடமிருந்து கேட்டதில்லை. அவனும் பிழைக்கட்டும், நாமும் பிழைக்கலாம் என்று நான் பார்த்தேன். ஆனால் நம்மை அவன் பிழைக்க விடமாட்டான்போல் இருக்கிறது. நாம் பிழைக்க ஒரே வழி. அவனை முதலில் ஒழித்துவிட வேண்டும்.... ஹூம்! சீக்கிரம் காரியத்தில் இறங்கு. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை...''—மோஹன் குமார் எழுந்தார்.

அன்று சனிக்கிழமை. காலை முதலே சிவசங்கரனுக்கு ஒழியாமல் வேலை இருந்து கொண்டே இருந்தது. தம் அறைப் பக்கம் அவன் வருவான் வருவான் என்று கிழவர் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார். மணி மூன்றடிக்கும் வரை அவன் அவருடைய அறைப் பக்கம் வரவேயில்லை. கடந்த நான்கு தினங்களாகவே கிழவர் மனத்தில் ஒரே குழப்பம். ஒரே சஞ்சலம். பகல் பன்னிரண்டு மணிக்கு அவருக்குக் கொடுப்பதற்கு அவருடைய மனைவி கஞ்சி கொண்டு வந்தபோது, ''நீயாவது சொல்லக் கூடாதா அவனுக்கு. அவன் செய்யப் போகிற காரியம் எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. சமூகத்துக்கும் அரசாங்கத்திற்கும் பெரிய துரோகம் செய்கிறான் அவன்.....'' என்றார் நெஞ்சம் கொள்ளா வருத்தத்துடன்.

''நீங்கள் பேசாமல் இருங்கள். அவனுக்கு எல்லாம் தெரியும். அவன் சொல்வது போல் பணம் காசு இருந்தால்தான் நாலு பேர் நம்மை மதிப்பார்கள்..... அவனுக்கு வரும் பணத்தை வைத்துக் கொண்டு நல்ல அந்தஸ்தோடு எப்படி வாழ முடியும்?''

கோபம் வந்து விட்டது கிழவருக்கு. மனைவி கொடுத்த கஞ்சியைக் குடிக்காமல் மேஜை மேல் வைத்துவிட்டுப் படுத்து விட்டார்.

மணி நான்கடித்தது. சிவசங்கரன் மாடி ஏறிச் சென்றான். அவனைக் கூப்பிட்டுக் கடைசி முறையாக அவனிடம் ஒரு தரம் மன்றாடலாமா என்று நினைத்தார் கிழவர். டணத்தாசை பிடித்துவிட்ட அவன் எப்படியும் தம் பேச்சைக் கேட்க மாட்டான் என்று அவருக்குத் தோன்றவே பேசாமல் படுத்தார்.

மாலை 4—5க்கு மோஹன்குமாரின் கார் சிவசங்கரன் வீட்டு வாசலில் வந்து நின்றது. மோஹன் குமாருடன் ஸ்ரீராமும் உடன்வந்திருந்தான். காரின் கதவைத் திறந்து கொண்டு மோஹன் குமார் கீழே இறங்கினார். அவர் கையில் ஒரு பெரிய தோல் பை. கதவை மீண்டும் சாத்தி விட்டு மோஹன் குமார், ''அவர்கள் எப்போது வருவார்கள்?'' என்று ஸ்ரீராமை மெதுவாகக் கேட்டார். ''புறப்படுவதற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்புகூடப் போன் செய்தேன். சரியாக 4—20க்கு வந்து விடுவார்கள். அவன் ஒழிந்தான். இனி உங்களுக்குக் கொஞ்சம்கூடக் கவலையில்லை..'' என்றான் ஸ்ரீராம்.

மோஹன்குமார் கையில் தோல் பையுடன் மாடியேறிச் செல்வதைக் கண்டு பெருமூச்சு விட்டார் கிழவர்.

மோஹன் குமாரைப் புன்சிரிப்புடன் வரவேற்றான் சிவசங்கரன். இருவரும் சோபாவில் உட்கார்ந்தனர்.

''சரக்குகளையெல்லாம் ஆபீசுக்கு அனுப்பி விட்டீர்களா?'' என்று கேட்டான் சிவசங்கரன்.

''நீங்கள் சொன்னபடியே எல்லாவற்றையும் மாற்றி, இன்றுதான் அனுப்பினேன்.'' சொல்லி விட்டு மோஹன் குமார் தம் தோல் பையைத் திறந்து, நோட்டுக் கற்றைகளை வெளியே எடுத்தார்.

''அட! எல்லாம் பத்து ரூபாய் நோட்டுகளாகவே மாற்றிக் கொண்டு வந்து விட்டீர்கள் போல் இருக்கிறது..... ரொம்பச் சௌகரியமாய்ப் போய் விட்டது....''

மோஹன்குமார் அவைகளைச் சிவசங்கரனிடம் கொடுக்க, சிவசங்கரன் அவைகளை வாங்கி அப்படியே மேஜை அறைக்குள் வைத்தான். அத்தனையும் புது நோட்டுக்கள்!'

''மிகப் பெரிய வியாபாரி நீங்கள். எத்தனையோ அயல்நாட்டுச் சரக்குகளெல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். ஒரு நல்ல பேனா ஒன்று, நல்ல ரிஸ்ட் வாட்ச் ஒன்று எனக்கு.''— மெதுவாக இழுத்தான் சிவசங்கரன்.

'ஏது. இவன் பெரிய பெருச்சாளியாக இருப்பான் போலிருக்கிறதே' என்று நினைத்த மோஹன்குமாரின் அடி வயிற்றில் 'பக்'கென்றது.

ஆனால் அடுத்த கணமே, ''உங்களிடம் உண்மையைச் சொல்லுவதற்கென்ன? உங்கள் இலாகாவிலும் சரி, இன்னும் பல இலாகாக்களிலும் வேலை செய்து வந்த பல அதிகாரிகளுக்கு நான் ரிஸ்ட் வாட்ச், பேனா, வெல்வெட் என்று நிறையக் கொடுத்திருக்கிறேன். நமக்கு ரொம்ப வேண்டியவர்களாகிவிட்ட உங்களிடம் நான் எதற்கு மறைக்கவேண்டும்? நடுக் கடலில் கப்பலில் இருந்து பெட்டி பெட்டியாக இந்தச் சரக்குகளை இறக்கி, படகுகளில் கொண்டு வந்து ஒரு காலத்தில் மும்முரமாக வியாபாரம் நடத்தினவன்தான் நான். ஆனால் இப்பொழுது அந்தச் சுங்க இலாகாவில் எவனெவனோ அதிகாரியாக வந்திருக்கிறான். சட்டென்று அவர்களைச் சரிக்கட்ட முடிவதில்லை. இருந்தாலும் அடியோடு வராமலும் இல்லை..... என்னமோ போங்கள். நிறையத்தான் நான் சம்பாதிக்கிறேன். ஆனால் பயந்து கொண்டேதான் வாழ்கிறேன்.'' — ஒரு பெருமூச்சு விட்டார் மோஹன்குமார்.

கீழே மோட்டார் வந்து நிற்கும் சத்தம். மணி 4—20. சட்டென்று மோஹன்குமாரும், சிவசங்கரனும் எழுந்து சென்று வெளியே

எட்டிப் பார்த்தனர். ஒரு ஜீப்பில் இருந்து நான்கைந்து உயர்தரப் போலீஸ் அதிகாரிகளும் ஓர் இன்ஸ்பெக்டரும் இறங்கினர்.

"போலீஸ்!" — பதற்றத்துடன் சொன்னான் சிவசங்கரன். அவன் உடல் நடுங்கியது.

"எதுக்கு வர்றாங்க?" என்று கலவரத்துடன் கேட்டார் மோஹன்குமார்.

ஆனால் அவன் கேள்விக்குப் பதில் சொல்லச் சிவசங்கரன் அங்கில்லை.

அவன் நேராக ஹாலுக்கு ஓடிப் போய், மேஜை டிராயரில் தான் வைத்த நோட்டுக் கற்றைகளை அவசரமாக எடுத்துத் தன் டிரஸ்ஸிங் ரூமில் இருந்த துணிமணிகள் அடுக்கும் பீரோவுக்குள் பத்திரப்படுத்தினான்.

கிழே, கிழவர் தம் படுக்கையிலிருந்து மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தார். "கௌரி!" என்று கூப்பிட்டார் அவர்.

"ஜீப்பில் இப்போது யார் வந்தது? மேலே யார் போகிறது?" — பதற்றத்துடன் கேட்டார் அவர்.

"போலீஸ் இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் போலிருக்கிறது.....நாலைந்து பேர் மேலே போகிறார்கள்...." — சொல்லும் போதே அவள் குரல் நடுங்கியது.

"நான் அப்பொழுதே பயந்தேன். பேராசை இதில்தான் முடியும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். கையும் களவுமாகப் பிடிக்க அவர்கள் வந்து விட்டார்கள். லஞ்சம் கொடுக்கும் வியாபாரியே இதற்கும் உடந்தையாய் இருப்பான்...... போச்சு, இனி என் மானம், மரியாதை, கௌரவம் எல்லாம்..." தலையில் ஓங்கி ஓர் அடி அடித்துக்கொண்டார்.

மாடிப் படிகள் ஏறி மேலே வந்து விட்டனர் ஜீப்பில் இருந்து இறங்கியவர்கள்.

"நமஸ்தே! சிவசங்கரன்...." — ஓர் அதிகாரி கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார்.

"ஹலோ! மிஸ்டர் மோஹன்குமார்! நீங்கள் இங்கு எங்கே?" — அடுத்தபடி மற்றொருவர் உள்ளே வந்தார். அடுத்தகணமே மற்றவர்களும் உள்ளே நுழைந்து விட்டனர்.

உடனே படபடப்புடன் மோஹன்குமார், "இதோ இப்பொழுதுதான் கொடுத்தேன், முதலில் இந்த மேஜையில்தான் வைத்தார். அப்புறம்.... அதோ அந்த அறையில் ஒரு மரப் பீரோவில்...."—எதையோ சுட்டிக் காட்டினார்.

"பதற்றப் படாமல் நிதானமாகச் சொல்லுங்கள்.... எல்லாம் தெரிந்து கொள்ளத் தானே இங்கு வந்திருக்கிறோம்...."—முதலில் வந்த அதிகாரி சொல்லி விட்டு, "அவர் கொடுத்த அதைக் கொஞ்சம் எடுக்கிறீர்களா?" என்றார் சிவசங்கரனைப் பார்த்து. அவன் மெதுவாக உள்ளே சென்று சற்று முன் தான் பதுக்கி வைத்த நோட்டுக் கற்றைகளை எடுத்து வந்து மேஜையின்மேல் வைத்தான். போலீஸ் அதிகாரி அப்படியே அதைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு, "உம்மைக் காட்டிலும் பெரிய எத்தன் ஐயா உம்முடைய அந்தரங்கக் காரியதரிசி. பாங்கில் இருந்து மாற்றி வந்த நல்ல நோட்டுக்களைத் தான் வைத்துக் கொண்டு, உங்கள் தோல் பையில் அவ்வளவும் கள்ள நோட்டுக்களைத் திணித்து விட்டிருக்கிறான்..." என்றார் தம் குளிர்ச்சிக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டே.

அதே நேரத்தில் அந்த ஹாலுக்கு அடுத்த அறையில் இருந்து ஓர் அதிசய ஒலி எழுந்தது. சற்று முன் சிவசங்கரனுக்கும் மோஹன்குமாருக்கும் இடையே நிகழ்ந்த சம்பாஷணை அப்படியே திரும்பக் கேட்டது! அந்த அறையின் வாயிலில் தொங்கிக் கொண்டிருந்த திரையை அகற்றினார் போலீஸ் அதிகாரி. அங்கிருந்த மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த 'டேப் ரிகார்டர்' இயங்கிக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் சுங்க இலாகாவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் உட்கார்ந்திருந்தார். மோஹன்குமாரும், சிவசங்கரனும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த பூஜாடியின் உள்ளே மேற்பார்வைக்குத் தெரியாமல் ஒரு சிறு 'மைக்ரோபோன்' இருந்தது. அதிலிருந்து மெல்லிய 'ஒயர்' ஒன்று 'டேப் ரிகார்டரை' 'மைக்ரோ போனு'டன் இணைத்துக் கொண்டிருந்தது. சுங்க அதிகாரியைக் கண்டதும் போலீஸ் அதிகாரி அவருக்கு, 'ஸல்யூட்' அடித்து விட்டு நின்றார்.

இதற்குள் மற்றொரு போலீஸ் அதிகாரி, "மிஸ்டர் மோஹன்குமார்! கொஞ்சம் முரண்டு பிடிக்காமல் கமிஷனர் ஆபீஸ் வரையில் வருகிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே சென்று டேப் ரிகார்டரைக் கையில் எடுத்துக் கொண்டார்.

"உங்கள் மகனுக்கு அரசாங்கம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இந்த மோஹன்குமார் பெரிய பேர்வழி. வருமான வரியை ஏமாற்றுதல், கள்ளக் கடத்தல், கள்ளநோட்டு அச்சடித்து விநியோகித்தல்.... அப்பப்பா! அப்பப்பா! அவன் இது வரை பல அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு அட்டகாசம் பண்ணி வந்தான். போலீஸ் இலாகா அதிகாரிகள், உங்கள் மகன், நான் எல்லோரும் ஒன்றுசேர்ந்து திட்டம் போட்டு இன்று அவனைக் கையும் களவுமாகப் பிடித்ததோடு அவன் வாயிலிருந்தே பல விஷயங்களையும் வரவழைத்து, 'ரிக்கார்ட்' செய்துகொண்டும் விட்டோம். லஞ்சம் வாங்குவது எவ்வளவு பெரிய குற்றமோ அதற்கு மேல் பெரிய குற்றம் லஞ்சம் கொடுப்பது. பாவம்! எங்கள் திட்டத்தை அறியாத அவன் தானாக வேறு முந்திக்கொண்டு போலீஸில் போய் அகப்பட்டுக் கொண்டான்."—சுங்க இலாகா அதிகாரி பெரியவரிடம் நன்றியோடு சொன்னார்.

"நான் நிஜமாகவே லஞ்சம் வாங்கப் போவதாக நினைத்து அப்பா என்னைக் கண்டபடி தூஷித்தார். என்னுடன் நான்கைந்து நாட்களாகப் பேசக்கூட இல்லை. சுவர்களுக்குக் கூடக் காது உண்டே. நம் திட்டம் துளியளவு அவனுக்குத் தெரிந்து விட்டால் கூட அவன் நம் வலையில் சிக்க மாட்டானே என்று, நான் வீட்டில் ஒரு பெரிய நாடகமே நடிக்க வேண்டியிருந்தது" என்றான் சிவசங்கரன்.

"நேர்மை உங்கள் மகனின் ரத்தத்தில் ஊறி யிருக்கிறது. அவன் ஒருகாலும் தப்பு வழியில் போக மாட்டான்" என்று சொல்லி விட்டுச் சுங்க இலாகா அதிகாரி பெரியவரிடம் விடைபெற்றுக் கொண்ட போது பெரியவரின் கண்களில் ஓர் அலாதிப் பிரகாசம் தோன்றியது!

வட்ட மேஜை

இலவசத் தொல்லை

ஒவ்வோர் ஊரிலும் அரசாங்கத்தின் மேல் மட்ட அதிகாரிகளிலிருந்து கீழ்மட்ட அதிகாரிகள் வரை திரைப்படம் பார்க்க இலவசமாக நுழையும் நிலைமை பொறுமைக்கு மீறியதாக இருக்கிறது. ஒவ்வொரு டிக்கட்டுக்கு வரியும், அதற்கான உபரி வரியும் காட்சி வரியும், செய்திச் சுருள் வரியும் இப்படியாகப் பெரும் வரியைச் சுமந்து வேதனைப் படும் திரைப்படக் கொட்டகைக்காரர்களுக்கும், பல லட்சங்களைச் செலவழித்து வரியைக் கொட்டிக் கொடுத்துப் படங்களை விலைக்கு வாங்கி வெளியிடும் விநியோகஸ்தர்களுக்கும் மேற்படி அதிகாரிகளின் இலவசத் தொல்லை சங்கடம் ஏற்படுத்தி விடுகிறது.

கூட்டம் மிகுந்த முதல் நாள் முதல் காட்சியிலிருந்து தொடர்ந்து சில அதிகாரிகள் ஏழெட்டுப் பேர்களோடு வந்துவிடுகின்றனர். அவர்களை 'ஓசி'யாக அனுமதிக்கக் கொட்டகை அதிபர்களோ அன்றிப் படப் பிரதிநிதிகளோ மறுத்துவிட்டால் அந்தக் கொட்டகை நடத்த இயலாத அளவுக்கோ நஷ்டமேற்படும் நிலைமைக்கோ ஆளாக்கி விடுகிறார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ராஜபாளையத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் திரு காமராசர் பேசும்போது ''நாடகம், சினிமா, சர்க்கஸ் கொட்டகையில் முதல் வகுப்பில் உட்கார்ந்திருப்பது பெரும்பகுதி அதிகாரிகள்—அதுவும் ஓசியில்'' என்று குறிப்பிட்டார். இதற்கு அரசு ஒரு வழிவகை காண வேண்டும். மேற்படி அதிகாரிகள் பணம் கொடுத்துப் படம் பார்ப்பதால் எந்த இழுக்கும் வந்து விடாது. பொறுப்புணர்வார்களா?

பரமக்குடி கமலா மணாளன்
26—5—64 திரைப்படப் பிரதிநிதி

புறக்கணிக்கலாமா?

கிராம உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் பற்றிப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போதெல்லாம் மந்திரிகள் எங்களைப் 'பகுதி நேர ஊழியர்கள்' என்றும் 'கௌரவ உத்தியோகஸ்தர்கள்' என்றும் கூறி மழுப்பி விடுகிறார்கள். சமீபத்தில் ஒரு பொறுப்புள்ள மந்திரி கிராம உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகளுக்குப் பதில் கூறும் முறையில், ''நாடும் மக்களும் முன்னேறுவதைப் பார்த்து உங்கள் சமூகத்தினர் திருப்தி அடைய வேண்டும். பெருமை கொள்ள வேண்டும்'' என்றாராம். அதற்கு எங்கள் பதில்: ''நாடு முன்னேறுவதில் எங்களை விட அக்கறை வேறு யாருக்கும் கிடையாது. எங்கள் பணிகளை ஒழுங்காகச் செய்வதாலேயே நீங்கள் போடும் திட்டங்களை இந்த அளவுக்காவது நிறைவேற்ற முடிகின்றது'' என்பதுதான்.

ஒருசில ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட நாங்கள் வசூல் செய்யும் வரி கிட்டத்தட்ட இரண்டு மடங்கு. நாங்கள் வைத்து வரும் ரிக்கார்டுகள் பன்மடங்கு. நாங்கள் வேலை செய்யும் நேரம் பன்மடங்கு. சமீபத்தில் நிலவரி அதிகரிப்பால் வசூல் விஷயமாக நாங்கள் பொதுஜனங்களிடம் பெற்று வந்த மதிப்பைப் பெரிதும் இழந்திருக்கிறோம். இந்நிலையில் எங்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க மறுப்பது நியாயமா? எங்கள் வயிற்றில் மண்ணடிப்பதைப் பொறுக்காமல் தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் அனைவரும் கடந்த ஏப்ரல் மாதம் 15ந் தேதி தங்கள் ராஜிநாமாவைக் கொடுத்துள்ளனர். இது விஷயமாகச் சர்க்கார் இன்னும் ஒரு நல்ல முடிவுக்கு வரவில்லை.

அம்பாசமுத்திரம் எல். ராமகிருஷ்ணன்
8—5—64 கிராம முன்சீப்
அயன்திருவாலீஸ்வரம்

நீரோட்டம்

"நீரோட்டம்" கதை ஆரம்பத்திலிருந்து இறுதிவரையில் ஒரே மாதிரி விறுவிறுப்பில் ஓடித் தனிச் சிறப்பை அளிக்கிறது.

சிக்கந்திராபாத்
12—6—64 ஜி. நளினி

குறுகிய காலத்தில் முடிந்த 'நீரோட்டம்' அருந்தமிழ்ப் பண்பாட்டுக்கொப்ப, பல சுழல்களிலும் சுழன்று தெளிந்து புனிதம் கெடாமல் தெளிந்த நீரோடையாகத் திகழ்கிறது. ஆசிரியை எஸ். ரங்கநாயகி அவர்களுக்கும் ஓவியர் வினு அவர்களுக்கும் பாராட்டுக்கள்.

மாமல்லை
10-6-64 ஜே. நடராஜன்

எஸ். ரங்கநாயகி எழுதின 'நீரோட்டம்' சமூகத்தில் முதல் இடம் வகிக்கும் ஒரு முன்னேற்றமான அமிர்தம்.

கொழும்பு
11—6—64 எஸ். இராசநாயகம்

தொடர்கதைச் சம்பவங்களை வளர்த்தாமல் சுருக்கமாகக் கூறும் இவரைப் போன்று நான் இதுவரை கண்டதில்லை.

உள்ளிக்கோட்டை
11—6—64 ஜி. கோவிந்தராஜன்

மேடு பள்ளமான இடங்களிலும் சமமாகப் பரவிச் செல்லும் நீரோட்டமாக யசோதை ராஜு, தியாகு, சசிலா போன்ற பாத்திரங்களைச் சிருஷ்டித்துள்ளார்.

சென்னை
12—6—64 ஸ்ரீமதி லக்ஷ்மிகாந்தன்

''நீரோட்டம்'' அழகாகவும் பொருத்தமாகவும் முடிந்திருக்கிறது. யசோதை, சசிலா, கீதா போன்ற பெண்களும், தியாகு ராஜு, மூர்த்தி போன்ற ஆண்களும் நடமாடிய இந்த நாவலில் காதல், கடமை, தியாகம், அன்பு, நட்பு, உண்மை, பாசம் எல்லாவற்றுக்கும் இடம் இருந்தன. ஆசிரியை ஸ்ரீமதி எஸ். ரங்கநாயகி அவர்களுக்கு மனப்பூர்வமான பாராட்டுதல்கள்.

பவானி
11—6—64 க. ரவீந்திரன்

துக்கடா

யூனானைச் சேர்ந்த தத்துவ ஞானியான சாக்ரடீஸ் மரண தண்டனை பெற்றுச் சிறைக் கூடத்தில் இருந்தார். அப்பொழுது அவருடைய அன்புக்கன்பான சீடனான கிரீடா அவரை அணுகி, ''நீங்கள் சிறையிலிருந்து வெளியேறி ஓடி விடுங்கள். வெளியே எல்லா விதமான ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறோம். நீங்கள் வெளிநாடு ஏதாவது ஒன்றுக்குச் சென்று விடுங்கள். நான் என் வாழ்நாளில் சம்பாதித்துள்ள பணம் முழுவதையும் தங்கள் அடிகளில் சமர்ப்பித்து விடுகிறேன்!'' என்றான்.

அதற்குச் சாக்ரடீஸ் கம்பீரமான குரலில் சொன்ன பதில்: ''இது சிறிதும் நியாயமான செய்கையல்ல. நான் இதை ஏற்க முடியாது. நான் பிறந்த நாடு இது. என் தாய் தந்தையர் வாழ்ந்த நாடு இது. இந்த நாட்டின் உணவை அருந்தி, நீரைப் பருகி நான் வளர்ந்திருக்கிறேன். இந்த நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நான் சாகவும் தயார். பிற நாட்டுக்குச் சென்று ஓடி ஒளிந்து கொண்டு சொர்க்கபோகம் அநுபவிக்க நான் சிறிதும் விரும்பேன்!''

ஃ ஃ ஃ

நான் பொய் சொல்வதைப் பற்றி அவ்வளவாக ட்சியம் செய்வதில்லை. ஆனால் விஷயங்களைத் தவறாகக் கூறுவதை வெறுக்கிறேன்.
—ஸாமுவேல் பட்லர்

ஃ ஃ ஃ

ஓர் ஆறாவது வகுப்புப் பையன் கிரிக்கெட்டைப் பற்றி எழுதிய மிகச் சிறந்த சிறுகதைக்கு முதற்பரிசு பெற்றான். அந்தக் கதையாவது :

மழை பெய்தது: ஆட்டமில்லை.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தும் அமெரிக்காவும் ஒரே மொழியால் பிரிக்கப்பட்டிருக்கும் இரண்டு தனித் தேசங்கள்.
— பெர்னார்டு ஷா

ஃ ஃ ஃ

குழந்தைகள் சிறுவர்களாயிருக்கும் போது தங்கள் பெற்றோர்களிடம் அன்புடன் இருக்கிறார்கள்; பெரியவர்களாகும்போது பெற்றோர்கள் செய்வது சரியா, தப்பா என்று தீர்மானிக்கிறார்கள்; சில சமயம் அவர்களை மன்னித்தும் விடுகிறார்கள்.
—ஆஸ்கார் ஒயில்ட்

ஃ ஃ ஃ

'அதிர்ஷ்டம்' என்பதில் எனக்கு அபார நம்பிக்கை உண்டு. நான் எத்தனைக்கெத்தனை கடுமையாக உழைக்கிறேனோ, அத்தனைக் கத்தனை அது எனக்கு அதிகம் 'அடிக்கிறது!'
—ஸ்டீபன் லீகாக்

பொக்கைவாய் மொழிகள்

- சாமா -

வயசாகி விட்டது. ஞாபக சக்தியே குறைந்து போயிடுத்துன்னு நம் நண்பர்கள், பொக்கை வாய்கள் புலம்பிக் கொண்டேயிருக்கின்றனர். ஞாபக சக்தி ஒழுங்காக இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து வந்து விட்டோம்? கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் ஞாபகமாக மறந்தோம். நாம் பிறருக்குக் கொடுத்த பணத்தை மறக்காமல் பல வருடங்கள் ஆகியும் அவரிடமிருந்து கறந்தோம்.

ஒரு சமயம் நானும் என் நண்பரும் கோடைக் கானலுக்குப் போயிருந்தோம். எங்களுக்குப் பின்னால் வந்த ஹிட்லர் மீசைக்காரர் என் நண்பர் மோகனைத் தனியே அழைத்துச் சென்றார்.

கொஞ்ச நேரம் அவர்கள் ஏதோ சாம தானமாகப் பேசிய மாதிரி தோன்றியது. அப்புறம், ''நீ கொடுத்தது உண்மை. ஆனால்நான் திருப்பிக் கொடுத்து விட்டேனே'' என்றார்.

''நன்றாக ஞாபகப்படுத்திப் பார் !''

''1954ல் நீ சோளிங்கபுரம் வந்து பர்ஸ் களவாடிப் போச்சுன்னு கஷ்டப்பட்ட போது நான் சமயத்தில் வந்து நீ எனக்குக் கைமாத்தாகக் கொடுத்தநூறு ரூபாயைக் கொடுத்தேன்.''

''சோளிங்கபுரமா? நானா? சுத்தப் பொய்!''

இப்படியே சண்டை முற்றியது. என்நண்பர் மோகன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தது உண்மை. 'போனால் போகிறது. மீண்டும் ஒரு முறை கொடுத்துத் தொலையேன்' என்று என் நண்பரிடம் ரகசியமாகச் சொன்னேன்! மோகனுக்குக் கோபம் வந்து விட்டது..... 'இப்ப கொடுத்தால் இன்னும் பல முறை அவன் கேட்பான். அவன் ஞாபகசக்தி போனவன். அவன் கிடக்கிறான் வா!' என்றான் மோகன். இதே மோகனின் ஞாபக சக்தி என்ன ஆச்சு தெரியுமா? ஒரு நகைக் கடையில் கடனுக்கு ஐந்நூறுக்கு நகை வாங்கி விட்டுப் பல வருஷங்கள் கொடுக்க முடியாமல் கடைசியில் கொடுத்து விட்டானே. ஆனால் அந்தப் பக்கம் போகும்போது குடையைப் பிரித்துத் தன்னை மூடிக் கொண்டான். இதைப் பார்த்த கடைக்காரர், '' ஓய்! நீங்க என் கடனைத் திருப்பிக் கொடுத்தாச்சு. இன்னும் மறைவானேன்?'' என்றார்.



ஆனால் மோகனோ, 'சுத்த அசடு. இவன் நகைக் கடை வைத்து வாழ்ந்தாற் போலத்தான்! மறந்து போய் நான் பணம் கொடுத்து விட்டதாகவே நினைச்சுட்டானே!' என்றான்.

அதனாலே ஞாபக சக்தி இருக்கிறதும் தப்பாயிருக்கு. போகிறதும் தப்பாயிருக்கு. இது இரண்டையும் கட்டிண்டு நாம் எப்படிக் காலம் தள்ளுவது?

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

விருந்தினர்கள் வரும் வேளை — சரஸாவுக்கு ஒரே தலைவலி!



ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, ஜுரம் வரும்போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். ஸாரிடான் உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணி. எப்பொழுதும் வீட்டில் ஸாரிடான் வைத்திருங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்: குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.

ஒரே ஒரு வில்லை

ஸாரிடான் 'ரோஷ்'

வலியைப் போக்குகிறது.
ஆசுவாசப்படுத்துகிறது.
புத்துணர்ச்சி யூட்டுகிறது

ஒரே வில்லை ஸாரிடான் போதும்
ஒரு வில்லை 13 நயா பைசா

'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

JWT/VT-1046 a

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

